பிஸ்மில்லாஹி

# செய்யிதத்துப்படைப்போர்
# வசன காவியம்

இது

பாண்டி மண்டலம், செவ்வல்மாநகரம்
மஹாவித்துவானும்
கஜானத்துல் கறுமாத்து
இராஜநாயக வசனம் முதலிய
பலகிரந்தக் கர்த்தாவுமாகிய

**ஸ்ரீலஸ்ரீ எம். ஏ. நெயினார் முகம்மதுப்**
**பாவலரவர்களால்**

இயற்றப்பட்டு

எம். ஏ. ஷாகுல் ஹமீது லெப்பையவர்களால்
தமது
ஷாகுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது

1914

Registered copy-right] [விலை: 12 அணா

# அத்தியாய நாமாவலி அட்டவணை

1. ஹம்து ஸலவாத்து ஸ்லாம்.
2. சரித்திரம் வந்தவழி.
3. அஸ்மத்திபுனு நுஹிதாவின் பரிதாப முறைப்பாடு.
4. முர்றத்திபுனு இஸ்லான் வருதல்.
அப்துர்றகுமானுக்குக் கடிதங்கொண்டு போகுதல்.
5. அப்துர்றகுமானும் செய்தத்தும் மதீனம் புறப்படுதல்.
6. அப்துர்றகுமான் செய்த ஹய்பிராத்து யுத்தம்.
பயங்கரமான சண்டை.
7. றசூலுல்லாவுக்கு ஒஹி வருதல்.
8. செய்தத்தம்மாள் யுத்தத்துக்குப் போகுதல்.
அபாசுபியான் படைக்களம் வருதல்.
9. அலியும், ஆமிறும், சுபைதும், மிகுதாறும் வருதல்.
யுத்தமுனை அத்தநாசமடைதல்.
10. றசூலுல்லா படைகொண்டு வருதல்.
ராஜதானிபட்டணம் பிடிபடுதல்.
11. ஜயசீலர் மதீனம் போகுதல்.
12. அப்துர்றகுமான் ஏகாதிபத்தியம் பெற்றது.

அட்டவணை

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

# ஹம்து, ஸலவாத்து, ஸலாம்

புகழென்ற புகழடங்கலும் “குன்த கன்ஸன்மக்பிதாத்து” என்னும் புதையற் பொருளாக இருந்த நாட்டம் என்கின்ற அதீதமானது, பின்னர் வெளிரூபத்தில் காண்பிவிக்கும் பொருட்டாக “அமா” என்னும் இருட்டறையிலிருந்து உஜூது என்கின்ற ஒளியின் வடிவமாக வெளியாகி அக்கினி மண்டலத்தில் நின்றும் மற்ற நான்கு பூதங்களாகப் பிரிந்து, அவ்வப் பூதகிருத்திய குணாகுணங்களுடன் ஆலத்தளவில் வந்து, தன்னுடைய கோலத்தில்நின்றும் அண்டாதி புவன சராசர ஜீவகோடிகளையும் வெளியாக்கி அவைகளுக்குள்ளும், புறமும் சங்கிலித்தொடர்போல் கொளுவிக்கொண்டிருந்து வருகின்றானே! அப்பேர்ப்பட்ட வல்லமைக் கருத்தாவாகிய ;அல்லாஹு ஜல்ல ஜலாலஹு என்னும் றகுமானுக்கே உரியன.

ஸலவாத்தும், ஸலாமும் முட்டை வடிவமாகத் தண்ணீரின் பேரில் விரித்துக் கிடத்தாட்டி இருக்கின்ற இந்தப் பெரிய உலகத்தை உண்டுபண்ணுவதற்கும், ஜீவகோடிகளை விருஷ்டிப்பதற்கும் மூலகாரணக் கருவியாகிய “நூறுல் முகம்மதியா” என்னும் தெய்வ ஜோதிமயமாக ஆதியில் உற்பத்தியாகி, அப்பால் உலக அவதாரத்தின் பொருட்டாக, ஜனகோடிகளை நேர்வழியில் நடத்தாட்டிய ஆயன்களான இலட்சத்து இருபத்துநான்காயிரம் தீர்க்கதரிசிகளென்னும் நபிமார்களுக்கும், முன்னூற்றுப் பதின்மூன்று முறுஸலான நபிமார்களுக்கும், கனந்தங்கிய றசூல்மார்களுக்கும் கடைசி முத்திராங்கக் கர்த்தாவாக இப்பூமியின் முகத்தில் மனுஷாவதாரங் கொண்டுவந்த நமது ஜகத் சற்குரு நாயகம் முகம்மது முஸ்தபா, அகுமதன் முர்த்தலா, காத்திமுல் முறுஸலீன் ஷபீஉல் முதுனபீன் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் மீதிலும், அவர்களின் அத்தியந்த தோழர்களான குலபா உர்ருஷிதீன், அஷரத்துல் முபஷ்ஷிரீன் முதலான ஆல்கள் அஸ்ஸாபுகளின் மீதிலும், இன்னும் அவர்களின் சங்கைபெற்ற மனைவிகளான நம் பிராட்டிமார்களின் மீதிலும், அஹ்லுல்பைத்துகள் முதலிய அவர்களின் கோத்திரத்தார்கள்மீதிலுட் உண்டாவதாகவும். ஆமீன். இவ்விதம் மகா மாட்சிமைதங்கிய ஹம்தும்; ஸலவாத்தும், ஸலாமும் சொல்லியதின் பிறகு நமது வள்ளலாகிய நபிகள் நாயகமவர்களின் அன்புள்ள மைத்துனரும், ஹலரத்து, அமீறுல்

முஉமினீன் அபாபக்கர் ஸித்திக்கு றலியல்லாஹு அன்கு அவர்களின் புத்திருமாகிய செய்யிதினா அப்துர்றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள் சிறு பருவத்திலிருந்து ஒரு குபிரியத்தான அரசனிடத்தில் வளர்ந்துவாலிபமாகி அவனுடையமகளாகிய செய்தத்தம்மாளவர்களை யும் கல்யாணஞ் செய்து, அப்பால் மதினமாநகரத்திற்கு வந்த சங்கதி கள் முதலானவைகளைச் செய்தத்துப்படைப்போர் என்னும் பழைய தோர் காவியத்தில் நின்றும் வசனஞ் செய்யத் தொடங்குகிறேன்.

ஹம்து, ஸலவாத்து, ஸலாம்

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

# செய்யிதத்துப்படைப்போர் வசன காவியம்

## 1-ம் அத்தியாயம்

### சரித்திரம் வந்தவழி

உலக கோடிகள் எல்லாவற்றையும், சிருஷ்டித்துக் காப்பாற்றுகின்ற பரிபூரண மெய்க்கடவுளாகிய அல்லாகுத் தஆலாவின் திருத்தூதராக வந்த நமது வள்ளலாகிய ஜகத்சற்குரு முகம்மது முஸ்தபா, அகுமது முர்தலா, ஷபீஉல் முதுனபீன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்தப் பூலோகத்துக்கு நேர்வழி காட்டும்படியாக அநேக சிறப்பும், செல்வாக்கும் பொருந்திய திருமக்கமாநகரத்தில் மநுஷாவதாரங்கொண்டு அவதரித்த காலத்தில் ஹிஜாஸ் மாகாணத்தில் பூர்வீக அறபிக்கோத்திரத்தில் * "அபாசுபியான்" என்று ஒரு விக்ரஹ ஆராதனைக்காரன் இருந்தான். அவனே! சண்டைத்தொழிலில் நிரம்பவும் தேர்ச்சியடைந்து, அநேக யுத்தக்களங்களில் பேரெடுத்தவனுனதும் அல்லாமல் தான் உலகத்தில் இராஜனென்கிற பெயரையும் வாங்கவேண்டும் என்கிற ஆசையுள்ளவனாகி அதற்குரிய எத்தனங்களைச் சேகரஞ்செய்யத் தயாராகினான். எப்படியானல்:—

"தேகபலத்தில் சுத்த வீரியத்தனம் படைத்து, போர்க்களங்களில் நின்று யுத்தஞ்செய்வதிலும், பட்டணங்களைக் கொள்ளையடிப்பதிலும் பிரியமுள்ளவர்கள் யாவரும் என் கொடியின் கீழ் வந்து சேர்ந்துகொள்ளலாம்" என்று விளம்பரம் செய்து சிறிது காலத்திற்குள்ளாக ஏராளமான சேனைகளையும், அவைகளுக்குரிய வாகனதிகள் தளவாடங்களையும் சேகரித்துக்கொண்டு அறபியா

* இந்த அபாசுபியான் பதுறுமலையில் நடந்த யுத்தத்தில் ஷாம்தேசத்திலிருந்துகொண்டு வந்த திரவிய முதலியவைகளை அஸ்ஹாபிமார்களிடம் கொள்ளைகொடுத்து விட்டோடிப்போன அந்த அபாசுபியான் அல்ல.

வில் உள்ள சில சிற்றரசர்களைத் திடுகூறாய்ப்போய் விழுந்து தாக்கி வெற்றியடைந்து அவர்கள் ராஜநகரங்களையும் சூறையாடிக்கொண்டதின் பேரில் அவன் தகுதியுள்ள ஒரு பெரிய அரசனாகி ஹிஜாஸ்கட்டில் மகாப்பேர் போனதும், நதிவளம் நாட்டு வளங்களில் இணையில்லாததுமான ஜபலுஸ்ஸுபியான் என்கின்ற பிரமாண்டமான மலையைத் தனக்கு இருப்பிடமாக்கி அந்த மலையின்மேல் அநேக வரிசை வரிசையான கோட்டை கொத்தளங்களும், அகழிகளும் அமைத்து, உள்ளே சுமார் இருபத்தைந்து மைல் விஸ்தீரணத்திற்கு ஒரு பட்டணமும் கட்டினான். அவ்விதங்கட்டின அந்தப் பட்டணத்திற்கு 'ஜன்னத்துர்ஜிலா, அதாவது பூலோக சுவர்க்கம்' என்று பெயரும் இட்டான். இவ்விதம் தகுதிபொருந்திய அந்த நேர்வழியில்லாத சூரியாட்டத்தையுடைய திருட்டு அரசனாகிய அபாசுபியான் என்பவன் அடிக்கடித் தன் பலாட்டிய சேனைகளுடன் புறப்பட்டுப்போய் உலகத்தில்நாலா திசைகளிலும் மகுடமன்னர்களுடன் யுத்தஞ்செய்து வெற்றி பெற்றதினால் எகிப்து தேசத்தில் இருந்து இரத்தினக் கம்பளங்களும், பரமதானிகளும், பாரிஸ்கட்டில் இருந்து பொன் வெள்ளி வைராசிகளும், மக்மல்பட்டுதினுசுகளும், எமன், ஷீராஜி, மக்றிபு, சீரியா, பலஸ்தீனா முதலிய ராஜியங்களிலிருந்து சித்திர விசித்திர விமானங்களான பளிங்குக்கற்களும், சங்கமர்கற்களும், கட்டடசாமான்களும், மரவட சாமான்களும், பொன் வெள்ளிப் பாத்திரங்களும், கொள்ளையாடிக்கொண்டு வந்து தன் ராஜநகரத்தை அலங்கரித்தான். ஒருபோது தன் ராஜதானியில் ஒரு விக்ரஹத்திரு விழாவை ஏற்படுத்தி நகரத்தை வீதிவீதியாய் விளக்குகளாலும், தழைகுழை தோரணங்களாலும், யுத்தக்கொடிகளாலும்அலங்காரஞ் செய்து உல்லாசமான ஒரு தங்கரதத்தில் வீற்றிருந்து பவனிவரும் போது தனக்கு முன்னும் பின்னும் ஆர்ப்பரிப்புடன் கூடிய ஜனக் கூட்டத்தை நோக்கி "கருங்கற் பாறையாய்க் கிடந்த இந்த மலையை நான் வெண்கற்பளிங்குமயமாக ஆக்கிவிட்டேன்" என்று பெருமை பாராட்டினனாம்.

முடிவாகச் சொல்லுங்காலத்தில் அந்த அபாசுபியான் என்பவன் தன் ராஜநகரத்திற்கு "பூலோக சுவர்க்கம்" என்று பெயரிட்டதற்கு இணங்க அதில் நீண்ட வரிசைகளில் ஆயிரக்கணக்கான வீதி

களைப் பளிங்குமாடங்களாலும், மாளிகைஉப்பரிக்கைகளாலும்உயர்த்திக் கட்டினதுமல்லாமல் தன் சபா ஆஸ்தான கொலுமண்டபத்தைப் பொன்களாலும், நவரத்தின கஜிதங்களாலும் எழுப்பியிருந்தான். கோட்டை வரிசையைச் சூழ யுத்த சிலம்பக்கூடங்களையும், சூரர்மண்டபங்களையும் அமைத்து அவைகளைச் சூழத் தன் சேனாதிபதிகளுக்குப்பங்களாக்களும், தோட்டங்களும் அமைத்து நாலாபக்கங்களிலும் தகுதியான காவல் சேனைகளை வைத்தான். தன் பட்டணத்துப் பிரஜைகள் திருவிழாநாள்களில் வேடிக்கைகள் பார்க்கும்படியான நான்காயிரம் வேடிக்கை சாலைகளைக் கட்டி வினோத வினோதமான விளையாட்டுக்கருவிகளை அமைத்துவைத்தான். அன்றியும் தன் மலைக்குக்கீழுள்ள பட்டணத்து ஜனங்கள் வந்து போகும்படியாக நாலாபுறத்திலும் கோட்டைவாசல்களும் திறந்து மலையைச் சூழ வளைந்தோடுகின்ற ஜலவாசியின்மேல் அநேக பாலங்களையும் கட்டி அந்தப் பாலங்களுக்கும் தான் இருக்கும் மலைக்கும் இடையில் சித்திரநாகாசி வேலைகள் செய்ததுமன்றி அநேக அடுக்குள்ள வெண்கலப்படிக்கட்டுகளும் கட்டியிருந்தான். அந்தக்காலத்தில் மக்ரிபுகட்டிலும் ஹிஜாஸ்கட்டிலும் உள்ள அநேகஞ் செல்வாக்குள்ள மாகாணங்களெல்லாம் அவனுடைய கொடுங்கோல் அரசாட்சியின் கீழ் அடங்கி இருந்தன. அன்றியும் பதவிகள் என்கிற அறபித்திருடர் கூட்டங்களெல்லாம் அவனுக்கு ரகசிய சேனைகளாகவும், கொள்ளையாடும் பொருட்களில் அவனுக்குப் பங்கு கொடுக்கிறவர்களாகவும் இருந்தார்கள்.

இவ்வளவு வல்லமைசாலியாகிய அந்த அரசனுக்கு வெகுகாலம் புத்திரசம்பத்தில்லாமல் எத்தனையோ ஸ்திரிகளை விவாஹம் பண்ணிப்பார்த்தான். ஒன்றிலும் சப்பரம் பலியவில்லை. அதற்காக அவன் எடுக்காத பிரயத்தனங்களெல்லாம் எடுத்துக் கடைசியாக மனதில் நாம் இந்த உலகத்தில் உள்ள மகுடாதிபதிகளெல்லாம் நடுநடுங்கக்கூடிய பராக்ரம அரசனாக இருந்து இவ்வளவு நாடு நகரங்களையும் ஆண்டுகொண்டிருந்து கடைசியில் அவைகளை விருதாவில் விட்டுவிட வேண்டியதல்லோ வந்து நேரிடுகின்றது. இதற்கென்ன செய்கின்றது. எந்தத் தேசத்திலாவது நமது அறபியர் கோத்திரத்தில் உள்ள நல்ல சவுந்திரியகாமுடைய ஒரு ஆண்குழந்தை அகப்படுமா

பட்சத்தில் அதைக்கொண்டுவந்து வளர்த்து இந்த ராஜரீகத்தை அதற்கு ஒப்பிவிக்கவேண்டும். இதுவே சரியான யோசனை என்று தீர்மானஞ்செய்து அதற்கேற்ற குழந்தைகளைத் தன்ராஜ நகரியிலும், இன்னும் தன் செங்கோலின் கீழிருக்கின்ற நாடுநகரங்களிலுந்தேடத் தொடங்கினன். ஒன்றும் அவனுடைய கொடிய மனதிற்குச் சரிவரவில்லை. இப்படியிருக்கும்போது, அந்தக்காலத்தில் புத்தமதத் திருவிழாக்களில் நிரம்பவும் பேர்பிரபல்யம் பொருந்தியதான திருமக்கமாநகரத்தில் முன்னூற்றறுபது விக்ரஹ திருவிழா நாள் வந்தது. அந்தத்திருவிழாவுக்கென்று அபாசுபியான் என்கிற அரசன், அநேக காணிக்கை முதல்களும், பலிகளுக்கென்று அனேக ஆயிரக்கணக்கான ஒட்டகம், ஆடுமாடுகளும் திரட்டிக்கொண்டு தன் மனைவியார்களுடனும், பலாட்டியம் பொருந்திய ஒரு சதுரங்கச்சேனையுடனும் புறப்பட்டு மக்காநகரத்திற்குள்ளே வந்தான். வந்த அபாசுபியான் அரசன் தன் வழக்கம்போல மக்கத்தில் உள்ள யுத்த தலைவர்களையும், ஹாஷிம் குலத்தில் உள்ளசங்கைமான்களையும் போய் சந்தித்து அவரவர்களுக்குச் சேரவேண்டிய காணிக்கைநிதிகளையும் கொடுத்து, அப்பால் கஉபாவென்னும் தேவாலயத்தில் செய்யவேண்டிய பலிமுதலிய சடங்குகள் யாவற்றும்செய்துமுடித்து பிரயாணப்பட்டவனாகப் பட்டணத்தின் பிரதான வீதியின் வழியாகத் தன் பஞ்சகல்யாணியை நடத்திக்கொண்டு உல்லாச சம்பிரமனாக வந்தான். மற்றப் பரிவாரங்களெல்லாம் அவன் பிறகே வந்துகொண்டிருந்தது. இப்படியாக அபாசுபியான் ஹலரத்து அமீறுல்முஉமினீன் அபாபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கு அவர்களின் மாளிகையின் முன் முகப்பில் வந்தான். அங்கே ஹலரத்து அமீறுல்முஉமினீன் அவர்களின் தலைக்குமாரர் அமீர் அப்துர் றகுமான் என்கிறவர்கள் சிறு குழந்தையாக நின்று விளையாடிக்கொண்டிருந்தார்கள். வீட்டில் உள்ள பணிவிடைக்காரர் எல்லாம் திருவிழா நாளானபடியாலே கஉபாவிலும் அதைச்சேர்ந்த வேடிக்கை மண்டபங்களிலும் போய் வேடிக்கைப்பார்க்கும் பராக்கில் இருந்தார்கள். வாசலில் நின்றுவிளையாடிக் கொண்டிருந்த அப்துர் றகுமான் என்கின்ற குழந்தையை அபாசுபியான் கண்ணினல் கண்டவுடனே குழந்தையின் வீர உக்கிர முகக்குறிகளும், நீள ஆழமான வடிவமும், முகலட்சணமும் அவன்

இருதயத்தைக் கலங்கச் செய்திற்று. அப்பவே அபாசுபியான் தன் மனதில் நாம் உலகமெல்லாம் தேடி தவமிருந்த சிரோமணியான பொருளானது இந்தத் திவ்ய ஸ்தலமான மக்கத்தில் வந்து நமக்குக் கிடைத்துக்கொண்டது. இந்த கஉபாவென்னும் தேவாலயத்தில் இருந்து நம்மையாளுகின்ற குபல் என்னும் தம்பிரானாகிய தேவதைகளுக்கு நாம் கொண்டுவந்து சமர்ப்பித்த காணிக்கைகளும், பலிகளும் தகுமே தகும்! என்று நாலாபக்கங்களிலும் ஜனசந்தடியில்லாதிருப்பதைப் பார்த்து சலேரென்று குதிரையை விட்டுக் கீழிறங்கி வந்து பொன்விதானத்தில் இருந்த ஆணிமுத்தைக் கள்ளப்பருந்து அடித்துக்கொண்டு போனதுபோல ஹலரத்து அபாபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்களின் செல்வக்குமாரரான அமீர் அப்துர் றகுமான் என்னும் குழந்தையை அபாசுபியான் தூக்கி முத்தி மார்போடும் வைத்து ஏந்தியணைத்துக்கொண்டு சிங்கம் பாய்வதுபோலத் தன் பஞ்சகல்யாணியின்மேல் பாய்ந்தேறி அதிக அக்கினி வேகத்துடன் நடத்திக்கொண்டு காடு வனம் வனாந்திரங்களையும்கடந்து தன் ராஜதானி இருக்கின்ற ஜபலுஸ்ஸுபியான் என்னும் மலைமேலேறி பட்டணத்தின் உள்ளே கொண்டுபோய் வைத்துக் கொண்டான்.

குறைஷிக்கோத்திரத்தில் மகா சங்கையும், வலுப்பமும் உள்ள கோத்திரத்திலுள்ள குழந்தையானது நம்மிடம் அகப்பட்டுக்கொண்டது. இதுவே நமக்குப் போதுமான பொருளென்று கண்டு இராவொரு செல்வம் பகலொரு செல்வமாக அந்தக் குழந்தையை வளர்த்து அன்பு பாராட்டி வந்தான். இதற்கிடையில் அப்துர் றகுமான் அவர்களுக்குவயதும்ஏழாயிற்று. அந்தப்பறக்கத்தினால்அரசனுடைய இளைய தாரத்தின் வயிற்றில் கர்ப்பமுண்டாகி அவள் செய்யிதத்தென்னும் பெயருடைய ஒரு யவ்வனமான பெண் குழந்தையைப் பெற்றாள். தனக்குச் சந்ததிபாக்கியமில்லாமல் அநந்தகாலம் தாகித்துக் கொண்டிருந்த அந்த நிர்ப்பாக்கியவாளனாகிய அபாசுபியான் என்னும் அரசன் தன் மனதில் நம் தத்துபுத்திரரான அப்துர் றகுமான் அவர்களின்முகூர்த்தத்தால் ஒரு பெண்சந்ததியைப்பெற்றுக்கொண்டோம் என்று தீர்மானித்து அப்துர் றகுமான் அவர்களின் பேரில் மிகுந்த உட்கிருபையும், பிரியமும் வைத்தவனாக இருந்து தன் இரு

க்ண்களைப்போல் பாவித்து வளர்த்து கல்விமுதல் போர்த்தொழில் மகாத் தேர்ச்சியுள்ள சிலம்பவித்தைகளையும் தானே கற்பித்துக் கொடுத்தான். அப்துர் றகுமான் அவர்கள் சிறு குழந்தைப் பருவத்திலிருந்து அந்தக் குபிரியத்தான அரசன் அண்டையிலிருந்து வளர்ந்துவருவதாலே தன் தாய் தகப்பன்மார்கள் யாரென்றுந் தெரியாதவர்களாக அவனையே தாய் தகப்பன் என்றெண்ணி அவன் செய்துவருகின்ற செயல்களையே செய்து அவன் வணங்கிவருகின்ற விக்ரஹங்களையே படைத்த ஆண்டவனென்றும் வணங்கி வந்தார்கள். இவ்விதமிருந்து வளர்கின்ற அப்துர் றகுமான் அவர்கள் நல்ல வாலிப வயதில் வந்த உடனே சில சம்பவங்களில் அவர்களை மகா பராக்ரம சாலியென்று பரீட்சையுடன் கண்டு தன்னிடமிருக்கின்ற சேனைபதாதிகளுக்கெல்லாம் அதிபதி என்னும் பட்டங்கொடுத்து சில சில அரசர்களிடம் யுத்தம் செய்யவும் அனுப்பினன்.

அந்த யுத்தங்களில் அப்துர் றகுமான் அவர்கள் காட்டின சாமர்த்தியத்தையும், சௌகாரியத்தையும் அவன் நாளடைவிற் கண்டு மனதில் நமக்கு இந்த வாலிபர் ஒரு ராஜசிங்கம்போல் வந்து வாய்த்துக்கொண்டார். இவரே நமது ராஜியபரிபாலன முதலிய யாவற்றுக்கும் சுதந்திரவான் என்று எண்ணித் தன் மகளாகிய செய்யிதத்தை அப்துர் றகுமான் அவர்களுக்கு விவாஹம் பண்ணிக் கொடுத்துத் தன் ராஜியங்களையும் அவர்களிடம் ஒப்பிவித்து இங்கே இளவரசுபட்டமுங் கட்டிவிட்டான். இது சங்கதி இப்படியிருக்க அங்கே மக்கத்தில் ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மாளிகையில் அப்துர் றகுமான் என்கிற குழந்தையைக் காணமல் உலகமெல்லாம் தூதாட்களை விட்டுத் தேடியும் காணக்கிடைக்காமையால் மக்காப்பட்டண முழுமையும் அழுகையும் கண்ணீருமாக இருந்து பிள்ளையளவிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து விசனக்கடலில் முழுகிவிட்டார்கள். அப்பால் ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு அவர்கள் றசூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அல்லாவுடைய றசூலென்று உண்மைகொண்டு இஸ்லாமிலாகி நபிநாயகம் அவர்களுடன் தௌர்மலையில் சிறிது காலமும் மக்காவில் சிறிது காலமும் கூடியிருந்து கடைசியில் நபியவர்களுடன் திருமதினமா நகரத்திற்கு ஜிரத்து என்கிற யாத்

திரை போய் தங்கள் சம்சார ஸஹிதங்களை அங்கேயே தருவித்துக் கொண்டார்கள். இந்தக் குழப்படியில் அமீறுல்முஉமினீன் அவர்களுக்கு முன் காணுமல்போன அருமைப்புத்திரராகிய அப்துர் றகுமான் அவர்களின் பரிதாப எண்ணமானது சிறிது சிறிதாக மாறி விட்டது. இது நிற்க.

இந்த விஷயத்தில் சரித்திர தோரணையைக் கண்டறியாத சில உலமாக்களும், சாமானியப்பட்ட ஜனங்களும் முரண்டாகத் தலையிட்டு வாக்கு வயணமில்லாமல் பிதற்றித் திரிகிருர்கள். எப்படியென்றுல் "இந்தக் காவியத்தை மலையாளம் பூவாற்றார் குஞ்சு மூசுப் புலவர் தகுதியான உரையைக்கொண்டும் பாடவில்லை. ஏனென்றுல் உகுதுப்படைக்களத்தில் அப்துர் றகுமான் அவர்கள் தமது தந்தையுடன் எதிர்த்து யுத்தஞ் செய்திருக்கிருர்களே. அப்படியிருக்க அப்துர் றகுமான் காணுமல்போய் அபாசுபியான் இடம் எப்படியிருந்து பின் இஸ்லாமில் வந்தார்கள் ?" என்று கேள்விகள் கேட்பார்கள். அது இப்படியல்ல. அபூபக்கர் சித்தீக்கு அவர்களுக்குத் தலைப்பிள்ளை ஆயிஷா நாயகம். அதன் பிறகு இரண்டாம் பிள்ளை அப்துர் றகுமான். இவர்களுக்குப் பிறகு இரண்டு ஆண்குழந்தைகளும், ஒரு பெண் குழந்தைகளும் பிறந்தார்கள். அப்துர் றகுமான் அவர்களைக் காணுமல்போன உடனே அடுத்த வருஷங்களில் பிறந்த இரண்டு ஆண்குழந்தைகளில் ஒன்றுக்கு அப்துர் றகுமான் என்பதாகப் பெயரிட்டு அமைத்து முன் பிள்ளையினுடைய ஞாபகத்தை மறத்தாட்டி வந்தார்கள். மற்ருெரு ஆண்பிள்ளைக்கு ஆமிர் என்று பெயர். அதற்கடுத்த கடைசிப்பிள்ளை பெண்குழந்தை. அதற்கு அஸ்மாநாயகி என்று பெயரிட்டார்கள். சீருஉடைய உலமாக்கள் சொல்லியிருக்கின்ற பிரகாரம் உஹ்துமலை யுத்தத்தில் அபாபக்கர் சித்தீக்கு அவர்களுடன் எதிர்த்து நின்றது இரண்டாம் குமாரராகிய அப்துர்றகுமான் என்று மனதில் நிர்ணயப்படுத்திக்கொள்ளவும் இதுதான் அதன் உண்மையான சங்கதியேயன்றி வேறென்றுமல்ல. மலையாளம் குஞ்சுமூசுப் புலவரவர்கள் தமிழில் கரைகடந்த ஒரு சிறந்த பண்டிதரா யிருந்ததுமன்றி அறபுக்கல்வியிலுள்ள நஹ்வு பிக்ஹு களிலும் மகாத்தேர்ச்சியடைந்த ஆலிமாகவும், அல்லாமத்தாகவும், அல்லாவுக்கும், அவனுடைய றசூலுக்கும் உகந்த ஆபிதா

வும், உலகவாழ்விலும் பெரிய இலட்சாதிபதியாகவும், பொய்சொல்லாத நாவையுடைய சிதேவித்தனமுடையவர்களாகவும் இருந்து அவர்கள் ஜீவியகாலத்தில் ஆறு ஹஜ்ஜியாத்திரை செய்து ஏழாவது யாத்திரையில் தன் பூஸ்திதிகளை மார்க்கப்பிரகாரம் ஹக்கு உடையவர்களுக்குப் பிரித்துக்கொடுத்துவிட்டு "நான் இந்த யாத்திரையில் திரும்பிவரமாட்டேன்; மதீனத்தில் எங்கள் நாயகம் நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திவ்விய றௌலா ஷரீபை யடுத்து அடங்கிவிடுவேன்" என்று சகல ஜனங்களுக்கும் போதித்து அவ்விதம் ஏழாவது ஹஜ்ஜைநிறைவேற்றிக்கொண்டு மதீனத்தில் சென்று றசூலுல்லா அவர்களின் சிறப்பான சமாதியருகில் சிலிர்த்த சரீரியாக நின்று ஒரு பதிகம் பாடி முனாஜாத்து தேடினவர்களாக உபாத்தாசி ஜன்னத்துல்பகீ என்னும் திவ்ய ஸ்தலத்தில் அடங்கி விளங்குகின்றார்கள். இத்தனை வரிசையும், சிறப்பும் பொருந்திய நாயகவமர்களா ஆதாரமில்லாத சரித்திரங்களை எடுத்துக் காவியம் பாடுவார்கள்? காவியத்தின் முஹப்பில் சொல்லியபடி ஹலரத்து ஹஸனுல்பசறி றகுமத்துல்லாஹி அலைஹி அவர்களால் செய்துவைத்திருந்த ஒரு புராதனக் கிரந்தத்தில் இருந்தே இந்தக் காவியம் பாடப்பட்டதென்று நமது முஸ்லிமான பிரபுக்கள் யாவரும் சந்தேகந் தெளிந்து இரவுபகலாக இந்தச் சரித்திரத்தை வாசித்து வந்து இம்மை மறுமைகளிலுள்ள சாசனங்களைப் பெற்றுக்கொள்வீர்களாக. ஆமீன்.

சரித்திரம் வந்தவழி

முற்றிற்று.

## 2-ம் அத்தியாயம்

### அஸ்மத்திபுனு நஹிதாவின் பரிதாப முறைப்பாடு

இந்தப் பூலோகத்தில் மகா பலாட்டியந் தங்கிய அறபிக்களில் சிறந்த அதுனன் கோத்திரம் என்கின்ற சமுத்திரத்தில் கிடந்து விளைந்த ஆணிமுத்தென்னும் அப்துல்லா றலியல்லாஹு அன்கு அவர்களின் செல்வப்புத்திர சிகாமணியாகியவர்களும், உலகத்தில் உள்ள ஜனங்களை நேர்வழியின்கண்ணே நடத்தாட்டவேண்டி வேதங்க

ளென்னும் தேவ அத்தாக்ஷிகளுடன் அவதாரங்கொண்டுவந்த ஆயன்களான தீர்க்கதரிசிகளென்னும் றசூல்மார்களுக்கும், நபிமார்களுக்கும் நாயகபதியானவர்களும், இன்னும் அல்லாஹுத்தஆலா ரஹசிய வழியாகவும், பராசியவழியாகவும் அமைத்து வெளிப்படுத்தியிருக்கின்ற பதினான்கு இல்முகளையும் அதற்கு மேலாகிய உம்முல் கிதாபு என்கின்ற தேவரஹியஸானத்தையும் உள்ளும் புறமும் உணர்ந்து தெளிர்ந்தவர்களுமாகிய நமது வள்ளலாகிய இருலோக ஜகத் சற்குரு முகம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் தாங்கள், (தீனுல் இஸ்லகம்) என்னும் நேர்வழி ஞானமார்க்கத்தை விசாலம் பண்ணும்பொருட்டு திருமதினமாநகரில் வீற்றிருந்து அரசாக்ஷி செய்து வருகின்ற காலத்தில் ஒருநாள் மதீனத்தில் உள்ள ஜாமி ஆ மிஸ்ஜிதில் குதுபாவோதி தொழுது முடிந்ததின் பிறகு தங்கள் வழக்கம்போல அஸ்ஹாபிமார்களுக்குக் குர்ஆனில் உள்ள ஞானவிளக்கங்களை யெடுத்து, தேன்மாரி பெய்வதுபோலத் திருவாய்மலர்ந்து பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்த மஸ்ஜிதென்னும் ஞானசபையானது ஒரு சுத்தமான ஆகாயம் போலும், அதில் இருந்து மனஉருக்கத்துடன் கேட்கும் மகா பராக்ரமசாலிகளான அஸ்காபிமார்கள் அங்குப் படர்ந்து பூத்திருக்கின்ற கிரஹஸ்பதிகளான நக்ஷத்திரங்கள்போலும், அதற்கு நடுநாயகமாக வீற்றிருந்து பிரசங்கஞ்செய்கின்ற நபிகள் பெருமானுர் அவர்கள் மங்காது பிரகாசிக்கும் ஒரு பரிபூரண சந்திரன்போலும் அலங்காரமாக விளங்கிற்று.

அந்த உல்லாசமான நேரத்தில் பசித்திருக்கின்ற வேங்கைப் புலியின் வாயில் அகப்பட்டுத் தப்பிய மானைப்போல ஒரு முகவஜிகரமுள்ள அறபியானவர் இரண்டு கண்களிலும் இருந்து வழிகின்ற கண்ணீரானது அவரது முகமென்கிற தாமரைமலரை நனைக்கவும், அவரது பலாட்டியம் பொருந்திய சரீரம் நிரம்பவும் அயர்ந்து மெலிந்தவராகவும், சரீர ஆதிக்கமும் வியர்வை மழைத்துளிபோலோடவும், மனசு உடைந்து பயத்தால் முகவெருட்சி தோன்றவும், இன்னும் புடவைகள் கிழிந்தவராகவும், கையிலும் இடையிலும் வாள் முதலிய கருவிகள் ஒன்றுமில்லாத நிராயுதபாணியாகவும் ஒட்டத்துடன் விரைந்துவந்து நபிகள் நாயகம் அவர்கள் சந்நிதானத்தில் வந்து நபி

யவர்களை நல்ல கூர்ந்து பார்த்து மறுபடியும் ஏங்கி ஏங்கி அழுதவராக யாமுகம்மதா! யாமுகம்மதா!! என்று பரிதாபத்துடனும் கிடுகிடுக்கத் தக்க கனத்த சப்தத்துடனும் கூவி நபியவர்களின் இருபாத தாமரைகளின்மேல் வேறு ஒரு தாமரைமலர் வந்து விழுகின்ற வண்ணமாக அந்த எமன் ராஜியத்தின் அரசர்கிய அறபியானவர் எமனும் புகழ்கின்ற நபியவர்களின் பாதத்தில் முகத்தை வைத்து வாயாலும், கண்களாலும் முத்தி முகந்து மனவியாகுலத்துடன் அழுதவராக எழுந்து அங்கொரு பக்கத்தில் ஒதுங்கி தன் புஜங்களில் அணிந்திருந்த வஸ்திரங்களை ஒதுக்கி தலையை வளைத்துக் குனிந்தவராக நபியவர்களுக்கும், அஸ்ஹாபிமார்களுக்கும் சலாஞ்சொல்லி நின்றார். இந்த அறபியானவர் வந்த கோலத்தையும், அவர் படுகிற பரிதாபத்தையும், நமது வள்ளலான நபிகள் பெருமானார் அவர்கள் கண்டு தாங்கள் இருதயத்தில் நிரம்பவும் வேஷ்டி யடைந்து அவர்மீது அதிகக் கருணையுள்ளவர்களாக அவரை நோக்கி, "ஓ! அருமையான அதபுடைய சங்கைவான்களில் உள்ள அறபியே! நீர் ஏன் இப்படிப்பட்ட துயரங்கொண்ட பரிதாபக் கோலத்துடன் இருக்கின்றீர்! உமக்கு நேரிட்ட ஆபத்து என்ன? நீர் எங்கிருந்து வருகின்றீர்? உமது நகரமும், உமது பெயரும் என்ன? என்னிடஞ் சொல்லும்" என்று தங்கள் முத்துப்போன்ற திவ்ய பற்கள் வரிசையுள்ள மதுர வாய் திறந்து அருளிச்செய்தார்கள். இவ்விதம் நபிநாயகம் அவர்கள் கேட்டவுடன் அந்தத் துயரப்பட்ட அரபியானவர் தன் இடிவுற்ற மனதில் ஓ! நமக்கு அல்லா உடைய றசூலின் ஆதரவு கிடைத்தது. நாம் இனி ஜெயம் பெற்று விடலாம். நாம் நாடியதை நிறைவேற்றி விடலாம் என்று உத்தேசித்து தைரியங்கொண்டு முகத்தில் தெளிவடைந்தவராக நபியவர்களுடன் தமது வரலாற்றைச் சொல்லத் தொடங்கினர். அதாவது:—இது;

"தங்களை அல்லா உடைய றசூலென்று உலகத்தின் ஜனங்கள் கண்டுகொள்ளும்படியாக வானுலகத்தில் உள்ள சந்திரனும், புலி, ஓநாய், ஒட்டகம், முயல், உடும்பு, புள்ளிமான், குதிரை, சர்ப்பம் முதலிய ஜீவாய் மிருகங்களும், ஊர்வனங்களும் வாய்திறந்து சாட்சி சொல்லிய அநந்தங்காரணீகத்தையுடைய நாயகமான வள்ளலே! இந்த அறிவில்லாத எளிய அடிமையானவனின் வரலாற்றைக் கனம்

பொருந்திய தேவரீர் தயவுசெய்து கேட்டருள வேண்டும். என் பெயர் அஸ்மத்திபுனு நஹிதா என்று சொல்வாரகள். நான் பிறந்து வளர்ந்த நகரமானது,

கவிதை. விருத்தம்.

* பூமர நெருங்கி நறவுகொப் பளித்து
புதுவிரை தெருத்தொறு மலியக்
காமர முரலி னிரைத்தலுஞ் சிறந்த
கவின்மயி லாடிய வார்ப்பும்
தாமரைக் கழனி யனத்திர ளொலியுந்
தடவயல் வலம்புரி முழக்கும்
மாமர கதத்தின் வசந்தமண் டபமும்
வளம்பெறும் எமனெனும் பதியே.

இதன் பொருள் இது:—நாலாபக்கங்களிலும் இடைவிடாமல் நெருங்கிய பன்னீர் விருக்ஷங்கள் பூத்துப் பட்டணத்தின் வீதிகள் தோறும் அளவில்லாமல் கமழுகின்ற பரிமளவாடைகளும், இன்னும் அவ்வாசனைமலர்களில் துளிக்கின்ற புதிய தேன் துளிகளைப் பொன்வண்டுகள் உண்டு மகிழ்ச்சியுடன்பாடுகின்ற கீதநாதங்களும், இன்னும் எங்கே பார்த்தாலும் பச்சென்றிருக்கின்ற சோலைநிழலின் கீழ் பசிய ரக்கைகளையுடைய அழகிய மயில் கூட்டங்கள் பிரகாச ஆர்ப்பரிப்புடன் ஆடிநிற்கும் நடன காக்ஷிகளும், இன்னும் தாமரைத் தடாகங்களில் எவ்வன வஜீகரத்தையுடைய அன்னப்பக்ஷிகள் தங்கள் பார்ப்புகளுடன் நீந்தித் திரிகின்ற நீர்விளையாட்டுகளும், விசாலந்தங்கிய மணிக்கோதுமை வயல்களிலும், வரம்புகளிலும் இருந்து சூலுளைந்த வலம்புரிச்சங்குகள் தவழ்ந்துகொண்டு போய் மடைமுகங்கள்தோறும் திரட்சியான உருளை முத்துக்களை நன்று குவித்து வைத்துப் பிரகாசஞ்செய்யும் சீதள ஜோதியுடன் முழங்கிக் கொண்டிருக்கும் குமுறொலிகளும், இன்னும் மதிப்பிடற்கரிய மரகத ரத்தினங்களால் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருக்கின்ற மணிமாடக்கூடங்களும்,இணைசொல்லப்படாத அநேகவனங்களுடன்

* இந்தச் கவிதை செய்யிதத்துப்படைப்போர் என்னும் காவிய புராணத்தில் உள்ளது.

சிறந்து ஸகஜோதி மயமான அலங்காரத்தையுடைய எமன் என்னும் பட்டணமாக இருக்கும். அப்படிப்பட்ட செல்வாக்குடையபட்டணத்திற்கும், அதைச்சேர்ந்த ராஜியங்களுக்கும் நான் அரசனாக இருந்து சூழ நெருங்கிய இனஜனங்களுடனும், கணக்கற்ற செல்வீக சம்பத்துடனும் யாதொரு விக்கினமுமில்லாமல் சவிஸ்தாரமாய் வாழ்ந்து வந்தேன். அப்படி நான் வாழ்ந்து வருங்காலத்தில் இணையில்லாத புகழையுடைய வள்ளலாகிய வரிசைபாகிய தெளிந்து வடித்த திருமணியாகிய முகம்மதாகிய எங்கள் நாயகமே! தாங்கள் இந்தப் பூலோகத்தில் சர்வ தயாபரக்காரணக் கடவுளாகிய அல்லாஹுத் தஆலாவின் முத்திராங்கமான திருத்தூதராக அவதரித்ததுவும், அந்தத்திரு அவதார தரிசனம் செங்கடற்கரையில் உள்ள மக்கா என்னும் பட்டணத்தில் நடைபெற்றதுவும், அந்தச் சமயத்தில் தங்களில் நின்றும் கோணங்களில் வெளியாகிய மஹாமஹா அற்புதாதிகளையும், தங்களுக்கென்று றகுமானாகிய ஆண்டவன் அனுப்பிய குர்ஆன் வேதத்தையும், அதன் நேர்வழியான சட்டங்களின்படி தாங்கள் தீனுல் இஸ்லாம் என்னும் தெய்வீக மார்க்கத்தைப் படர வைத்துக் கொண்டு வருகிற திறமையையும், தாங்கள் ஜனங்கள்பேரில் வைக்கின்ற கிருபைதயா விசாலத்தையும், தங்களுக்கும் தங்கள் ஆதரவான நிழலில் வந்து ஒதுங்கிய அஸ்ஷாபிகளான சகோதரர்களுக்கு ஆண்டவன் கொடுத்திருக்கின்ற வெற்றிகளையும், இன்னும் தங்களிலுள்ள பொறுமை, கொடை, இரக்கம், ஒழுக்கம் முதலிய நற்சாதுரிய நடக்கைகளையும் நான் வேதங்களைத் தெளிந்த மஹான்களின் உண்மையான வாய்மொழிகளால் நாளாவட்டத்தில் கேட்டறிந்து கருணைக்கடலான தங்கள் சமுகத்தில் வந்து நேர்வழி பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இரவும் பகலும் நீங்காத ஆசை தூண்டினவனாக என் இனபந்து ஜனங்களுக்குத் தெரியாமல் அந்தரங்கத்தில் தங்களுடைய லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் றசூலுல்லாஹி என்னும் திருக்கலிமாவைச் சொல்லி மனதில் உள்ளீமான் கொண்டிருந்தேன். எப்படியிருந்தாலும் தங்களுடைய சிறப்பான திவ்விய சமுகத்தைக் கண்ணாரக்கண்டு மகிழவேண்டும் என்னும் ஒரு பேராசையானது நெடுநாள் என் இருதயத்தில் வந்து வேரூன்றியிருப்பதாலே இனி சுணங்கக்கூடாது என்றுஉத்தேசித்து திடீரென்று பிரயாண எத்தனம் பண்ணினேன். பிரயாணப்பட்டு

நாயகமே! தங்களுக்குப் பாதகாணிக்கையாக அநந்தம் தங்க நாணயங்களையும், நவரத்தின சுஜிதங்களும், வெள்ளி நாணயங்களில் கணக்கில்லாத தீனுறுகளும், விநோத விசித்திர கஸீதா வேலைகள் செய்த லிபாசுகளும், இதற்கென்று நான் ஷாம்தேசத்திலிருந்தும், சீரியா மாகாணத்தில் உள்ள திமிஷக்குப் பட்டணத்திலிருந்தும், வரவழைத்த உயர்த்தியான தீபாஜுப்பட்டுகளும், இரத்தின கம்பளங்களும், தண்ட கம்பளங்களும், மக்மல் ஸகலாத்து ஷால்வைகளும், நாகரீகமாகிய இடைக்கட்டுகளும், சர்பந்துப்பட்டுகளும், இன்னும் தீன்வகை அறுசுவையுண்டி பதார்த்தங்களும், ஷர்பத்து வகைகளும், வாசனுதி பரிமள திரவியங்களும், இன்னும் தங்கள் சுத்த வீரியர்களான அஸ்ஹாபிமார்கள் கையர்டுவதற்கென்று மகிரிபுகட்டிலிருந்தும், ஹிந்து ராஜியத்திலிருந்தும் வெகு பிரயாசையுடன் வரவழைத்த வாளாயுதம், வேலாயுதம், சக்ராயுதம், தண்டம் முதலான படைக்களத்தாவடங்களும், தரந்தரமாகப் பிரித்து ஒட்டகங்களில் பொதிகள் பொதிகளாக எடுத்தேற்றி தங்கள் சொந்தத்திற்கென்று எமனில் உள்ள உயர்தரமான பஞ்சகல்யாணிக் குதிரைகளில் ஒருநூறுகுதிரைகளும், ஆள் அடிமைகளும் சேர்த்து அது ஒரு கூட்டமாகவும், பிரித்து என் உறமுறை ஜனங்களுக்குப் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு என் மகனுடனும், என் சேனைகளில் ஒரு பாதியுடனும் புறப்பட்டுப் பட்டணத்தின் கோட்டை கொத்தளங்களையும், அலங்கம் அகழிகளையும் கடந்து நாயகமான நபியே! தேவரீர் தாங்கள் வாசம்பண்ணிக்கொண்டிருக்கின்ற இந்தச் சிறப்பும், வரிசையும் பொருந்திய மதினமாநகரத்தின் பாதையைப் பிடித்து நானும் என் சேனைப்பரிவாரங்களும் இரவும்பகலுமாக நடந்துமுல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் பாலையென்கின்ற ஐந்து விதமான திணை நிலங்களையும், அதற்கிடையிலுள்ள அநேக பட்டணங்களையும், அவைகளைச் சேர்ந்த வயல் வாய்க்கால் வரம்பு நதிகளையும், இன்னும், பயங்கரமான காடுவனந்திரம் கானையாறுகளையும், இன்னும் யானை, புலி முதலிய துஷ்ட ஜந்து குமுறொலியுடன் வீறிட்டுத் திரிகின்ற மலைகெபிகளையும் கடந்து ஒரு பிரமாண்டமான மலையடிவாரத்தில் வந்தோம். அப்போது விருக்ஷங்களில் கீச்சான் குருவி கூப்பிட்டு நிலங்கீறி விடிவெள்ளி மறைந்து கிழக்கு

வெளுத்த சமையமாக இருந்தது. மலையின்மேல் பக்கதிசையில் குதிரைகளின் குளம்படி சப்தமும், அவைகளின் வாய்களில் கடிபடும் கடிவாள சப்தமும் கேட்டது. சற்று நேரம் அவ்விடத்தில் பரிவாரங்களை நிற்பாட்டிக்கொண்டு இதென்ன சம்பவம்! என்று ஆலோசித்துக்கொண்டு நின்றோம். பின்று கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வானலோகத்திலிருந்து எமதூதர்கள் தோன்றினதுபோலத் திடகாத்திரமுடைய சிங்கங்களைப்போலுள்ள மூவாயிர சுத்த வீரியர் உயர்த்தியான ஜாதிக்குதிரைகளின் பேரில் சவாரி செய்தவர்களாக நிரம்பிய ஆயுத கோலத்துடன் சினங்கொண்டு வரவும், அவர்கள் முன்னால் கழுகுக்கொடி பிடித்தவனாகக் கர்கு என்னும் பெயருடைய வணுகிய ஓர் தலைவன் மூரியாட்டங்கொண்ட பசாசு வருவதுபோல வந்து விருது பராக்ரம சப்தத்துடன் என் பரிவாரங்களின் பேரில் கள்ளப்பருந்துகளைப்போல் விழுந்து மோதினார்கள். உடனே என் சேனைகளான எமனிகளும் கையில் உருவிப்பிடித்த அகலமான வாட்களுடன் எதிர்த்துச் சவடினார்கள். சுமார் சாயந்திரம் இருபத்தைந்து நாழிகை வரையிலும் பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. கடைசியில் சத்துருக்களின் கைகளே மிகைத்து ஏறக்குறைய என் சேனைகளான எமனிகள் எல்லாரும் அந்தப் பாவசண்டாளர்களின் நீண்ட கைவாளால் துண்டங் கண்டங்களாக வெட்டுண்டு புழுதியில் சிந்திய இரத்தத்தில் புரண்டு கிடந்தார்கள். அந்தப் பரிதாபத்தை நானும் என் மகனுங்கண்டு திடுக்கிட்டு அந்தச் சேனைத் தலைவனிடம் உயிருக்கு அடைக்கலம் என்று சொல்லி எங்களிருபேரையும் ஒப்புக்கொடுத்தோம். அந்தப் பாதகன் நாங்கள் கொண்டு வந்த அளவில்லாத்திரவியம் தட்டுமுட்டு சாமான்களுடனும், எங்களையும் சிறையாகப் பிடித்துக்கொண்டு அவன் அரசனிருக்கும் எல்லையாகிய ஜபனுஸ்ஸுபியான் என்கின்ற மலையின்மேலே கொண்டு போய் அங்கு உல்லாசமான ரத்தினப்பீடத்தின்மேல் இருக்கின்ற அவர்கள் அரசன் சமுகத்தில் இறுகக்கட்டிய கட்டுகளோடும் நிறுத்தினன். அந்தச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கின்ற அரசனின் முகவஜீகர சௌந்திரியத்தையும், பதினறடி வேங்கைப்புலிக் கொப்பாகிய பயங்கர நோக்கத்தையும் கண்டு மனவெருட்சி கொண்டவர்களாக நானும் என் குமாரனும் நட்டாற்றுக் கோரை

போலப் பேதலித்துப்போய் நின்றோம். வெகுநேரம் வரையிலும் எங்களை நிறுத்தி வைத்திருந்தபடியாலே இந்தக் கொடிய மனதை யுடைய அரசன் யாரென்று விஜாரிப்போம் என்று கருதி அங்கு நின்ற காவல் வீரர்களில் ஒருவனைநோக்கி ஓ! மகாகனம் பொருந்திய புண்ணியவானே ! இந்த அரசரின் ஊர் எது? இவர் பெயரென்ன? என்று கேட்டேன். அதற்கந்தப் பாதகன் மதங்கொண்ட முரட்டு யானையைப்போல் வெகுண்டு அதிக சீற்றத்துடன் என்னைப்பார்த்துக் கேவலம் உனக்கேன் அந்தக் கேள்வி; நாயைப்போல் சும்மா இரு! என்று சொல்லி மறுபடியும் சற்று யோசித்து மனதில் தயாளங் கொண்டவனாக இந்த அரசர் மக்கமா நகரத்திலிருந்து மாயவஞ்ச னைக்காரனாகிய முகம்மதுடன் மதினா நகரத்தில் போயிருக்கின்ற அபூபக்கர் சித்தீக்குடைய குமாரர். இவர் சிறுபருவத்திலேயே இந்த மலையில் வந்து எங்கள் அரசனுடைய தத்துப் புத்திரராக வளர்ந்து அப்பால் அந்த அரசனுடைய குமாரத்தியாகிய மகளை விவாஹம் பண்ணினதின் பேரில் இராஜபட்டமும் பெற்றிருக்கின் றார். இவருடைய திருநாமம் அப்துர் றகுமான் என்று கூப்பிடப் படுகிறது என்று சொல்லினான். இந்தச் சொல்லானது என் செவி களின் புகுந்த மாத்திரமே சற்று தைரியத்துடன் மனதைத் திடப் படுத்தி அந்தச் சிங்காசனத்தில் இருக்கின்ற அரசரை நோக்கி, அப் துர் றகுமான் என்னும் வள்ளலாகிய அரசரே! என்று கூப்பிட்டு, திருமதினமா நகரத்தின் தீர்க்கதரிசியாகிய எங்கள் நாயகம் முகம் மது நபியவர்களுக்கென்று நான் கொண்டுவந்த அளவில்லாத காணிக்கைப்பொருட்களை யெல்லாம் உம்முடைய ஜனங்கள் சூறை யாடினது மல்லாமல் தேடக்கிடையாத எமனிகளாகிய என் சுத்த வீரர்களையும் அநியாயமாக வதைத்து என்னையும் என் புத்திரனை யும் சிறையாகப் பிடித்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்படிப் பட்ட பாதகமாகிய துர்விஷயங்களுக்கெல்லாம் மேலான கோத்தி ரத்திற் பிறந்திருக்கின்ற நீர் தலையிட்டுக் கொண்டிருக்கின்றீர். போனது போகட்டும். இப்போது உம்முடைய மனதில் என்பேரில் அநேகக் கிருபை செய்து என்னையும் என் குமாரனையும் கட்ட விழ்த்துவிட்டு விடும். நாங்கள் உம்முடைய கிருபாகடாட்சியத்தால் உயிருடன் தப்பிப்பிழைத்து எங்கள் ஊர் பதிபோய் சேர்ந்து விடு

கிறேம். தேவரீர் இவ்வளவுமாத்திரம் கருணை செய்ய வேண்டும் என்று அதிகத் தாழ்மையுடன் கெஞ்சிக் கேட்டு நின்றேன்.

இவ்வளவும் ஒரு கருங்கல்லுக்குச் சொல்வேனுகில் உடனே அது தண்ணீராய்க் கரைந்துவிடும். அந்த இரக்கமில்லாத முகாடிய மனத்தினனுகிய அப்துர் றகுமான் என்னும் அரசன் என்னை நோக்கி ஏதடா எமனிப்பயலே! நீ கெஞ்சுகிறதெல்லாம் எனக்குத் தெரியுமடா. சும்மா வாயை மூடிக்கொள். நீ எமன்பதியிலிருந்து அந்தச் சத்துருவாகிய மாயமுகம்மது என்பவனுக்குக் காணிக்கை கொண்டு வருகிற சங்கதியை நான் உளவு ஆட்கள் மூலமாகத் துப்புவைத்து விசாரித்தே அதைப் பிடுங்கிக்கொள்ளும்பொருட்டு என் சேனைகளை அனுப்பிவைத்தேன். நீ இப்போது, அந்த முகம்மதுடைய பெயரை என்னிடஞ் சொன்னதினுலே உன்னையும் உன் மகனையும் சும்மா விடமாட்டேன். நீயாகிறவன் ஒரு பட்டணத்தையுடைய அரசனு யிருக்கின்றபடியாலே உன்னைச் சிரச்சேதம் பண்ணும் என்போலொத்த மகா சுத்த வீரர்களுக்குத் தகுதியல்ல. வேண்டுமானுல் உன் குமாரனை இங்கே சிறையில் வைத்து விட்டு நீ வெகுவாய் கனதியுடன் நம்பிக்கொண்டு வந்த அந்த முகம்மது இடம் போய் உன் வரலாற்றையும், இங்கே என் சமுகத்தில் நடைபெற்ற சங்கதிகளையும், உன் மகன் சிறையில் கிடப்பதையும் தெரியப்படுத்து. அவனுக்கும்அவன் புதுமார்க்கத்தைச் சேர்ந்திருக்கின்ற வீரர்களுக்கும் அத்தனை தீரம் பொருந்திய வல்லமை இருக்கும் பட்சத்தில் இங்கே வந்து என்னுடன் யுத்தஞ்செய்து உன் பொருளையும் உன் மகனையும் மீட்டிக் கொள்ளட்டும். இதற்கென்றே உன்னைச் சிறைபடுத்தாமல் விட்டு விட்டேன். சீக்கிரம் மதீனம் போய் சங்கதிகளைச் சொல் என்று கொடிய சிம்மராசி ஏன்றிருந்து கெர்ச்சிப்பதுபோல் அபயசப்தத்துடன் சொன்னுன்.

அரசன் சொல்லிய தீங்கான வார்த்தையைக் கேட்டதும் என் மனமெல்லாம் புழுங்கினவனுக அங்குச்சிறையில் அடைக்கவேண்டிக் கதறக்கதறப் பிடித்துக்கொண்டு போகிற என் அருமையான மகனை நோக்கி மகனே நான் என்ன செய்யட்டுமடா! நமக்கு இந்த விதிவந்ததே அப்பா என்று ஏங்கி யழுதேன். அந்தப் பரிதாபத்தை அர

சன் பார்த்துக்கொண்டிருந்து சற்று மனதிரங்கி மறுபடியும் என்னை நோக்கி உன் மகன்பேரில் உனக்கு அதிக உகப்பு இருக்கும் பட்சத்தில் அவனுடைய சிறைக்குப் பகரமாக மிசுறுப்பட்டணத்தின் தீபாஜுப்பட்டுகளில் ஆயிரமும், பசும்பொன் கட்டிகளில் ஒவ்வொரு கட்டியும் ஆயிரமாயிரம் களஞ்சி நிறுவைக்குறையாமல் ஆயிரம் கட்டிகளும், அத்துடன் அறபிய வங்கிஷ உயர் ஜாதிக்குதிரைகளில் ஒரு நூறு பஞ்சகல்யாணிகளும் தயார்செய்துசீக்கிரம் அதாவது இரண்டு வாரம் பதினைந்து நாளைக்குள்ளாய் கொண்டுவந்து ஒப்பித்துவிட்டு உன் மகனைக் கூட்டிக்கொண்டு, உன் ஊர்போய் சேர்ந்துகொள். இல்லாமல் குறித்திருக்கின்ற தவணை தவறும்பட்சத்தில் எங்களை ஆண்டு ரக்ஷிக்கும் கனந்தங்கிய லாத்து அபுஸாவென்னும் தம்பிரான்கள்பேரில் சத்தியமாக உன் மகனைத் தலைவேறு துண்டம் வேறாக வெட்டி வதைத்துவிடுவேன். இதுவே கடைசி முத்திரையான வார்த்தை. இதற்கு மறுமாற்றம் ஒன்றுமே கிடையாது என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டான். ஏழையாகிய தமியன் நான் என்ன செய்வேன். கானகத்தில் வேடனுடைய வலையில் அகப்பட்ட மானுக்குப் பிணையாக நின்று அந்த மானையும் அதன் குட்டியையும் வருத்தி அற்புதத்துடன் அதைப்பிடித்திருந்த கொடியவனாகிய வேடனையும் தங்கள் தீனுல் இஸ்லாமிலாக்கிவிட்ட காரக்கடவுளாகிய வள்ளலே! நபிமார்களுக்கும் றசூல்மார்களுக்கும் நாயகபதியானவர்களே! துரோகிகளுடைய கூரியவாளென்னும் அரிகண்டத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கின்ற என் அருமைக்கண்மணியான குமாரனை மீட்டி அடியேனாகியஎன் வயிறு குளிரும்படியாகத் தருவீர்களென்று தேவரீர் தங்கள் தயாசாகரமாகிய திருச்சந்நிதானத்திற்கு வந்தேன். அல்லாவுடைய றசூலே! எப்படிப்பட்ட நபிகளுக்கும் எட்டாதிருந்த தேவசந்நிதானமாகிய அறுஷில் இருபாத பங்கயத்தில் அணிந்திருந்த செருப்புடன் நடந்துபோய் அநேக மெய்வாக்கியங்கள் சம்பாஷித்து வந்த மஹா தவத்தையுடைய முகம்மதே! இன்னும் மதுபானமுண்டு வெறிதலைக்கேறிய ஒருபாதகன் தன் தாயுடைய இரண்டு கண்களையும் பிடுங்கி அப்பால் வெறி தெளிந்தவுடன் ஆத்திரப்பட்டு தன் கையையும் துண்டாக வெட்டித் தங்கள் சமுகம் வந்தபோது அந்த மனுஷியின் விழிகளையும், அவன் மகனுடைய கையையும்பொ

ருத்திவிட்ட மகா அற்புதத்தையுடைய கற்பகவனமே! இன்னும் ஏழு வான்களையும் உருவிப்பாய்ந்து அல்லாவுடைய அருஷளாவி நிற்கின்ற சிரமகுடத்தையும்பாதாளம் வரையிலும் போய்ப் பதிந்துகிடந்துபூமியில் தோயாத பாதகமலங்களையும், ஜலமேகமானது சதாநேரமும் நீங்காது பிடித்து நிற்கும் குடைநிழலையும், கதம்ப கஸ்தூரி யம்பர் மரைதிகள் கமகமவென்று கமழும்படியான மெலியா சரீரத்தையும் உடைய காருண்ய காரமேரே, இன்னும் கண்களின் பூழை, நாசிநீர், மலஜலம் ஒன்றுமில்லாது பரிபூரணமயமாக இருக்கும் தேவத்திரவிய பொக்கிஷமே ! அந்தப் பாதகன் ஆக்கினை செய்திருக்கின்ற பொன் கட்டிகளும், பஞ்சகல்யாணிகளும் என்னிடம் எங்கிருந்துவரும். என்னிடம் சேர்ந்திருந்த பொருளையெல்லாம் தேவரீர் தங்களுக்கென்று கொண்டுவந்து நடுவழியில் தாரவார்த்துவிட்டு இக்கோலம்கொண்டு இரக்கமதியங்கெட்டு வந்திருக்கின்றேனே. ஏழையாகிய நான் என்ன செய்யட்டும். தேவரீர் என்பேரில் கிருபைவைத்து எவ்விதத்திலாவது என் அருமையான மகனைச் சிறையில் நின்றும் மீட்டுத் தர வேண்டியது தங்கள் பேரில் விழுந்த கடமையாக இருக்கும்" என்று இத்தனையும் படிப்படியாகச் சொல்லியழுதார்.

எமன் ராஜியத்து அரசனாகிய அஸ்மத்தென்பவர் வியாகுலத்துடன் அழுது சொல்லிய முறைப்பாடத்தனையும் சர்வலோக கருணாநிதியான நமது நபியாண்டவர்கள் கேட்டு துக்கக்கடலில் முழுகினவர்களாகக் கண் கசிந்தார்கள். அதைக்கண்ட அஸ்ஹாபிமார்களெல்லாம் நாலாபக்கங்களிலும் புடை சூழ்ந்தவர்களாக ஏங்கி வாய்விட்டு அழுதுகொண்டு நின்றார்கள். இந்தச் சஞ்சலமான சம்பவத்தைக் கேட்டுத் திரும்தினைப் பட்டணத்தில் உள்ள முஹாஜீன்கள் அன்சாரிகளெல்லாம் ஓ ! ஹோ !! நமது வள்ளலாகிய நபிகள் நாயகம் அவர்கள் சமுகத்தில் என்ன தீங்கோ வந்து நேரிட்டுவிட்டது ! போய்ப் பார்ப்போம் என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு உறைகளிலிருந்து கலகலவென்று உருவிப் பிடித்த ஆயுததாரிகளாக மனவேகத்துடன் ஓடிவந்து கூடி நபியவர்கள் சமுகம் நிற்கின்ற அஸ்ஹாபிமார்களிடம் கலந்து சங்கதி என்னவென்று வினவினார்கள். வினவி எமன் அரசனாகிய அஸ்மத்தென்பவர் வந்ததும், அவர் றசூலுல்லா அவர்களுக்கென்று சேகரித்துக்கொண்டுவந்த அளவில்லாத

காணிக்கைத் திரவியங்களை அபூசுபியான் உடையவீரர்கள் நடுவழியில் வந்து விழுந்து சூறையாடி அவருடைய ஜனங்களையெல்லாம் கொன்றுவிட்டு தகப்பன் மகன் இருவரையும் சிறை பிடித்துக்கொண்டு அவர்கள் அரசனிருக்கும் மலையிடங்கொண்டுபோய் விட்டதும் அரசன் அஸ்மத்துடைய அழகுள்ள குமாரனைப் பிடித்துக்கட்டி சிறையில் கிடத்திவிட்டு அஸ்மத்தைத் துரத்திவிட்டதுமாகிய வரலாறுகளை யெல்லாம் ஆதியோடந்தமாகக் கேட்டுப் பெரிதாகிய ஆத்திரத்துடன் புலிகளைப்போல் உறுமினவர்களாக அங்கு நாலாதிக்கிலும் நின்று அழுதார்கள். அஸ்ஹாபிகளுடைய விசன கோஷ்டந் தீர்ந்தவுடனே நமது வள்ளலாகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அஸ்பத்தென்பவரைத் தங்கள் அருகில் அழைத்து அவருடைய தலையில் தங்களின் முபாறக்கான கையை வைத்து "நீர் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். அல்லா உமக்கு நல்லுதவியான கட்டளை புரிவானாக" என்று ஆதரவு சொல்லிவிட்டு உடனே ஹலரத்து அலியின் கர்றமல்லாஹு அவர்களிடம் அஸ்மத்தை ஒப்புக்கொடுத்து நல்லபோஜனங்கள் கொடுக்கும்படியாக உத்தரவு செய்து அனுப்பினார்கள். அவ்விதமே அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இணையில்லா சந்தோஷபரவசத்துடன் அஸ்மத்தைக் கூட்டிக்கொண்டு தங்கள் மனையிற்போய் அனேக உபசரணைகளுடன் மதுரமான போஜனஞ் செய்துவைத்தார்கள். அதன்பிறகு நமது நாயகம் ஷபீஉல் முதுனபீன் முகம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பள்ளிவாசலை விட்டும் எழுந்து மகா பராக்கிரமசாலிகளான அஸ்ஹாபிமார்கள் புடைசூழ நடந்து அழகிய கருந்தடக் கடலையுடைய ஆயிஷா நாயகி யென்னும் தங்கள் கனிஷ்ட பெருமாட்டியார் அவர்களின் மாளிகைக்குப் போனார்கள். போய் அங்கோர் இடத்தில் நல்ல சவுகரியமாக வீற்றிருந்து தங்கள் மைத்துனரானவரும், படைக்களத்தில் வேங்கைப்புலிபோல் பாய்ந்தடரும் மகாப் பராக்கிரமம் ஒத்த வீரியருமாகிய மேற்படி அப்துர் றகுமான் அவர்களின் விஷயத்தில் மனமழுந்தி ஆலோசனை பண்ணினவர்களாக இருக்கும் சமயத்தில் அங்கே தங்கள் மாமனாராகிய ஹலரத்து அபாபக்கர் சித்தீக்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திடீரென்று வந்தார்கள். வந்தவர்களை உடனே நபியவர்கள் மர்ஹபாச்சொல்லி இரு

ச்கவைத்து அவர்களை நோக்கி எமன் ராஜியபத்து அரசராகிய அஸ்மத்தென்டவர் வந்த செய்தியும், அவர் தங்களுக்கு அளவில்லாத காணிக்கை உபகரணங்கள் கொண்டு மதினா பட்டணத்தை நாடிவரும் வழியில் பறிபோன மகனாகிய அப்துர் றகுமானுடைய சேனைகள் வந்து விழுந்து எமனிகளான சுத்த வீரியர்களெல்லாரையும் உயிர்வதை செய்து அஸ்மத்து கொண்டுவந்த திரவியங்கள் முதலான யாவற்றையும் சூறையாடி அஸ்மத்தையும் அவருடைய குமாரனையும் பிடித்துக்கட்டி சிறைவாரிக்கொண்டு ஜபலுஸ் ஸபியான் என்னும் மலைமேலிருக்கின்ற அரசனாகிய அப்துர் றகுமானிடம் கொண்டு நிறுத்தினதும், அவர் அஸ்மத்துடைய மகனைச் சிறைச்சாலையில் அடைத்துக்கொண்டு அஸ்மத்தைத் துரத்திவிட்டதுமாகிய நடந்த சங்கதிகள் எல்லாம்படிபடியாகச் சொல்லித் தங்கள் இருகண்களுஞ் செவந்தவர்களாக இதற்கென்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

அல்லாவுடைய றசூலாகிய நாயகம் அவர்கள் தாங்காத கோபாக்கினிப்பற்றினவர்களாகச் சொன்ன பரிதாபச் சங்கதிகளை ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அவர்கள் கேட்டவுடனே மகனுடைய ஆசை வேட்கை பொங்கினவர்களாகத் தங்கள் இரண்டு கண்களிலுமிருந்து தாரைதாரையாய்க் கண்ணீர் வடியும்படி அழுது கொண்டிருந்தார்கள். அப்போது நபிநாயகம் அவர்கள் ஹலரத்தவர்களை நோக்கி அபூபக்கரே, தங்கள் குமாரனாகிய அந்தப்பாதகன் என் காணிக்கை நிதிகளைச் சூறையாடிக்கொண்டு அதைக் கொண்டு வந்த எமனிகளையும் அநியாயக்கொலைகள் செய்ததுமல்லாமல் என்னையும் கண்டமாதிரியாக வாய்வந்தபடி பலபல வசைவார்த்தைகளும் சொல்லித் திட்டியிருக்கின்றான். அப்படிப்பட்ட பாதகனும் அவன் திரட்டிவைத்திருக்கின்ற சேனைபதாதிகளும் அழிந்து நாசமடைந்து போகும்படியாக நான் இந்த நிமிஷத்திலேயே சாபமிட உத்தேசிக்கின்றேன். இதற்கென்ன சொல்கிறீர்கள் சொல்லுங்கள்? என்று சரீரத்தின் உரோமக்கால் எல்லாம் ஜில்லென்று சிலிர்த்தவர்களாகச் சொன்னார்கள்.

இவ்விதம் நபியவர்கள் மனவேஷ்டையுடன் சொன்ன வார்த்தைகளை ஹலரத்து அபூபக்கர் சித்திக்கு அவர்கள் கேட்டு ஆலோசனை

செய்து தங்கள் மனதினுள்ளே அல்லாவுடைய றசூலின் கொடிதான சாபத்தில் நம்முடைய குமாரன் அகப்படுவானேயாகில் வீணே நாச மடைந்து போவதுமன்றிக் கெட்ட மூதேவித்தனமாகிய குபிரியத்தி லேயே தரிபட்டவனாக ஊழியூழிகாலம் வரையிலும் கிடந்து மீட்சிய டையாத நரகவாதியாகவும் ஆகிப் பேறு கெட்டுப் போவான். நம் முடைய குமாரன் அவ்விதமான கெதியிலாகுவானேயாகில் நாம் றசூலல்லாவுக்கு மிகவும் சுதந்திரவாளன் என்பதில் என்ன பிர யோசன மிருக்கின்றது? இதனால் என்னவந்தாலும் வரட்டும். அவனை யப்படி விடாமல் மீட்டுக்கொண்டு வருவதே முத்திரையான தீர் மானம்! என்று திட்டப்படுத்திக்கொண்டு நபியுல்லா அவர்களை நோக்கி, யாஸையிதீ! எங்கள் நாயகமே! தாங்கள் சினத்தை யடக்குங்கள். அல்லா உடைய மஉஷூக்காகிய ஹபீபே! எளியவர் களாகிய தங்கள் உம்மத்துமார்களின் சஹாயத்திற்காக வேண்டி "மீஃறுஜ்" என்னும் எழுவான் யாத்திரை செய்து சர்வஜீவகோடி தயாபர நிஷ்களாநந்த நிர்மல ஆதிதக் கடவுளாகிய றகுமானைப் பரவசமாகத் தரிசித்தபோது, அந்த மகா பிர்மதத்துவ சிரோரஞ்சித மான அல்லாவென்னும் மகத்துவமானது "லவ்லாக்" அதாவது, "முகம்மதே உம்மை நான் படைக்காவிட்டால் ஒரு உலகங்களையும் படைக்க மாட்டேன்" என்று திருப்தியுடன் புகழ்ந்து போற்றிய மகா சங்கைக்குரிய நாயகமே! அகுமதென்றும், ஹாமிதென்றும், மகுமூதென்றும், முகம்மதென்றும், ஹாமீமென்றும், தாசீனென் றும், யாசீனென்றும், தாஹாவென்றும் அந்தந்த ஆலங்களில் அவ தாரங்கொண்டிருந்த மகா ரகசிய புதையற் பொருளான வள்ளலே! தாங்கள் என் குமாரனாகிய அப்துர் றகுமானைத் திடீரென்று மன மெரிந்து பதுஆவென்னும் சபித்திடவேண்டாம். சற்றுபொறுத்துச் செய்யுங்கள். நான் இதோ புறப்பட்டு அவன் அரசாட்சி செய்கின்ற மலைக்குமேலே சென்று, அவனிடம் நேரிற்போய் நம்முடைய தீனை யநுசரித்து என்னுடன் வரும்படி யழைக்கிறேன். அதற்கவன் ஒரு வழியிலும் இடங்கொடாமல் பழையபடி ஷெய்தானுடைய மயக் கத்திலேயே பிரண்டு கொள்வானேயாகில் அந்தக்ஷணமே என் உறையில் சொருகித் தொங்குகின்ற அகலமான வாளாயுதத்தால் அவன் தலையை ஒரு வீச்சில் பூக்கொய்வதுபோலக் கொய்து கையில்

எடுத்து இரத்தவாடை ஆறுகிறதற்கு முன்னே தேவரீர் தங்கள் சமுகம் வந்து சேருகின்றேன். இதுவே கண்டிப்பான உறுதி. தேவரீர் என் ஹக்கில் துஆச்செய்து பிரயாண விடை தந்தருளவேண்டியது என்று முறுமுறுத்த முகத்துடன் கேட்டு நின்றார்கள்.

இருலோகத்திலும் அருமைதங்கிய மாமனாராகிய ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹூ அன்கு அவர்கள் சொல்லிய மன வைராக்கியமாகிய உறுதிவார்த்தையை மும்மண்டலாதிகளும் புகழ்கின்ற எம்மாண்டகையான நபிநாயகமவர்கள் கேட்டு சற்றுநேரம் தரையை நோக்கிக் குனிந்தவர்களாகப் பலதும் ஆலோசனை செய்து பிறகு தங்கள் சிறப்பும் வரிசையும் பொருந்திய சிரத்தை உயர்த்தி மாமனார் அவர்கள் முகத்தை நோக்கி "தாங்கள் சொன்னபடியே செய்து வாருங்கள். இந்த விஷயத்தில் றகுமானாகிய ஆண்டவன் உங்களுக்குப் பலவிதத்திலும் உதவிசெய்தருள்வானாக" என்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்கள்.

அஸ்மத்திபுனு நுஹிதாவின் பரிதாப முறைப்பாடு

*முற்றிற்று.*

---

## 3-ம் அத்தியாயம்

### முர்றத்திபுனு இஸ்லான் தீனில் வருதல்

நமது இருலோகரக்ஷகராகிய ஷபீஉல் முதுனபீன் முகம்மது முஸ்தபா, அகுமதன் முறுத்தலா றசூல் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் மனநந்தத்துடன் பிரயாணவிடை கொடுத்தனுப்பிய உடன் ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹூ அன்கு அவர்கள் புஜங்கள் பணைத்து பூரித்தவர்களாக நபிநாயகம் அவர்கள் திருச்சந்நிதானம்விட்டு நீங்கி விரைவாக நடந்து மரகதநிறம்போன்ற பூங்கனிக்கொப்பாகிய மொழிமதுரங்களையுடைய தங்கள் மனைவியர் பீவி உம்முர்றூமா அம்மா அவர்களின் மாளிகைக்குச் சென்று அங்கு அப்துர் றகுமானின் தாயாராகிய ஷெ அம்மா அவர்களுக்கும் மற்றுமுள்ள தங்கள் இனஜன சுற்றத்தார்களுக்கும் பிரயாணம் சொல்லி

தங்கள் குமாரராகிய படைக்களத்தில் பதிறைடி. வேங்கைப்புலி போல் பாய்கின்ற மஹா பலாட்டியர் அப்துர்ரகுமான்உடைய சந்தர்ப்பங்களையும் சொல்லிவிட்டுப் படையுடுப்புகள் அணிய ஆயத்தமாகினார்கள். தங்கள் வழமைபோலப் படைத்தொப்பியை எடுத்துத் தலையில் தரித்து, சசிதாவேலைமானங்கள் செய்த சித்திரத்தலைப்பாகையணிந்து, அத்துடன் பாசக்கயிற்றை நெற்றியைச் சூழ கட்டித் தொங்கவிட்டு, சரீரத்தில் உருக்கு வலையை உடுத்தி, புஜங்களில் இருப்புச்சீராவணிந்து குறைவிகளில் மஹாப் பேர்போன படைத் தலைவர்கள் செய்யும் வழக்கம்போல உயர்ந்த தீபாஜூப்பட்டு ஸகலாத்தொன்றை யெடுத்து நிமைவரையிலும் சொருக்கு முக்காடிட்டு செம்புச்சீராச்சங்கிலித் தொடர்களால் இடைக்கட்டுங்கட்டி அதில் இருபுறமும் அம்பராக்கூடணிந்து கூரிய விஷாஸ்திரங்களை நிரப்பி, முதுகுப்புறத்தில் மகிரிபு ராஜ்யத்தின் கொடுமரம் என்கின்ற பிரயோகப்பாணமணிந்து, இரண்டு விலாப்பக்கங்களிலும் வல்லயம், தண்டாயுதங்களை எடுத்தணிந்து, கையில் ஹிந்துராஜ்யத்தின் அகலமான வாளாயுதம் பிடித்து, காலில் ஒட்டகத்தோல் செருப்பணிந்து, விருதுக்கொடியும் பிடித்தவர்களாக நடனத்தில் இணையில்லாத உயர்ந்த இருக்கு தேசத்தின் பஞ்சகலியாணிக் குதிரைமேல் வடவாமுக அக்கினி ஒன்று தொத்தி ஏறுவது போல் தக்பீர் ஸலவாத்துச் சொன்னவர்களாக சவாரானார்கள். ஹலரத்து அமீறுல் முஉமினீன் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் காதிம்களென்னும் பணிவிடையாளர்கள் அழகிய விமரிசையாக ஜோடித்துப் பிரகாசந்தங்கிய இரத்தினக்கல்லணையுடன் கொண்டுவந்து நிற்பாட்டிய கல்யாணியின்மேல் சவார்செய்து அதை சரகதி, ஸஜகதி, சர்ப்பகதி, வானரகதி, மயூரகதி யென்கின்ற ஐந்துவிதமான நடன காம்பீரத்துடன் நடத்திக்கொண்டு மனிதனாகப் பிறந்தான் எவனும் எவ்விதக் கல்வித்திறமையாலும் அலங்கரித்துச் சொல்ல முடியாத மகாமகத்துவந் தங்கிய திருமதினமா நகரத்தின் மணிமாடகூடங்கள் நிரை நிரையாயுள்ள நீட்சியான தெருவீதிகளையும், இரத்தின வியாபார முதலான நாலாவித உயர்தர வியாபாரங்கள் செய்யும் ஸ்தலமாகிய கடைவீதிகளையும், பாபுல் முகம்மதிய்யா வென்னுங்

கோட்டைவாசலேயும், கடந்து அதன் அருகாக உள்ளதும், வாளே மீன்கள் எழுந்து வெடிபாயக்கூடியதுமாகிய அகழி மரப்பாலத்தை யும் தாண்டிப்போனூர்கள். திருமதினப் பட்டணத்தின் எல்லே மறைந்த உடனே, ஹலாத்தவர்கள் ஏறிய பஞ்சகல்யாணியானது தன் ஜாதியின் வழக்கம்போல் படபடப்பான அக்கினி வேகத் திடன் கால்களில் சண்டமாருதச் சூறுவளிபோன்ற கடின நடை யையும், இருதயத்தில் மகா திடக்காத்திரத்தையும், சரீரத்தில் வெண் ணுரை பிரளுகின்ற வியர்வையையும், கண்களில் அக்கினி சுவாலே யையும், வாயில் இடிமுழக்கம் போன்ற கடிவாளக்கடியையும், கனேப்பினேயும், வால் முருக்கினேயும், காட்டி நடந்தது. அவ்விதமான நடனக்குதிரையின் குளம்படியின் கீழிருந்து எழும்பிய புழுதியா னது ஆகாயமண்டலமெல்லாம் போய்ப்படர்ந்து, எட்டுத்திக்குத் திகாந்த கோடிகோணங்களேயும் மறைத்து, ஆயிரம் கிரணக் கண்களேயுடைய சூரிய எல்லேயையும் திசைமுகந் தெரியவொட்டா மல் மறையச் செய்திற்று.

இவ்வித ஆரவாரத்துடன் ஹலாத்து அமீறுல் மூஉமினீன் அவர் கள் தங்கள் வாசநகரமாகிய திருமதினப் பட்டணத்தின் அடுத் தாண்மையாயுள்ள வளந்திய கோதுமைக் கொல்லேகளேயும், பேரீத் தஞ்சோலே, திராட்ச தோட்டங்களேயும் கடந்து அப்பால் கொஞ்சந் தூரஞ்சென்ற வுடனே, தாங்கள் எப்போதும் இடம் வலம் பிரியாமல் நத்திக்கொண்டிருந்த நமது வள்ளலாகிய நபிகள் சிகாமணி முகம் மது ஸல்லல்லாகு அலேஹிவஸல்லம் அவர்களே இருதயத்தில உருக் கத்துடன் நினேத்தவர்களாகச் சில பைத்துகள் சொன்னூர்கள். அந்தப் பைத்துகளின் அர்த்தமாவது இது:—

"உலகங்களேத் தண்ணீரின் பேரில் நிறுத்தி அவைகளில் இத் தாதி ஜீவகோடிகளேயும் படைத்துக் காப்பாற்றுகின்ற என் கிரு பையுள்ள றகுமானே! உன் எளிய அடிமையாகிய நான் இது கால பரியந்தம் ஒரு இமைப்பொழுதாவது விட்டுப் பிரியாமல் இருந்த எங் கள் நாயகம் முகம்மது நபியவர்களே விட்டும் பிரிந்து இவ்வளவு தூரம் வரும்படி செய்துவிட்டாய்? அதனூல் இந்த அபூபக்கருடைய இரு தயமானது தாயைப்பிரிந்த பால்குடி மதலேயைப்போல் தத்தளிக் கின்றது. அதிலும் ஒரு மனசு எங்கள் நாயகம் சர்தாரா'ய ஸல்லல்

லாகு அலேஹிவஸல்லம் அவர்களின் வரிசையான பாத சமுகத்தின் கண்ணே வாவென்று இழுத்து நிற்கிறது; மற்றொரு மனசானது, குபிரியத்தென்னும் இருட்டுக்கிடங்கில் ஆதரவில்லாமல் விழுந்து கிடக்கின்ற எனது குமாரனை எவ்விதத்திலும் கொண்டு வாராமல் திரும்பக்கூடாதென்று வைராக்கியம் பண்ணுகிறது. இவை இரண்டு பாதைகளிலும் எது கைருனதோ! அதை நீ செய்து வைப்பாய் என்று நான் உறுதிகொள்ளுகின்றேன். நீயோ! அல்லாவென்னும் மகா மகத்துவமும், வரிசையும் பொருந்திய திருநாமத்துடன் என்றென்றைக்கும் உண்ணுமல், தூங்காமல், சாகாமல் ஹாயத்துடன் இருந்து அரசாட்சி செய்கின்ற மகாப்பெரிய வல்லபகோடி திருஷ்டாந்தத்தை யுடையவன். நீ எங்கள் றப்பன், நீ எங்கள் றகுமான், நீ எங்கள் நபியவர்களைத் தீர்க்கதரிசனத் தூதாகவும், உலகங்களுக்கு அறை முளையாகவும், றகுமத்தாகவும், அனுப்பி அவர்களின் காரியாதிகள் அடங்கலுக்கும் உண்மையான உதவி செய்கிறவன். ஆனதாலே என் கண்மணியான குமாரனுகிய அப்துர் றகுமானுக்கு நேர் வழியைக் காட்டி உன் றசூலுடைய தீனளவில் வந்துவிடும்படியாக உதவி உன் கைருன கொடைகளில் நின்றும் எனக்கு நன்கொடை கொடுத்தருள்வாயாக" என்றிவ்விதம் பலபல மாதிரியாக அல்லாவையும், அவனுடைய றசூலையும் புகழ்ந்து முனஜாத்துக் கேட்டவர்களாக இன்னும் அநேகமெல்லாம் தங்கள் மனதுக்குள்ளே புலம்பிக் கொண்டு சில தூரம் போனார்கள். போகவே அந்த வழியில் தங்கள் பழய நகரமாகிய திருமக்காப் பட்டணத்தில் உள்ளவரும், தங்களுக்கு நிரம்பவும் அன்புள்ள சிநேகிதருமாகிய முர்றத்திபுனு இஸ்லான் என்பவர் எதிரேவரக்கண்டார்கள். அந்த முர்றத்திபுனு இஸ்லான் என்பவர் எப்பேர்ப்பட்டவர் என்றால் அவரைக் கொஞ்சஞ் சொல்லுகிறேன்.

---

## 4-வது அத்தியாயம்

### அப்துர் றகுமானுக்குக் கடிதங் கொண்டு போகுதல்.

முர்றத்தாகிறவர் மக்கத்தில் தீனுக்கு விரோதஞ் செய்த குறைஷி காபிரீன்களில் நின்றுமுள்ளவர். அன்றியும் அவர் கிழட்டுக்குதிரை, ஒட்டகம் முதலான மிருக ஜாதிகளை நல்ல மருந்துகளைக்கொடுத்துத்

தேற்றி ராஜாக்கள், வர்த்தகர்கள் இடம் கொண்டுபோய்நல்ல ஆதாய மான விலைக்கு விற்றுக் காலங்கடத்தும் தொழில் உள்ளவராக இருந்தார். இது மாத்திரம் அல்ல. இன்னமும் கலியாண வீடுகளில் அகடவிகடஞ் செய்வதிலும், அறபுபாஷையில் உள்ள சரித்திரம் எழுதுவதிலும், சபைகளிலிருந்து இன்பமாகப்பாடுவதிலும், நெருப்புப்பற்றுகின்ற பயங்கரமான யுத்தங்களில் நின்று சத்துருக்களின் பேரில் ஆயுதங்களைச் செலுத்துவதிலும், பெருங்களரிகளுக்குப் போஜனஞ்சமைப்பதிலும், அரசர்களிடத்தில் தூது கடிதங்கொண்டு போகுவதிலும்,மகாப்பேர்போன வல்லமைசாலியானவர். இப்பேர்ப்பட்ட முர்றத்தென்பவர் ஹலரத்து அமீறுல் முஉமினீன் அவர்களை வழியெதிரே சந்தித்து ஓ! என் அன்புள்ள சிநேகிதரே! குறைஷிகளில் நாயகத்தனமுள்ள அபூபக்கரே! நீர் நமது மூதாக்களின் சுய நகர வாழ்வையும், அங்குள்ள இன பந்துக்களான குறைஷிகளையும் அடியோடு வெறுத்து அந்த முகம்மதுடைய மாயத்தில் விழுந்து நெடுநாளாக என்போலொத்தவர்களுக்கெல்லாம் மனவேதனை செய்கிறீரே? அது உமக்கு நல்ல செய்கையாகத் தெரிகிறதா? சொல்லும்! என்று கோபத்துடன் அபயசப்தமிட்டுச் சொன்னர்.

முர்றத்தென்பவர் அறியாமதி கெட்டுச்சொல்லிய கோபவார்த்தையை ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹுஅன்கு அவர்கள் கேட்டு மனதில் அவர்பேரில் வைத்திருந்த சிநேகிதக்கிருபை நீங்காதவர்களாக அவர் முகத்தை நோக்கி ஓ, முர்றத்தே ! நீர் எங்கள் நாயகம் முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் சங்கை தெரியாமல் சொன்னதற்கு நான் உமது பேரில் மிகவும் துக்கப்படுகின்றேன். வல்லமையுள்ள றகுமான் உமக்கு நேர்வழி காட்டுவானாக. என் வாய்மொழியைக்கேளும். சகல ஜீவ சிருஷ்டிக்கர்த்தாவாகிய ஆண்டவன் எல்லா உலகங்களையும் படைப்பதற்கு முன்னே எங்கள் நாயகம் முகம்மது நபியவர்களை ஒரு துப்புறவான வெண்கிரணஜோதிப்பிரகாசம் பொருந்திய முத்து உடைய ரூபத்தில் அமைப்பித்து அப்பாலந்த முத்தை அருஷென்னும் கடவுளுதயபீடத்தின் தீபஸ்தம்பங்களின் நடுவே கொழுக்கி எத்தனை எத்தனையோ கோடா கோடி வருஷ காலங்களாக வைத்து அதன் சௌந்தரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பால் அந்த முத்தின் ரூபலாவர்ணி

யத்தைக்கொண்டே வானலோகம், சுவர்க்கலோகம், பூலோகம், பாதாளலோகம் முதலான உலகைகோடிகளையும், அவைகளிலுள்ள ஜீவகோடிகளையும், சூரிய சந்திரர்களையும், நக்ஷத்திராதிகளையும், கிரஹபூதங்களையும் உற்பத்திசெய்தான். இன்னும், அந்த வரிசையான நாயகமவர்களை இந்தப் பூலோகத்தில் மாநுட அவதாரத்தில் பிறப்பித்து மனிதர்களை நேர்வழியில் நடத்தாட்டும்படியான றசூலாக ஏற்படுத்தி வானவர்களுக்கு அரசராகிய ஜீபுரீல்அலைஹிஸ்லாம் அவர்கள் மூலியமாக சத்திய வேதமாகிய குர்ஆன்ஷரீபை இறக்கி வைத்திருக்கின்றான். அன்றியும் இதற்கு முன்னுள்ள தீர்க்கதரிசிகளான றசூல்மார்களுக்கெல்லாம், "ஐம்பது நேரம்" என்று நியமித்திருந்த தேவவணக்கம் என்னும் தொழுகையை எங்கள் நபியவர்களின் அரிய பெரிய தாட்சண்ணியத்திற்காக வேண்டி மிஃறாஜியுடைய இரவையில் அவன் திருசமுகம் அழைப்பித்து, அனேக திருவசனங்களும் பேசிப் புகழ்ந்து ஐந்து நேரம் தொழுகை யென்று கட்டளையிட்டு அனுப்பினான். அவர்களுக்கென்று ஒரு கலிமா இறங்கியிருக்கிறது. அதுவோ இந்த உலக சராசர ஜீவகோடிகளுக்கெல்லாம் மகா மூலமந்திரமாகவும், சரீரங்களுடன் கலந்துகொண்டிருக்கின்ற அட்சரகருவியாகவும் இருக்கின்றது. ஓ! முர்றத்தே நான் அந்த நாயகமவர்களின் அருமைபெருமைகளைபபற்றி என்னமாதிரியாகத்தான் வர்ணிக்கப்போகின்றேன், ஒரு விதத்தாலும் இயலாத காரியமாக இருக்கின்றது. சுருக்கமாகச்சொல்லவேண்டுமானால் அவர்களை அல்லாவுடைய றசூல் என்று மனதில் நிர்ணயமாக ஒப்புக்கொண்டு அவர்களின் கலிமாவைச் சொல்லி இஸ்லாமிலாகாதவன் எவனுமிருந்தாலுஞ் சரியே அவனெல்லாம் நீடூழிகாலம் அக்கினிப்பிரவாஹித்தெரிகின்ற நரகத்திற்கே இரையாகுவான்; என்று இவ்வளவும் அந்த முர்றத்துடைய செவிகளில் கரும்பு ரசத்தை எடுத்துவார்ப்பதுபோல நல்ல குளிர்ந்த வசனத்தோடும் சொல்லிக் காட்டினார்கள்.

ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன இனிமையான நல்வசனத்தை அந்த அறிவிற்சிறந்த கல்விமானாகிய முர்றத்திபுனு இஸ்லான் என்னும் குறைஷியானவர் கேட்டு தமது மனதில் வெகு நேரம்வரையிலும் வைத்து ஆலோசித்து முகமெல்லாம், செந்தாமரை புஷ்பம்போல் மலர்ந்தவராக,

ஹுலரத்தவர்களை நோக்கி அபூபக்கரே! நீரோ மக்கத்தில் சிறப்பும், நாயகத்தன்மையுமுள்ள தகுதிவந்தர்களில் நின்று மஹா கீர்த்தியுடையவர்; கனந்தங்கிய உமது இருதயத்திற்கும், அறிவுக்கும் ஏற்கும்படியாக அந்த நபியை அல்லாவுடைய றசூலென்று ஒப்பி ஈமான் கொண்டு இஸ்லாமாகி இருப்பதினாலே உம்மைவிட நான் அவ்வளவு யூகசாலியாக இருக்கவில்லை. ஆனதாலே நீரிருக்கும் அந்த தீனில் இதோ நானும் வருகிறதற்கு உம்முடைய வரிசையான கரங்களை எதிர்பார்க்கிறேன் நீட்டும் உமது வலது கையை என்று சொல்லி உடனே ஹலரத்தவர்களின் கையைப்பற்றிப் பிடித்தவராக கலிமாவைச் சொல்லி இஸ்லாமிலாகிவிட்டார்கள்; குறைஷி யறபிகளில் மகா வல்லமை பராக்கிரமசாலியாகிய முர்றத்து ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் வாயால் நபிநாயகத்தைப் புகழ்ந்து வாக்கும், மனமுமொத்துச்சொல்லிய கலிமா சப்தத்தை ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்கள் தங்கள் காதாரக்கேட்ட அந்தக்ஷணமே இருதயமெல்லாம் ஆனந்தப்பரவசத்தால் குளிர்ந்தவர்களாக இது சங்கதியை நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்குக் கொண்டுபோய்த் தெரியப்படுத்திவிட்டு அப்பால் ஒரு பயணம் திரும்பிவரலாம் என்று மனதில் திட்டப்படுத்திக்கொண்டு முர்றத்து ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் குதிரையை மதினவின் திசையளவில் திருப்பி நடத்தினர்கள். அவ்விதம் வைத்த ஆசையுடன் ஹலரத்தவர்களும், முர்றத்தி புனு இஸ்லான் அவர்களும் கடின நடையையுடைய குதிரைசவாரி செய்த பாதை சாரிகளாக உன்னத சிகரங்களையுடைய கணவாய்களையும், கானகங்களையுங் கடந்து திருமதினமா நகரம்வந்துசேர்ந்து வானவர்களான மலாயிகத்துகளும் பணிவிடை செய்து நிற்கின்ற நமது வுள்ளலான ஆண்டவர்கள் முகம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திவ்விய சந்நிதானம் போய்க் கண்டார்கள்.

வரிசையும், மகத்துவமும் பொருந்திய நபிகள் பெருமானர் அவர்களின் பொற்பிரகாசம் தங்கிய இருபாதாரவிந்தங்களையும் முர்றத்து றலியல்லாஹு அன்கு கண்டவுடனே, தமது இருதயமெல்லாம் ஆநந்தப்பரவசம் கொண்டவர்களா ஓ! இப்பேர்ப்பட்ட

தெய்வத்தன்மையுள்ள நாயகத்தின் சமுகம் அடுத்திருந்து இவர்களைக்கொண்டே இருலோக வாழ்வையும் பெற்றுக்கொள்ளவேண்டி நம்முடைய நல்ல விதிதான் இங்கே இழுத்துக்கொண்டு வந்தது? இதுவே நமக்கு நல்ல பாக்கியம்! என்று மனசுக்குள்ளே உறுதிப்படுத்திக் கொண்டு நபியவர்களின் பாதங்களில் தலையை வைத்தவர்களாக முத்திமுகந்து, மனங்கசிந்து அழுது ஆண்டவர்களின்சிறப்பான இராஜ வானுவாகு என்கின்றவலது திருக்கையைப்பற்றி பிடித்துக் கலிமாவைச் சொல்லி சங்கையும், பெருமையுமுள்ள சத்தியமார்க்கமாகிய தீனில்இஸ்லாமிலாகி விட்டார்கள். இஸ்லாமிலானமுர்றத்திபுனு இஸ்லான் அவர்களை நோக்கி நபிநாயகமவர்கள், குறைஷிகளில்பராக்ரமம் பெற்றவரே அல்லாகுத் தஆலா உமது காரியங்களை வலுப்பமாக்கி வைப்பானாக" என்று ஆசீர்வதித்தார்கள். அப்பால் அரபிகளின் வழக்கம்போல் முர்றத்தவர்களை அசுஹாபிமார்களெல்லாம் முஸாஹபா என்னும் ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். அப்பால் ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபியவர்களை நோக்கி. தாம் வழியில் முர்றத்தைக் கண்டதும், அவருடனே நடந்த ஸம்பாஷணைகளும், அவர் கலிமாச் சொன்னது முதலான வரலாறுகளைச் சொல்லி விடைபெற்று தமது அன்பரான முர்றத்தையும், அழைத்துக்கொண்டு தங்கள் மாளிகைக்குப் போய் அலங்காரமான ஓர் பீடத்தில் இருக்கச் செய்து அறுசுவை பதார்த்த வகைகளுடன்றொட்டிகளும், பொறிக்கறிகளும், கொண்டு வந்து பரத்தி, பால் பழாதிகளுடன் விருந்துகொடுத்து உல்லாசமான உபசரணை வார்த்தையுடன் உடலும் உயிரும்போல் கலந்திருந்து பேசிக்கொண்டிருக்கும்போதே எமன் ராஜியத்தின் அரசனாகிய அஸ்மத்து றசூலுல்லா பேரில் உள்ளீமான் கொண்டு கணக்கிடக்கூடாத பெருந்திரவியங்களையும், பட்டுபட்டாடைகளையும், வாகனாதிகளையும் ஆளடிமைகளையும் காணிக்கையாகச் சேகரித்து தன் மகனையும், ஆயிரக்கணக்கான சுத்தவீரர்களையும், அழைத்துக்கொண்டு மதினாவின் பாதையாக வந்ததும், அப்படி வரும் பரிவாரங்களைத் தமது குமாரர் அப்துர்றகுமானுடைய சேனை வீரர்கள் வந்து எதிர்த்து எமனிகளான வீரர்கள் எல்லாரையும் துண்டங்கண்டங்களாக வெட்டி மேற்படி காணிக்கை திரவியம்

முதலிய தளவாடங்களை யெல்லாம் கொள்ளைபாடி மேற்படி அஸ்மத்தையும், அவன் குமாரனையும் சிறையாகப் பிடித்துக்கொண்டு போய் அப்துர் றகுமான் சமுகத்தில் விற்பாட்டினதும், அதற்கு அவர் அஸ்மத்தை இல்லாத பொல்லாத வசைமொழிகளைச் சொல்லித் துரத்திவிட்டு அஸ்மத்துடைய மகனை கடுஞ்சிறையில் போட்டுவிட்டதும், அஸ்மத்து வந்து நபியவர்களிடம் அழுது புலம்பிச் சொன்னதும் படிபடியாகச் சொல்லிக் காட்டினார்கள். காட்டி இதற்காகத்தான் நான் பிரயாணப்பட்டுப் போகின்ற வழியில் தங்களைச் சந்தித்தேன். தாங்கள் கலிமாச் சொன்ன சந்தோஷத்தாலே அதையும் மறந்துவிட்டு நபியவர்களின் சமுகத்தில் தங்களைக் கொண்டு வந்து காட்டவேணு மென்கின்ற பேராசையால் திரும்பிவிட்டேன். இதற்கென்ன ஆலோசனை செய்கிறது, சொல்லுங்கள்? என்று கேட்டார்கள். ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டதும் உடனே முற்றத்து சொல்கிறார்கள் ஓ! தோழமையானவரே! வானவர்களுக்கு அரசராகிய ஜிபுறீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குச் சற்குருவென்னும் பட்டம் பெற்றவரே! குறைஷிகளில் மகத்துவமுடையவரே, தாங்கள் அருமைப் புத்திரராகிய அப்துர் றகுமானுடைய சரித்திரமடங்கலும் எனக்கு நன்றாய்த் தெரியவரும் அவருடைய சவிஸ்தாரத்தைப்பற்றி விபரமாகச் சொல்கிறேன் கேளுங்கள் என்று பின் வருமாறு சொல்கின்றார்.

கவிதை. விருத்தம்.

* நாகநிற நௌவல்கனி நாகமது தூஉவ
நாகநெடு கைகொடுவெண் நாகமலர் சிந்த
நாகமணி மாதரிடு நாகமணி யாவும்
நாகமளவேயொளிரு நாகமதின் மீதே.

இந்தக் கவிதையின் பொருள் இது :—

ஆகாய நிறத்தினையுடைய நாவல்மரத்தின் பழங்களைக் குரங்குகள் உதிர்க்கவும், வெள்ளைப்புன்னை மரத்தின் புஷ்பங்களை நீண்ட தும்பிக்கைகளையுடைய மதயானைகள் உருவிச் சிந்தவும், (அவைகளுக்

* இந்தக் கவிதையானது, செய்யிதத்துப்படைப்போர் என்னும் காவிய புராணத்தில் உள்ளது.

கிடையில்) கிடந்து பிரகாசிக்கின்ற சர்ப்பநிதிகளான மாணிக்கராசிகளை வெள்ளைச் சீலைகளை உடுத்திய அமங்கிலப் பெண்கள் கண்டு ஆசையுடன் எடுத்தணையவும், அந்த மணிகளின் இணையில்லாத ஜோதிப்பிரகாசமானவைகள் மேகமண்டலம் வரையிலும் ஒளிவு செய்யும்படியான (ஜபலுஸ்ஸ¬பியான் என்னும் ஒரு பிரமாண்டமான) மலையிருக்கின்றது. எ-று.

அந்த மலையின்மேலே ஆனை, குதிரை, இரதம், ஆள் என்னும் சதுரங்க சேனைகள் அடங்கிய கோட்டை கொத்தளங்களுடன் ஒரு சோபிதமான பெரிய பட்டணமிருக்கின்றது. அந்தப் பட்டணத்தில் அபாசுபியான் என்கின்ற ஒரு கொடிய பாதகத்தனமுடைய அரசன் இருந்து அரசாட்சி செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு செய்யிதத்து என்னும் பெயருள்ள ஒருசௌந்தரியவதியானகுமாரத்தியுண்டு அந்த இராஜ குமாரத்தியை தங்களுடைய மகனாகிய அப்துர்றகுமானுக்கு விவாஹம் செய்துகொடுத்து அதினிமித்தியத்தால் அவருக்கு இளவரசு பட்டமும் கட்டி அவரையே தற்காலம் இராஜிய பரிபாலனம் செய்யும்படி செய்து இராஜாங்கத்திலுள்ளஸமஸ்த காரிபாதிகளையும் தானிருந்து மேற்பார்வை செய்துகொண்டு வருகின்றான். அந்த மாய்கையின் மனவேட்கையாலே தங்களுடைய குமாரர் அப்துர் றகுமான் என்பவர் அவனையேதாயுந்தகப்பனுமாகஉறுதிகொண்டு அவனிருக்கும் கெட்ட வழியாகிய விக்கிரஹ ஆராதனை செய்து குபிரியத்தில் முழுகிப்போய் கைசேத வழியில் அகப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்" என்று சொல்லிக் காட்டினார்கள். முர்றத்திபுனு இஸ்லான் றலியல்லாஹ¬ அன்கு அவர்கள் சொன்னசங்கதியை அமீறுல் முஉமினீன் அபூபக்கர் சித்தீக்குரலியல்லாஹ¬ அன்குஅவர்கள்கேட்டு அடங்காத மனக்கொதிப்புள்ளவர்களாகச் சற்று நேரம்வரையிலும் தங்கள் மனதுக்குள்ளே நுழைந்து யோசனைசெய்து அப்பால்முர்றத்துரலியல்லாஹ¬அன்குஅவர்களைப்பார்த்து * "ஹபீபே! இந்தவிஷயத்தில்தாங்கள் தான் ஒருநல்ல யோசனைசொல்லவேண்டும். அதுபோல நான்நடக்கின்றேன்" என்றுசொன்னார்கள்அதற்குமுர்றத்துரலியல்லாஹ¬அன்ஹ¬ அவர்கள் ஹலரத்தவர்களை நோக்கி, யர்செய்யிதீ! இதற்கு யோசனை ஒன்றுமில்லை. தாங்கள் கையெழுத்துள்ள ஒரு கடிதம் தரு

* ஹபீபு என்பது சினேகிதரைச் சொல்கின்றது.

வீர்களானுல் நான் அதைக் கொண்டுபோய் அந்த அரசனுக்குத் தெரியாதவண்ணமாக பல உபாயஞ்செய்து அப்துர் றகுமானுக்குக் காட்டி அவருடைய இருளான மனதை அதில் நுழைய வைத்து அதற்குப் பதில் மொழியாக அவர் கைப்பட ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு வெகு சீக்கிரத்தில் திரும்பிவிடுகின்றேன். அதன் பின்னுலே மற்ற ஆலோசனைகள் செய்துகொள்ளலாம் என்று சொன்னுர்கள். ஹலரத்தவர்களும், இதுவே முத்திரைப்பதமான கருத்தென்று மனதில் திடப்படுத்திக்கொண்டு முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்களை அங்கேயே இருக்க வைத்துவிட்டு அங்கிருந்து வள்ளலாகிய நபிகள் சிரோமணி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் வாசனை செய்கின்ற மதீனத்து ஜாமி ஆமஸ்தென்னும் தேவாலயத்திற்கு வந்து நாயகமவர்கள் சந்நிதானத்தைக் கண்டு முர்றத்து சொல்லிக்காட்டிய வைபவங்கள் அனைத்தும் சொல்லி இதற்குத் தேவரீர் தங்கள் யோசனை எப்படி யிருக்கின்றது? என்று பணிதலுடன் கேட்டார்கள். பெருமான் அவர்களும் அதையே நல்ல யோசனையென்று அங்கிகாரஞ் செய்ததாலே அங்கிருந்து விடை வாங்கிக் கொண்டு அளவில்லாத ஆநந்தப்பரவசராக முர்றத்திடம் வந்து, தங்களின் ஏகமனைவியாரும், ஆயிஷா, அஸ்மா, ஆமிர், அப்துர் றகுமான் ரலியல்லாஹு அன்கு அவர்களின் தாயாருமாகிய உம்முல் முபாறக்காத்து என்னும் நாயகியவர்களைத் தங்கள் அருகில் அழைத்து வைத்துக்கொண்டு மகனுர் அப்துர் றகுமானுடைய ஸ்விஸ்தாரங்களை ஒன்ருென்ருக எடுத்துப்போதித்து அப்பால் அவர்கள் இருபேருமாக ஆலோசனை செய்து மனஉருக்கத்துடன் சுத்தம்பண்ணிய ஒரு தும்பை யாட்டுத்தோலில் கடிதம் எழுதத் துடங்கினுர்கள்.

## கடிதம்.

“பிஸ்மில்லாஹிர் றகுமானிர் றஹீம்” நேர்வழியில் நடப்பவர்களுக்கு இருலோகத்திலும்வெற்றி நல்மாராயம் உண்டாவதாக. இருதயக்கொழுந்தாகிய கண்மணியான என் மகன் அப்துர் றகுமானுக்கு கஉபாவை உடைய நாயன் நல்வழியைக் காட்டி விடுவானுகவும். பின்னர் தகப்பனுகிய குறைஷிகளில் சங்கைவான்களின்குடும்பத்திலுள்ள அபூபக்கர் சித்தீக்கில் நின்றும் ஸலாமும், சுபசோபன துஆவும் செய்து எழுதிக்கொள்ளும் செய்தியாவது என்னவென்ருல்:— தாய்

தந்தைகளாகிய எங்களுடைய உடலுக்கு ஒரு உயிர்போலுள்ள அருமையான மகனே அப்துர்றகுமானே! மதயானை போன்ற வீரபராக்ரமம் பொருந்திய நீ சிறுகுழந்தையாக இருக்கும்போது மக்காவில் கஃபாத் திருவிழாப் பார்க்க வந்த துஷ்டனாகிய உன் மாமன் உன்னைத் திருடிக்கொண்டு போனதிலிருந்து இதுகால பரியந்தம் உன்னை வயிற்றில் கர்ப்பமாக உண்டாகி பத்துமாதஞ் சுமந்து அநேக வருத்தங்களுடன் பெற்றுப் பேரிட்டு அமுதூட்டி வளர்த்த உன் தாயாரும், நானும், உன் தமைக்கையாராகிய ஆயிஷாவும், இன்னும் நம்மவர்களைச் சேர்ந்த இனபந்துக்களான குறைஷிகளும், ஹாஷிமிகளும், துக்கக்கடலில் முழுகினவர்களாக அநேக தேசாதிதேச மெல்லாம் போயலைந்து தேடியும் காணாமல் துயரப்பட்ட சிந்தையுள்ளவர்களாக ஊண் உறக்கமும் இல்லாமல் சரீரம் மெலிந்துவிட்டோம்.

கண்மணியான மகனே! இன்னமும் கேள். நாங்கள் ஆதரவு வைத்து அண்டியிருக்கின்ற நேர்வழியான தீனுல் இஸ்லாம் என்னும் இணையற்ற மெய்மார்க்க றசூலாகிய எங்கள் நாயகம் முகம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நபியென்று ஒப்புக்கொண்ட எமன்கட்டிலுள்ள அரசனையும் அவன் மகனையும் சிறைவாரி, அவன், நபியவர்களுக்குக்காணிக்கையாகக்கொண்டுவந்த திரவியங்களையும், தானியாதிகளையும் வஸ்திரங்கள் முதலிய ஜீவராசிகளையும் கொள்ளைகொண்டு அவனுடன்வந்த பலாட்டிய சேனைகளாகிய எமனிகளையும் நீயும் உன் குதிரைவீரரும் போய் விழுந்து அநியாயக்கொலை செய்து நிர்மூலம்பண்ணி விட்ட பாதகத்தை அந்த அரசன் வாயால் அழுதுச்சொன்ன வாக்குமூலத்தால் நான் கேட்டறிந்த உடனே என் ஈரலெல்லாம் கரிகி, சரீரமெல்லாம் துளும்பிற்று. மகனே! நீ உலகத்தில் மனிதனாகப்பிறந்தான்களில் மிகவும் சங்கைவான்களின் கோத்திரத்திலுள்ள ஆண்சிங்கமாக இருந்தும், ஹைவான்களின் குணமுடைய துஷ்டனாகிய ஒரு காபிர்பயலை யடுத்திருக்கிறபடியாலே அவனுடைய ஞானமில்லாத துஷ்டகுணமானது உன்னையும் வந்து தொட்டு உன்னை இப்பேர்க்கொத்த அநீதச்செயலைச் செய்யும்படியாகத் தூண்டிற்றல்லவா? இந்தக்கருமத்தை உன்மனதிற்குள்ளவே, நீயே கவனித்துப்பார்! அப்போது அது நல்லதென்றும், அறிவில்லாத ஈனச்செயலென்றுந் தானே தெரியவரும். மகனே! அந்த எமன் அரசனானவன் உன் மூர்

க்க செயல்களை வந்து எங்கள் நாயகம் முகம்மது நபியவர்கள் சந்நிதானத்தில் அழுது சொன்ன பரிதாபத்தை நாயகம் அவர்கள் கேட்டவுடன், நீயும், நீயிருந்து அரசுசெய்யும் பட்டணமும் நெருப்பாய்ப் பற்றி எரிந்து நாசமாய்ப்போகும்படியாகச் சாபமிடக் கையை வானத்தளவில் உயர்த்தினார்கள். அந்த நோக்கத்தைநான் கண்டு உடனேநாயகமவர்களின் பாதத்தில் விழுந்து அழுது முறையிட்டுக் கெஞ்சி என் அருமை மகனை அவ்விதம் செய்யப்படுகிறது எனக்கு சஹிக்குமா! அறிவில்லாத குணத்தில் இருந்து ஒருவன் பாவஞ் செய்தால் அவனை மன்னித்து நேரில் வழியில் கொண்டுவருகிறதற்கு உரிய முயற்சிகள்செய்ய வேண்டுமே அல்லது அவனைக் கெடுத்துவிடலாமா? நாயகமே! தேவரீர் என் பிள்ளைபேரில் துஆச்செய்து அவனை நேர்வழியில் கொண்டுவரும்படியாக அல்லாவிடம் முனாஜாத்து செய்யுங்கள் என்று மன்றாடி நின்று கேட்டுக்கொண்டதாலே அவர்கள் என் முகத்தைப் பார்த்துக் கிருபையுடன் கோபத்தைத் தணித்துவிட்டார்கள். இல்லாவிட்டால் எங்களுக்கு விரோதிகளாக பதுறில் வந்து கூடின பதினாயிரம் கணக்கான குறைஷிகளைப்போல் நீயும், உன்மாமனும், உன் பட்டணமும், உன் சேனைகளும் இதுவரையிலும் கொடிதான ஆபத்தினுள்ளாகி அந்தநாசமடைந்திருப்பீர்கள் என்பதற்கு ஒரு எள்ளளவும் சந்தேஹமேயில்லை

இரத்த ஊனம் மாறாது வீசும் வல்லபம் பிடித்ததாலே தடம் பாய்ந்து போயிருக்கின்ற வீரக்கைகளையுடைய சிங்கேறு போன்ற மகனே! அப்துர் றகுமானே! உன்னைத் தேடித் தவமிருந்து வயிறுரச் சுமந்திருந்து வேதனையுடன் பெற்ற தாயானவளுக்கும், தந்தையான எனக்கும் கிடைத்த பலாபலன் இதுதானோ! இதுதானோ!! எங்கள் கைசேதமான விதியை! நான் என்ன சொல்வேன். மகனே! இன்னுங் கேள். உன்னுடன் பிறந்த தமைக்காராகிய ஆயிஷா வென்னும் மஹா இலட்சண ஸௌந்திரியவதியை அந்தத் தீர்க்க தரிசன முத்ராங்கத்தையுடைய வள்ளலாகிய நபியவர்களுக்கு நான் விவாஹம் செய்துகொடுத்திருக்கின்றேன். அதனால் அந்த நாயகபதியான ஷபீஉல் முதுனபீன் காத்திமுல் முறுஸலீன் அவர்கள் எனக்கொரு மருமகனாகவும், உனக்கொரு மச்சானாகவும் இருக்கின்ற பொருட்டாலே நமக்கு இந்தப் பூலோகத்திலும் இணை சொல்லப்படாத தலை

மைத்தனமும், நல்ல பேறும், வரிசையும் வாழ்வும் கிடைப்பது மல்லாமல் சுவர்க்கலோகத்திலும் மனிதர்களுக்கெல்லாம் அதிக மேன்மையான சுகந்த மாளிகைகளும், பதவிதரஜாத்துகளும் சக்கின்றி கிடைக்கப்பெற்றுக்கொண்டோம்.

கருணையான மகனே! அந்த நாயகமவர்களின் அற்புதாதி சரித்திரமென்னும் சமுத்திரத்தில் நின்றும் ஒரு சிறிய துளி யெடுத்துத் தெறிப்பதுபோல் கொஞ்சஞ் சொல்கிறேன் கேள். இந்த ஆலத்தைப் படைப்பதற்கு முன்னாலே அவர்களை அல்லாஹுத் தஆலா தன் சமுகத்தில் ஒரு ஆணிமுத்தின் வடிவத்தில் அமைத்துவைத்து அதில் நின்றே அண்டாதிபுவன சராசரகோடி ஜீவாத்மாக்களையும் உண்டு பண்ணி அப்பால் அந்தச் சிருஷ்டிப்பொருள்களைக் காப்பாற்றி நேர் வழியில் கொண்டுவரும்படியாக அநேக நபிகளை அவர்களின் ஸிபத்தில் நின்று அனுப்பிக் கடைசியாக நபிபட்டங்களைத் தமாம் செய்யும் பொருட்டு அவர்களை முத்திராங்க நபிநாயக நுபூவத்து றிஸாலத்து முதலிய அநேக அத்தாக்ஷியுடன் றகுமத்தாக அனுப்பியிருக்கின்றான். இதுவன்றியும் அல்லாஹுத் தஆலா தன் பூரணக் கொலுவாகிய அறுஷினிட்த்தில் அவர்களை வரவழைக்க, ஒரே இரவையில் மிஃறுஜி என்னும் எழுவான் பிரவேசம் சென்று அறுஷேமு அல்லாவில் தங்கள் காலிவிட்ட பாதரக்ஷையுடன் நடந்து சென்று றகுமானுடன் கலந்து ரஹஸியம் பன்னீராயிர மொழிகளையும் பராசியம் பன்னீராயிர மொழிகளையும் ஸம்பாஷித்து தமது உம்முத்துகளுக்காக வேண்டி அநேக உபகாரமான நேமகட்டளை விதிவிலக்குகளையும் கொண்டுவந்திறங்கி இருக்கின்றார்கள். இன்னும் அவர்கள் எப்பேர்ப்பட்ட அற்புதமஹா புருஷரென்றால், அவர்களின் பாதங்கள் பூமியில் பட்டதுமில்லை. அவர்களுடைய மலஜலாதிகளை யாருங் கண்டதுமில்லை. அவர்களின் மேன்மையான சரீரத்தில் மனுஷாள்களுக்குரிய வழக்கம் போல ஈ, எறும்பு முதலியவைகள் உட்கார்ந்ததுமில்லை. அவர்களின் நாசியில் சளியாவது, கண்ணில் பூழையாவது, வாயில் கோழையாவது ஒருபோதும் வந்ததில்லை. சரீரத்தில் எவ்விடத்திலாவது சொறி அரிச்சல் முதலான துர்விநியோகங்களும் இல்லை. இன்னமவர்கள் கைகால்விரல்களில் நகங்களாவது தேகத்தில் உரோமங்களாவது பிறக்கும்போதிருந்த அளவைவிட அதிகமாக

வளர்ந்த நமில்லை. இன்னும் அவர்கள் தங்கள் முகத்தின்முன்னால் வரக் கூடியவர்களை எவ்வளவு தூரம் வரையிலும் பார்க்கின்றார்களோ! அவ்வளவு தூரம் தங்கள் பிறடிக்குப் பின் பாகங்களிலும் நடக்கின்ற கருமங்களைப்பார்த்து உள்ளது உள்ளது போல் சமாசாரம் அறிவிக்கின்றார்கள். அன்றியும்அவர்கள் தங்கள்இருப்பிடம் பெயர்ந்து எங்கையாவது போக நாடிநடந்தார்களாகில் உடனே ஒரு கரியமேகமானது குளிர்ந்த பிரகாசத்துடன் அவர்களின் தலைக்கு மேலே வந்து கவிந்து நிழலிட்டுக்கொண்டுபோகின்றது. இன்னும் அந்த நாயகத்தின் திருமேனியில் உலகத்தில் யாரும் கண்டுங்கேட்டுமிராத ஒருவித அற்புதகரமான கஸ்தூரிவாசமானது காதகாத வழித்தூரம் கமழ்ந்துகொண்டிருக்கின்றது. அன்றியும், அவர்களின் இருபுயங்களிலும் மொஹரே நுபுவத்தென்னும் நபிப்பட்டத்தையுடைய இலாஞ்சனை முத்திரையானது பதிந்து ஜிலுஜிலுப்பான தெய்வஜோதி செய்கின்றது. இன்னமும் அவர்களின் சங்கைபெற்ற சிரமானது அறுஷுக்கு மேலும் அவர்களின் இருபாத கமலங்கள் தஹ்த்த தஹுவென்னும் பாதாளத்திலும் பதிந்துபோயிருக்கின்றது. அவர்களுக்கென்று கலிமாவென்னும் மூலமந்திரமொன்று இறங்கியிருக்கின்றது. அதுவோ! இந்த அண்டபுவன சராசரங்களுக்கு அஸ்திவாரமாகவும், மனுஷ ஜென்மங்கள் கடைத்தேறும்படியான தெய்வ ஸாஸனக்களஞ்சியமாகவும் இருக்கின்றது. இதுமாத்திரந்தானா? இன்னும் அந்த நாயகத்தின் மகத்துவங்களைப்பற்றி உலக முடிவுபரியந்தம் பிரசங்கிக்கவும், எழுதி முடிக்கவும், மனிதனாகப் பிறந்தான் எவனுக்கும் திராணி காணாதே. அப்பேர்ப்பட்ட நாயகபதியான வள்ளலாக இருக்கிறார்கள்.

அருமையான என் மகனே! அந்த நாயகத்தைத் திட்டமாக அல்லாவுடைய றசூலென்று ஒப்புக்கொண்டு அவர்களுக்குரிய கலிமாவைச் சொல்லி தீனுல் இஸ்லாமில் வந்து சேராத எவனும் அல்லா உடைய முனிவினால் உண்டாகிய கொடிய நரகத்தில் தள்ளப்பட்டவனாக ஊழியூழிகாலம் வரையிலும் கிடந்து நெருப்பால் எரியப்பட்டு வேதனைப்படுவான் என்பதற்கு யாதொரு சந்தேகமேயில்லை. ஆகையினாலே என் ஈரற்கொழுந்தாகிய செல்வ மகனே! பாலாட்டியம் பொருந்திய அப்துர்றகுமானே! நீ நம்மைப்போல் மனிதனால் சித்திரிக்கப்பட்ட கேவலம் கல்லாலும், செம்பாலும் உள்ள சிலாரூபங்களை

வணங்கும் ஈனஸ்திதியை உன் மனவைராக்கியம் என்னும் கூரிய வாளால் அறுத்து உதறிவிட்டு இமையா நாட்டத்தையுடைய சவுந்தரிய ரூபலாவர்ணிகளான ஹூறுல் ஈன்களை நன்கொடையாகப் பெறக்கூடிய பொன்னுலகமாகிய சுவர்க்க வாழ்வுகளைச் சம்பாதிக்கும் சத்திய மார்க்கமாகிய நம்மள் தீனில் வந்து சேர்ந்து விடவேண்டும். அல்லாகுத் தஆலா உனக்கும் உன் ஔலாதுகளுக்கும் கியாம நாள் பரியந்தம் வெற்றியையும் தறஜாத்தையும் உதவி புரிவானாகவும். ஆமீன்'' என்று இவ்வளவும் எழுதி மற்றொரு வரியில் நமது நபிநாயகமவர்களின் துஆவும், ஸலாமும் எழுதி ஆசீர்வதிப்புடன் கையொப்பமிட்டுக் கடிதத்தை மடித்து ஒரு அழகிய பச்சை மக்மல் பட்டில் வைத்துப்பொதிந்து, அதன்மேலே தங்கள் கணையாழி மோதிரத்தின் முத்திரையும் வைத்து மேற்படி கடிதத்தைச் சற்று நேரம்வரையிலும் தங்கள் கையில் வைத்து அல்லாஹுத் தஆலாவைத் தியானம் பண்ணினவர்களாக முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் கையில் பிசுமில்லாஹிர் றகுமா நிர்றகீம்என்றுசொல்லிக்கொடுத்துச்சொல்கின்றார்கள்.

கனம்பொருந்திய முர்றத்தே! நீரிந்தக் கடிதத்தைக்கொண்டு அந்தப் பயங்கரமான பெருத்த காவலுள்ள பட்டணத்திற்குள் நுழையும்படியான உபாயத்திற்கு உமக்கொருவர் தந்திரஞ்சொல்ல வேண்டியதில்லை. நீரோ அரசரிடம் போய்வரக்கூடிய ராஜதந்திரங்களுக்கும், உபாயங்களுக்கு மூலமானவரென்று நான் நன்றாய் அறிந்திருந்திருக்கிறேன். ஆனபடியால் நீரந்தப்பட்டணத்திற்குள்ளே சென்று என் மகன் அப்துர்றகுமானைச் சந்தித்தீரானால் உம்முடைய உபாய தந்திர யூகத்தால் அவனைச் சூட்சியமாக அழைத்துக்கொண்டு ஜனங்கள் சந்தடியில்லாத சூதானமான ஒரு இடத்தில் இருக்கவைத்து முதலாவது நம்மள் குறைஷிக்கோத்திரத்தின் சங்கையும், என்னுடைய பிரக்யாதிபெற்ற தலைமைத்தனத்தையும், றசூல் நாயகமவர்களின் அற்புதங்களையும் இங்கே நம்முடன் இருக்கும்அலி,மிகுதாது,அப்பாஸ்,காலிது முதலிய சுத்தவீரர்களின் யுத்தப்பெருமை முதலிய ஸமஸ்த சங்கதிகளையும்நல்லமதுரமானமொழிகளாகஎடுத்து அவனுடையமனமானது கவ்வும்படியாகச் சொல்லி அப்பால் அந்த வாசக நயத்தில் அவன் இருதயங் கொழுகி வருகிற ஜாடையானதுஉமக்குத் தெரிந்தவுடனே பளீரென்று இந்தக் கடிதத்தை யெடுத்து அவன் கையில் கொடுத்து

விடும்;என்று உறுதியாகச்சொல்லி, அப்பால் மூர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்களைப் பிரயாணம் அனுப்பும்படியான எத்தனஞ் செய்து ஸவாதா என்னும் வழித்தீன்களும் கைச்செலவுக்கென்று கொஞ்ச தங்கக் காசுகளும், விலைமதிக்கத் தகுந்த விபாசுகளென்னும் உடைமானங்களும் இடைக்கட்டில் சொருகி மறைவாக வைத்துக்கொள்ளும்படியாக ஒரு குற்றுடைவாளும், தங்களிடம் வெகு அருமையாக இருந்த ஜவ்ஹரு வென்னும் ஒரு பஞ்சகல்யாணிப் போர்க்குதிரையும் நன்கொடையாகக் கொடுத்துச் சொல்லமுடியாத அறுசுவை ருசிகரமுள்ள விருந்துங்கொடுத்து அனேக அருமை பெருமையான உபசரணை வார்த்தைகளுடன் பிரயாணவிடை கொடுத்தனுப்பினார்கள். ஹலரத்து அமீறுல் மூஉமினீன் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கு அவர்கள் தங்கள் சிறப்பான திருக்கரத்தால் எழுதிக்கொடுத்த கடிதாசியை; மூர்றத்துறலியல்லாகு அன்கு அவர்கள் சர்வ மரியாதையுடன் இரண்டுகைகளையும் ஏந்தி வாங்கிக் கண்மேல் தலைமேல் வைத்து முத்திக்கொண்டு றசூலுல்லா அவர்களுக்காக வேண்டி ஹலரத்தவர்கள் தௌர்மலையில் இட்டிருந்த நாகவளையைக் குதிங்காலில் அடைக்க அப்பால் அந்த வளையிலுள்ள சாப்பமானது வெவ்வியகோபத்துடன் விழுந்து தீண்ட, கொடிய விஷமானது தலைக்கேற அப்பால் றசூல் நாயகத்தின் பொருட்டால் சௌக்கியமடைந்த அற்புதத்தையுடைய பாதாரவிந்தத்தில் விழுந்து முத்தி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு ஹலரத்தவர்களின் மாளிகையை விட்டும் வெளியில் வந்து குதிரையின்மேல் சவாரிசெய்து இணையற்ற ஒரு பதினறடி வேங்கைப் புலியைப்போல் திருமதினமாநகரத்தின் படைவீரர்கள், வர்த்தகர்கள், அன்சாரி முஹாஜிரீன்கள் என்னும் மஹா சங்கைமான்கள் வீற்றிருந்து வாழ்கின்ற வீதிகளையும், கடைத்தெருக்களையும் கடந்து நகரத்தின் கடைசியில் சூழ வளைந்திருக்கும் கொத்தள வரிசைகளையும், அலங்கங்களையும் கடநது பாபுல்முகம்மதியா வென்கின்றகோட்டை வாசல் வழியாக வெளிப்பட்டுக் குதிரையை அக்கினிவேகத்துடன் நடத்தினார்கள். நடத்தி மதினமாநகரத்தின் அருகாக வளமுடன் இருக்கின்ற கோதுமை வயல்களையும், குயில்கள் இனிய குரலோசையுடன் கூவுகின்ற பூங்காவனங்களையும், செந்தாமரைப் புஷ்பஜாதிகள் பூத்துக் கிடக்கின்ற தண்ணீர்த் தடாகங்களையும் கடந்து, அக்கினி

சுவாலை யடிக்கின்ற ஒரு கொடிதான பாலைநிலத்தில் போய்ச் சேர்ந்தார்கள். சுபுஹானல்லா! முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் போய்ச்சேர்ந்த பாலை நிலமென்னும் கானகத்தை நான் என்ன சொல்லட்டும்! அதைப்பற்றி அந்த முர்றத்து றலியல்லாஹு அவர்கள் சொல்கின்ற வாக்கு மூலமாவது :“ நான் ஹலரத்து அபூபக்கர் சித்தீக்கில் நின்றும் கடிதாசி வாங்கிக்கொண்டு போன பாதையை ஒரு போதும் நான் கண்டறியமாட்டேன். அப்பேர்ப்பட்ட புதியவழியாக இருந்தது. நான் அந்தப் பாதையை அடுத்து என் வாகனத்தை நடத்திக்கொண்டுபோகும் போதே என்மனசில் நாம் அந்தஷெய்தான்கள் இருக்கக்கூடிய ஜன்னத்தூர்றிலா வென்னும் பட்டணத்தை யடுத்து எவ்விதத் தந்திரத்தால் அப்துர்றகுமானைப் போய்க்காண்பது! என்று பலதும் யோசனை பண்ணினவனாக வந்து ஒரு பாலைவனத்தைக் கண்டேன். அந்த வனத்தில் நானும், என் குதிரையும் பட்ட அவஸ்தையை ஒரு விதத்திலுஞ் சொல்லமுடியாது. அங்கே அடிக்கடி வீசிய நெருப்பு சுவாலையின் வெப்பத்தால் என் அழகிய ஜாதிக்குதிரையானது மேனி மெலிந்து நிறமாறிப் போயிற்று. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் அந்தப் பாலையை ஒரு பூலோக நகரமென்றும், அப்பால் நான் கடிதங் கொண்டுபோன அந்தப் பட்டணத்தை ஒரு பூலோக சுவர்க்கமென்றும் திட்டமாகச் சொல்வேன்” என்பதே. முர்றத்து றலியல்லாஹு அன்கு இவ்விதம் சொல்லியிருகின்றதைப் பார்த்தால் அந்தப் பாலை வனமானது மனிதனானவன் மசினாலே நினைக்கப்படாத அத்தனை கொடுமையுள்ளதாக இருந்திருக்கலாம் என்பதற்குச் சந்தேகமே கிடையாது.

பார்த்தீர்களா? இந்த இஸ்லாமுடைய விஷயத்தில் அந்தக் காலத்திலுள்ள கனவான்களான சங்கமான்களெல்லாம் தலையிட்டு இப்பேர்ப்பட்ட கொடுமையான சரீரகஷ்டங்களை எடுத்துக்கொண்டதுமல்லாமல் எவ்வளவோ பெரும் பிரயாசைகளுடனே தங்கள் தங்கள் பூஸ்திதிகளையும் தொலையவைத்து எத்தனை எத்தனையோ யுத்தக்களங்களில் தங்களின் உயிரையும் ஒரு பொருட்டென்றெண்ணாமல் கொடுத்துப் பரலோக வாழ்வை நன்கொடை பெற்றுக்கொண்டார்கள். இந்தக் காலத்து நமது முஸ்லிம்களான புண்ணியவான்களோ! ஒரு கொஞ்சமாகிலும் அல்லா றசூலுடைய அச்சமின்றி

இஸ்லாமுடைய விஷயத்திற்கு உதவி யொத்தாசை செய்யாமலும், தொழுகை நோன்பு முதலிய நேமகட்டளைகளை எடுத்து நடக்காமலும், றசூலுல்லா உடைய சரித்திரங்களைக்கேட்டு மனம் உருகாமலும், புதுநாகரீகங்களான வீண்டம்பங்களிலும், நாடகவேடிக்கைகளிலும், கள், ஹளும், ஸினு முதலிய துர்விநியோகங்களிலும் போய்விழுந்து சுவர்க்க வாழ்விழந்த நாய்கள்போல் பெரும் பாவங்களைச் சம்பாதிக்கின்றார்கள். அல்லாஹுத் தஆலா இவர்களுக்குச் சரியான கூலி கொடுக்காமல் ஒருபோதும் விடவேமாட்டான்.

ஆகவே முர்றத்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேற் கூறிய கொடுமையான பாலைவனத்தை நிரம்பவும், கஷ்டமான மரணாவஸ்தையுடன் கடந்து அப்பால் வரக்கூடிய திடர்வனங்களையும். கானையாறுகளையும், துஷ்டமிருகங்களான கடுவாய், புலி, கரடி, யாழிகளிருந்து அபயசப்தமிடுகின்ற மலையடிச்சார்புகளையும், மதயானைகள் தங்கள் குட்டிகளுடன் விளையாடித் திரிகின்ற கணவாய்களையுங் கடந்து சாயுங்கால வேளையாகி பொழுது அஸ்தமிக்கும் நேரத்தில் ஒரு பிரவாஹமான நதியைக் கண்டார்கள். கண்டு அங்கே சென்று வாகனத்தைவிட்டும் கீழிறங்கி குதிரைக்குத் தண்ணீர் காட்டி புல்மேய விட்டுவிட்டுத் தங்களிடம் இருந்த வழித்தீன் சாமான்களையெடுத்துக் கொஞ்சம் பசியடங்க சாப்பிட்டு அந்த இடத்தில் செய்யவேண்டிய தொழுகை முதலிய நேமகடன்களை நிறைவேற்றி சற்று நேரம் அங்கே இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். இதற்குள்ளே தாங்க இயலாத மூடுபனியும், மையிருட்டும் வந்துவிட்டன. அது கண்டு முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் ஒரு வெப்பமான கம்பளியை யெடுத்துப் போர்த்து மூடினவர்களாக நாம் இதைவிட்டு எழுந்து வந்த வேலையைப் பார்க்கலாம் என்று மனதிலெண்ணிக்கொண்டு உடனே குதிரையின்மேல் சவாராகி அன்று இரவு முழுதும் துஷ்ட ஜந்துக்கள் சஞ்சாரஞ்செய்கின்றஅந்த நதிக்கரையின் மேலேயே குதிரையை நடத்திக் கொண்டு போனார்கள். போய் சூரிய உதயமாகி விருக்ஷங்களில் கீச்சாங்குருவிகள் கூவி, கிழக்கு வெளுத்து நிலங்கிறி வருகிற சமயத்தில் தங்கள் எதிரே ஒரு பிரமாண்டமான மலையைக் கண்டார்கள். லாஹவ்லா வலா கூவ்வத்தா இல்லாபில்லாஹில் அலீயுல் அலீம், என்னும் இந்தக் கைசேத வாக்கியத்தைச் சொன்னவர்களாக அந்த

ருவதத்தின் மேல் ஏறத் தொடங்கினார்கள். ஏறிச்செல்லும் கரடு முரடான பாதை யெல்லாம் சிங்கம், புலி, சிறுத்தை, வால் முறுக்கிக் கொண்டு அங்குள்ள கருங்கற் பாறைகள் வெடிக்கும்படியாகக் கெர்ச்சிக்கிற அபயங்களையும், செங்குரங்கு களுடன கரிய மந்திகளுங்கூடி மரக்கொப்புகள் வளையும்படியாக விளை யாடித் திரிகிற காட்சிகளையும், இன்னும் அந்த மலையின் கெபிகளி லுள்ள நீர்ச்சுனைகளில் வாளைமீன், சேற்கெண்டை மீன்கள் குதித்து டபீர்! டபீர்!! என்று சப்தித்து தண்ணீரை யுழக்குகின்ற அதிரோசை களையும், பலபல ஜாதி விநோத புஷ்பங்கள் பூத்து தேவேந்திர கொலு வைப்போலிருக்கின்ற ஜலவாகிகளையும், வெண்கரடிக்கூட்டங்கள் தங்கள் குட்டிகளுடன் பாலை மரங்களிலேறிக் கனிகளைப் பிதிர்த்துத் தின்னுகின்ற ஒழுங்கு வொய்யாரத்தையும், இன்னும் அந்த மலையினி டத்து நாலாபக்கங்களிலும் வளைந்து வளைந்தோடுகின்ற அருவியங் கரைகளில் வலம்புச்சங்குகள் தவழ்ந்து திரிகின்ற விமரிசையையும், அவைகள் ஈன்ற ஆணிமுத்துக்களை அன்னப்பட்சிகள் தங்கள் முட் டைகளென்றெண்ணி இறகுக்குள் வைத்தணைத்து அடைகாக்கின்ற அற்புதத்தையும், இன்னும் சில திசைகளில் அகில், சந்தனம், ஆசினி, தேக்கு, குங்குமம் முதலிய உயர்சாதி மரங்களையும், இன்னும் சில திசைகளில் கடம்பு, சண்பகம், குருந்தை, நாவல், கொய்யா, தேமா, புளிமா, கூவிளம், கருவிளம், நெல்லி, வாழை, மாதுளை, நாரத்தை, எலுமிச்சை, கமலா, இலந்தை, பலா, முந்திரிகை முதலிய கனிவிரு க்ஷங்கள் ஜில்லென்று குளிர்ந்து குலுங்கிய பழக்குலைகளுடன் ஓங்கி வளர்ந்து நிற்கவும், அவைகளின் பசிய கிளைகளின்மேலே மேகங்கள் வந்து அடைகிடந்து முழங்குவதையும், இன்னுமொரு திசையில் பச்சைக் கலாபரக்கைகளையுடைய ஆண்மயில்கள் பசிய சந்திரபிரபை ஜொலிக்கும்படியாக நடனமாடித் திரிகின்றதையும். இன்னும் வாயால் சொல்லி முடியாத அநேக அளவில்லா வளங்களையும் கண்டு மனதில் அல்லதாகுத் ஆலாவைப் புகழ்ந்து ஷுக்ரு செய்துகொண்டு இன் னும் சில தூரம் அந்த மலையில் நடந்தார்கள். நடக்க நடக்க ஒரு விசித் திரவிநோதமான கோட்டையும், கொத்தளமும் அதனுள்ளே நீட்சி யான வரிசைகளில் எண்ணிறந்த மணிமாட கூடங்கள் தெரிவதையும். அந்த மணிமாடங்களில் நவரத்தின கஜிதங்களை வைத்தழுத்திய தங்

கக்கலசங்கள் பதித்து சந்திரனைப்போலும், மின்னலைப்போலும் பிரகாசஞ் செய்வதையும், இன்னும், அந்த மாடங்களின்மேல் அப்பட்டணத்து ஸ்திரீ ஜனங்கள் தங்கள் சைவலங்களை யொத்த நீண்ட கூந்தல்களை அவிழ்த்துச் சரியவிட்டு, புள்ளிமான்களைப்போலும், அழகிய மயில்களைப்போலும் சாயலாக இளநீர்போன்ற தங்கள் ஸ்தன பாரங்கள் குலுங்கி யாடும்படியாக வோடியோடிப் பந்தடித்து விளையாடும் சோபிதங்களையும், இன்னும் சிற்சில ராஜமாளிகைகளிலும், யுத்தாயுத சாலைகளிலும், ராணுவ கழகங்களிலும் ராஜாங்கக் கொடிகள் நின்று மேக சாலங்கள் ஓடியாடுவதுபோல் படபடவென்று பறந்தாடிக்கொண்டிருக்கும் காம்பீரத்தையும், மகா திடகாத்திர சாலியாகிய முர்றத்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு தங்கள் மனதில் எவ்வஸ்துவையும் படைத்துக் காப்பாற்றும் பரிபூரணக்கர்த்தாவாகிய அல்லாவையும், அவனுடைய றசூலாகிய நமது நபி நாயகமவர்களையும் உறுதியாக நினைத்துக்கொண்டு மேற்படி கோட்டைவாசலைக் கடந்து பட்டணத்துள்ளே பிரவேசித்தார்கள். பிரவேசித்து அங்குள்ள ராஜவீதிகளின் வழியாக நடந்தார்கள். அந்த வீதிகளில் எங்கே பார்த்தாலும், சரக்குப்பொதிகள் ஏற்றிய கோவேறு கழுதை, ஒட்டகம், குதிரைகளின் கூட்டமும், அந்நாட்டு வளைந்து முருக்கிய கொம்புகளையுடைய மோட்டெருமைக் கூட்டங்களும், பணைத்த பால் மடிக்களையுடைய பசுமாட்டு மந்தைகளும், தும்பையாட்டுக்கிடைகளும், இராஜ அதிகாரிகள் அம்பாரிவைத் தேறி வரும் மதயானைத்திரள்களும், வெளியூர்களிலிருந்து வியாபாரிகள் கொண்டுவரும் பலவித தானியங்களேற்றிய ஒட்டக காபிலாக்களும் ஒன்றோடொன்று நெருங்கி எள்ளிட இடமில்லாமல் போய்வந்து கொண்டிருக்கும் சந்தடியையும், இன்னும் சில வீதிகளிலே மளிகை உப்பரிக்கைகளின் மேல் மயில்களைப்போல் நின்று தங்கள் கூந்தல்களை வார்ந்து முடிக்கின்ற வாலிப ஸ்திரீகளின் வாளாயுதம் போன்ற காமக் கண்களைக்கண்டு அங்கு நடந்து செல்லும் பாலிய புருஷர்களெல்லாம் அப்படியே சேர்ந்து ஸ்மரணையற்று மோகவெறியுடன் சுழன்று விழுவதையும் கண்டு கொண்டே போனார்கள்.

அன்றியும் அந்தப் பட்டணத்திலுள்ள பாரிய வர்த்தகர்கள் முதலிய ஸமஸ்தமான ஜனங்களும், மனிதர்களால் உண்டுபண்ணப்

பட்ட. சிலாவிக்கிரங்களைப் படைத்த நாயன் என்று நிர்மூடத்தனமாய் ஸாஷ்டாங்கம் செய்து வணங்கி வருகின்ற படுதோஷிகளாயிருந்த துடனே இன்னின்ன விதந்தான் நடக்கவேண்டுமென்கின்ற ராஜ கட்டளை நிர்ப்பந்தமின்றிப் பிரஜைகளை மிருகஜாதிகளைப்போல் மனம் போன போக்கில் விட்டிருந்தபடியால் வீதிக்கு வீதி மூலைக்கு மூலை தாளி தாளியாக வைத்து விற்பனை செய்கின்ற முந்திரிகைச்சாரா யங்களை மானுவாரியாய்க் குடித்து லாகிரிகொண்டு ஸ்திரீகளோடு புரு ஷர்களும், புருஷர்களோடு ஸ்திரீகளுமாகக் கட்டிப்புரண்டு செய் கின்ற துர்க்கிருத்தியங்களை முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர் கள் தங்கள் கண்களால் பார்க்க வெட்கித்தவர்களாக முகத்தில் முக மூடி யிட்டுக்கொண்டு விரைவாகக் குதிரையை நடாத்தினார்கள்.

அழிச்சாட்டியம் பொருந்திய காபிரீன்கள் கோடிக்கணக்காய் நிறைந்துபோய் இருக்கின்ற அந்தப் பட்டணத்தின் தெருவீதிகளில் நடக்கும் ஒவ்வொரு அதிசயங்களையும் தூங்காத மன ஊக்கத்தையு டைய மகாபராமக்ரசாலியான முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர் கள் கண்டுகொண்டு போகும் வழியிலே அங்கோரிடத்தில் இரா ணுவ வீரர்களில் நின்றும் அநேகர் ஆயுததாரிகளாக முர்றத்து றலியல் லாஹு அன்கு அவர்களருகில் வந்து கூடி யார்காணும் ஓ! கிழவரே! மூர்க்கந் தங்கிய சுத்த வீரியர்கள் உருவிய வாட்களுடன் உலாந்தித் திரிகின்ற இப்பட்டணத்தில் கொஞ்சமாகிலும் உள்ளச்சமில்லாமல் வாகன சவாரியுடன் வருகின்றீரே நீரெந்த நகரத்தையுடையவர்? இங்கே எந்த மனிதரைத் தேடி, அல்லது என்ன வியாபாரத்தை நாடி வந்தீர்? சொல்லும்! என்று முறுமுறுப்புடன் கேட்டார்கள். இவ் விதங்கேட்ட சுத்தவீரர்களின் கோபக்குறியையும், முகத்தோற்றத் தையும், அவர்கள் பிடித்திருக்கும் கூரிய வாளாயுதங்களின் பிரகா சங்களையும் முர்றத்திபுனுஇஸ்லான் அவர்கள் கண்டு ஒரு கொஞ்ச மாகிலும் தங்கள் இருதயத்தைப் பேதலிக்கவிடாமல் அல்லாவை யும் அவனுடைய றசூல் நாயகத்தையும் மனதுள் வைத்து தைரி யப்படுத்திக்கொண்டு ஒரு உபாய தந்திரத்தால் அந்தக் காவல் வீரர்களை நோக்கி "ஓ! சுத்த வீரத்தில் இணையற்று வாழ்கின்ற சங் கைமான்களே! நானுகிறவன் ஷாம் தேசத்தில் மிகப் பேர்போன ஒரு பெரிய வர்த்தகனாக இருந்து அனேகமான ஜனங்களுக்கு உதவியாள

ளுக இருந்தேன். அப்படியிருக்குங்காலத்தில் என் கெட்டகாலமானது என்னை ஒரு பெரிய வர்த்தக விஷயத்தில் தலையிடச் செய்து அதில் வந்த நஷ்டத்தால் பெருவாரியான நாணயமுங்கெட்டு என் வியாபார மும் அடியோடு தொலைந்து கொஞ்சமீத மிருந்த வீடுவாசல்களையும் நான் கொடுக்கவேண்டிய கடன்காரர்களுக்கு அரையுங் குறையுமாய்க் கொடுத்துவிட்டுக் கையில் ஒரு காசுமில்லாத நிர்ப்பாக்கியவாளனுக என் இனமுறை ஜனங்கள் முகத்தில் முழிக்கப்படாதென்று சகலரை யும் வெறுத்து இக்கெதியாக நான் வருகின்ற வழியில் என் சினேகித ரொருவர் என்னைக்கண்டு ஐயோ! உபகாரியான தோழனே! உமக்கும் இந்த விதி வந்ததா? என்று விசனித்தவராக நான் ஏறிவரும்படியாக இந்தக் குதிரையைக்கொடுத் துதவினர். அந்த தருமவாளன்கொடுத்த இந்த வாகனத்தின் உதவியால் நான் பலபல நாடு நகரங்களையுஞ் சுற்றித்திரிந்து பார்த்து வரும்போது, இந்தப் பட்டணத்தில் அபாசுபியான் என்னும் கனந்தங்கிய ஒரு மகா கிருபையான அரசன் இருக்கிறன் என்றும், அந்தப் புண்ய பூபதி வாடிக்கருகி நிற்கும் பயிர் களுக்கு உதவியான குளிர்ந்த மழைநீரை மேகமானது வருஷிப்பது போல் உலகத்திலென்போ லுள்ள தரித்திரவான்களுக்கெல்லாம் இல்லை யென்காமல் திரவியதானஞ்செய்து ஆதரித்து வருகின்றன் என்கிற சங்கதியைப் பலபேர்களின் வாயாலும் கேள்விப்பட்டு வெகு தூரத்தி லிருந்து, பசியாலும் பட்டினியாலும் கஷ்ட பாடு பட்டுக்கொண்டு வருகின்றேன். ஆனதாலே கனதியுள்ள துரைமக்களான ஐயாமார் களே! இளஞ்சிங்கராசிபோல் சீற்றத்தையுடைய பலாட்டிய வீரர் களே! இந்தக் கிழவன்பேரில் சற்று மனமிரங்கி அந்த கிரீடாதிபதி யான அபாசுபியான் என்கிற அரசனிடம் என்னைக் கொண்டுபோய் சேர்த்துவிடுவீர்களானல் உங்கள் எல்லோருக்கும் நம்மை ரக்ஷித்துக் காப்பாற்றுகின்ற குபல் என்னும் தம்பிரானுடைய கிருபாகடாட்ச மும், என்னுடைய ஆசீர்வாதமும் உண்டாகும்" என்று நல்ல விநய மான நயமுகத்தோடும் மதுரரஞ்சிதமான எளிய வார்த்தைகளோடும் சொன்னர்கள்.

முர்றத்து றவியல்லாகு அன்கு அவர்கள் சொல்லிய அபிநயமான வார்த்தையை அந்தக் காவல்வீரர்கள் கேட்டு ஒருவருக்கொருவர் கலந்து பேசினவர்களாக மகா தயா சிந்தையோடும் வாரும் பெரிய

வரே! அப்படியே நீர் சொன்ன அரசனிடம் கொண்டுபோய் விடுகி றோம் என்று சொல்லி அழைத்துக்கொண்டு போய் இராஜ கொலுவுக்குள் விட்டார்கள். அங்கே வெண் முத்துகோமேதக மணியாலும் சரங்கள் தொங்கவிட்டு பவளங்கால் நிறுத்தப்பட்ட கட்டில்கள் அநந்தம் பிரகாசிக்கவும் கண்டு மறுபடியும் சில தூரஞ்சென்று சபா ஆஸ்தான மண்டபத்துள்ளே போய்ப் பார்த் தார்கள். அங்கே இருபக்கங்களிலும் மகரதோரணங்களும், வெள்ளி யாலும், பொன்னாலும் இழைத்த சித்திரப்பந்தல்களும் இட்டு பச்சை மக்மல்பட்டினாலும், தீபாஜுப்பட்டினாலும் கசீதாவேலைமானஞ்செய்த மேற்கட்டிகளுங்கட்டி இரத்தினகஜிதபரமானிகள் விரித்து அதன் மேலே பொன்னாலும், வெள்ளியாலும் இருபத்தையாயிரம் நாற்காலி கள் போட்டு அவைகளின்மீதில் படைத்தலைவர்கள் முதலிய மந்திரி பிரதானிகளும், பட்டணத்திலுள்ள பிரக்யாதி பெற்ற முதலாளிமார் களும் வீற்றிருக்கவும், ஆஸ்தான முகப்பில் சந்திரவடிவுள்ள இளம் பருவமான நாட்டியப் பெண்கள் அநந்தம்பேர் நின்று குளிர்ந்த சங்கீ தப்பாடல்கள் பாடி நடனஞ் செய்யவும், இன்னும் அநந்தம் வஜீகர ஸ்திரீகள் தங்கள் மிர்துவான கைகளில் ரத்தின தீபங்களை ஏந்தி வாழ்த்திக்கொண்டு நிற்கவும், அங்கே இருபுறத்திலும் ஏந்திப்பிடித்த ஆயுதபாணிகளுடன் ஆயிரங் கணக்கான சுத்தவீரர்கள் விருதுகட்டி யஞ் சொன்னவர்களாகச் சுற்றிவரவும் எதிரே மாணிக்கம், நீலம், வைரங்களால் ஜோடிக்கப்பட்ட சிம்மாசனத்தின்மேல் ஒரு இணையில் லாத இராஜசிங்கம் வீற்றிருப்பதுபோல் அந்தக் கொடிய பாதகனை அபாசுபியான் என்னும் அரசன் உல்லாசத்தோடு மல்லாந்து சாய்ந்து கொண்டிருக்கவும் கண்டு மனப்பிரமை கொண்டவர் களாக் நின்றார்கள். நிற்கும்போது, அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்த காவல்வீரர்கள் முறர்த்து றலியல்லாகு அன்கு அவர் களை நோக்கி ஓ! கிழவனாரே! என்ன காணும் சும்மா நிற்கின்றீர்? அரசனுக்கு நேரே தலைசாய்த்து ஸாஷ்டாங்கஞ் செய்தெழும்பும்? என்று சயிக்கினை செய்தார்கள். அதைக் கேட்டவுடனே முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்கள், தங்கள் இருதயத்தில் அல்லாவையும், அவனுடைய றசூல் நாயகம் அவர்களையும் நினைத்துக்கொண்டு நெடுஞ்சாண் கிடையாக் விழுந்து கிடந்தார்கள். சற்றுநேரம் பொறுத் ததின் பிறகு "யார்காணும் பெரியவரே தலையை உயர்த்தி எழுந்து

நில்லும்" என்று அரசன் உத்திரவு செய்தான். அப்பால் தலையை உயர்த்தி எழுந்து அங்கோர் ஒழிந்த மூலையைப்பார்த்து வொதுங்கி நின்றார்கள். சற்றுநேரம் சென்றதும் ஆசனத்தில் உல்லாச ஸம்பிரம மாகச் சாய்ந்திருந்த அரசன் முர்றத்திபுனு இஸ்லான் றலியல்லாகு அன்கு அவர்களை நல்லக் கூர்க்கப் பார்த்தவனாக நிமிர்ந்தெழுந்து "ஓ வயோதிபரே! உம்மைப்பார்த்தால் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்த பெரிய குடித்தனத்திலுள்ள மனிதனைப்போல்தோன்றுகிறது; நீரிந்தப் பட்டணத்தளவில் வந்த காரணமென்ன? சொல்லும். என்னாலே ஏதும் ஆகவேண்டிய காரியாதிகள் உண்டுமேயானால் உடனே செய்விக்கி றேன்" என்று கேட்டான். அது கேட்டு முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்கள் அரசனை நோக்கி இந்த உலகத்தில் எதிர்த்து வரு கின்ற மகுட மன்னர்களுக்கெல்லாம் ஒருசிங்கேறு போன்ற மக ராஜராஜ கெம்பீரரே! என்போலொத்த அனாதிகளுக் கெல்லாம் ஆதார மான கற்பகத்தருவே. மேகமும் பின்னடையும்படியாகக் கொடை கொடுக்கின்ற கையையுடைய்வரே! நான் வந்தது வேறொன்று மல்ல. தங்களின் மருமகனாகிய அப்துர் றகுமானைக் கண்டு அவரென்னை இவ் டம் வரச்சொல்லிய பிரகாரம் அவரிடம் கிடைக்கின்ற பரிசுகளைப் பெற்றுக்கொண்டு போகலாம் என்று வந்தேன். அவ்விதம் வந்த நல்ல முகூர்த்தாலே தேடக்கிடையாத அரும் பொருளாகிய தங்களுடைய தரிசனமுங் கிடைக்கப் பெற்றுக் கொண்டேன்- இதுவே எனக்கு என்றென்றைக்கும் போதுமான இருதயாநந்த திர வியமாக ஆய்விட்டது. என்று இன்னும் சிலசில சொல் வண்மை பொருள் வண்மைகள் அடங்கிய வசன சம்பிரதாயங்களைக்கொண்டும் சொன்னார்கள்.

இவ்விதம் முர்றத்துறலியல்லாகு அன்கு அவர்கள் சொன்ன சங்கதியை அபாசுபியான் என்னும் அரசன் தன் செவிகளிற் கேட்ட போது அவனுடைய இருதயக் கமலமானது பளீ ரென்று விரிந்து குளிர்ந்து அளவில்லாத மகிழ்ச்சியுடன் அங்கு ராஜ கொலுவில் நின்ற ஒரு ஊழியக்காரனைக் கூப்பிட்டு "இந்தப்பெரியவர் ஏதோ ஒருபெரிய வர்த்தகனாக் விளங்குகிறது! நமது மருமகன் படைக்குப்போன இடங்களிற்கண்டு நேசஞ் செய்த உறவினனிலே ஒருவனா. அவன் இவர்பேரில் ஆசையன்பு வைத்து நான் இருக்கும் இன்ன பட்டணத்

224884

திற்கு வந்து என்னைக் கண்டால் தகுந்த மரியாதை செய்கிறேன் என்று வாக்களித்ததின்மேல் பாபம்! வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறார் போல் தெரிகிறது! ஆனதால் இவரை சீக்கிரம் அழைத்துக்கொண்டு போய் நமது மருமகன் அப்துர் றகுமான் இருக்கும் மாளிகையில் விட்டு விட்டு வா!" என்று கட்டளை பண்ணி அனுப்பி வைத்தான். அவ்விதமே அந்த ராஜ ஊழியக்காரன் முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்களை நல்ல உபசாரமான வார்த்தையுடன் அழைத்துக்கொண்டு போய் அப்துர் றகுமான் அவர்கள் இருக்கின்ற மணிமாட கூடத்திற்குள்ளேசென்று "இதுதான் நீர் நாடி வந்த எங்கள் கனந்தங்கிய இளவரசர் வாழ்கின்ற திவ்விய கொலுமண்டபம்!" என்றுசொல்லி விட்டு விட்டுத் திரும்பினான். உடனே முர்றத்திபுனு இஸ்லான் அவர்கள் அந்த மாடகூடத்திற்குள்ளே நல்ல தைரிய கெம்பீரத்துடன் சென்று பார்த்தார்கள். பார்க்க அங்கே சதுராகாரத்திற்கு இரண்டாயிரம் பளிங்குத்தூண்கள் நிறுத்தி பசும்பொன்னால் சுவர் எழுப்பிய விநோத விசித்திரமான ஒரு கொலுபண்டபம் தெரியவும், அதன் விலாப்பக்கங்களிலெல்லாம் செந்தமரைப்புஷ்ப ஜாதிகள் விரிந்து தண்ணீர் நிறைந்த ஜலவாகி ஒன்று வளைந்தோடிக்கொண்டிருக்கவும், மண்டப மருங்கெல்லாம் சேனைத்தலைவர்களும், இராணுவ அதிகாரஸ்தர்களும் ஏந்திய ஆயுததாரிகளாக உலாவிக்கொண்டு திரியவும் எதிரே மரகத ரத்தினத்தாலான ஒரு பீடாசனமிருக்கவும், அதன் மேலே வெப்பந்தங்கிய அக்கினி கதகதப்பினைக்கொண்ட கோபக்கண்ணையுடைய ஆண்சிங்கம் ஒன்று வீற்றிருப்பது போல அப்துர் றகுமான் என்னும் இளவரசர் வீற்றிருக்கவும் கண்டு ஆநந்தமுற்று அதிசீக்ரம் பீடத்தின் சமுகமடுத்து, ஸலாமும், சுபசோபனமும் சொன்னார்கள்.

அப்துர் றகுமான் அவர்கள் முர்றத்து றலியல்லாஹு அவர்களைப் பலதடவைகளிலும் கண்டு சிநேகித பான்மையுள்ளவர்களாயிருந்த அறிமுகத்தினாலே உடனே இன்னாரென்று தெரிந்து "ஸலாத்துக்குப் பிரதி கூறிவிட்டு மறுஹபா என்னும் சந்தோஷ வார்த்தை கூறி "முர்றத்தே! வாருங்கள்! வாருங்கள்!! வெகு தொலை தூரத்திலிருந்து நான் இருக்கின்ற மலைமேலே வந்த காரணம் என்ன? தாங்கள் மாத்திரந்தான் வந்தீர்களா? அல்லது வேறுதுணை ஆட்களுமுண்டா?

வாகனமேறி வந்தீர்களா? அல்லது பாட்டைசாரியாக வந்தீர்களா? சொல்லுங்கள். இன்று எனக்கு நல்ல நாள் வந்து வாய்த்துக்கொண்டது. அருமையான சிநேகிதரை வரக்கண்டேன். சந்தோஷம்! சந்தோஷம்!!" என்று சொல்லி அவர்களுக்கு இருக்க ஆசன முதலான சங்கைகள் செய்தார்கள். அதன் பிறகு, முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் அப்துர் றகுமான் அவர்களை நோக்கித் தங்களின் வசனசம்பிரதாயத்தால் அவர்கள் மனமகிழும்படியான அநேக விமரிசையான புகழ்ச்சிகளும், ஆசிர்வாதமுஞ் செய்து அத்துடன் தாங்கள் வந்த சமாசாரங்களில் அப்போது சொல்லக்கூடியவைகளைச் சொல்லி சொல்லக் கூடாதவைகளை மறைத்துக்கொண்டார்கள். அப்பால் அப்துர் றகுமானவர்கள் முர்றத்து றலியல்லாஹு . . ஹுடன் வெகுநேரம் வரையிலும் பலபல ஸம்பாஷணைகளும் ஸப்பாஷித்துக்கொண்டிருந்து அப்பால் அங்கு நின் ஒரு பணிவிடைக்காரனை அழைத்து "இவர்களைக் கூட்டிக்கொண்டு நமது மனைவியாகிய செய்யிதத்தென்னும் ராகுமாரத்தியின் கன்னிமாட கூடத்திற்குச்சென்று நல்ல அறுசுவையான பதார்த்தங்களோடும், இனிமையான பழவர்க்கத்தீம்பான வகைகளோடும், அருமையான உபசார வார்த்தைகளோடும் விருந்துகொடு" என்று கட்டளையிட்டு அனுப்பினார்கள். அதே பிரகாரம் அந்தப் பணிவிடையாளன் முர்றத்து றலியல்லாஹு அன்ஹு அவர்களை வாருங்கள்! என்றழைத்துக்கொண்டு கனந்தங்கிய மகாராணியாகிய செய்தத்து அம்மாள் வாழ்கின்ற கன்னிமாடஞ் சென்று அங்கு ஏற்கனவே இரத்தினக்கம்பளம் விரித்திருந்த ஒரு அலங்காரமான ஹாலில் இருக்க வைத்து எவ்ராலும் இவ்வளவுதான் என்று மதிப்பிட்டுச் சொல்ல முடியாத நவரசவகையான விருந்துகொடுத்து வேண்டுமான கறிவகை முதலியவைகளைப் பரிமாறிக்கொண்டு நின்றான். முர்றத்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் முன்பில் கொண்டுவந்து பரத்திபிருக்கின்ற விருந்து வகையராக்களையும், பானவகைகளையும் கண்டு இனியில்லாத ஆநந்தப்பரவசத்துடன் அல்லாவைப் புகழ்ந்து ஷுக்குர் செய்தவர்களாகக் கைமணக்க வாய்மணக்கத் தின்றுகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கும் சமையத்தில் அப்துர் றகுமான் அவர்களும் தங்கள் தர்பார் வேலை முடிந்து அங்கு வந்து விருந்து தின்

கிற முர்றத்து அவர்களை நல்ல வாய் நிறைந்த உபசரணை வார்த்தையுடன் தின்னுங்கள்! உண்ணுங்கள்!! என்று சொல்லிக்கொண்டு நின்றூர்கள். அப்துர் றகுமான் அவர்களிருக்கும் ஆநந்தக்குறியை முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் கண்டு இதுதான் நம்முடைய ரகசிய சங்கதியை வெளிப்படுத்தவேண்டிய சமயம்! என்று எண்ணிக்கொண்டு முன்னர் ஹலரத்து அமீறுல் உமினீன் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லியனுப்பிய பிரகாரம் வெகு சாமார்த்தியமான தொடர்மொழிகளாகச் சில மர்மங்களை வெளியாக்கி அதில் அவர்கள் மனசு கவ்வி உருகி நிற்கும் நிலையைக் கண்டு அவர்களின் தந்தையாகிய அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமைத்தனமும், இன்னும் றசூலுல்லாவின் பிறப்பு வளர்ப்பு முதலான அற்புதங்களும், ஆயிஷாநாயக முதலான சகோதரர்களின் சங்கதிகளும், ஒவ்வொன்ருக எடுத்துச் சொல்லி மறுபடியும் அவர்களை நோக்கி அரசரே! தாங்கள் சிறு குழந்தையாக மக்கத்தில் தங்கள் வீட்டின் வாசலில் இருந்து தவழ்ந்துகொண்டிருக்கும்போது தங்கள் மாமனுகிய அபாசுபியான் தங்களைத் திருடிக்கொண்டு வந்து வளர்த்து கலியாண முதலான இவ்வளவு காரியங்களையுஞ்செய்து அவனைப்போல் தங்களையும் குபிரியத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றுன். இதை நல்ல கவனத்தில் எடுத்துப் பாருங்கள். என்று நல்ல விபரம் விபரமாக சில எம்பனையான அத்தாட்சிகளும் எடுத்துக் காட்டிவிட்டார்கள்.

இங்கே இளவரசராகிய அப்துர் றகுமானுக்கும், முர்றத்துக்கும் இடையில் இவ்விதமான சங்கதிகள் நடந்துகொண்டிருக்கும்போது அங்கே இராஜகொலுவில் திடீரென்று ஒரு சம்பவம் நடந்துவிட்டது. அது என்னவென்றுல் சிறைப்பட்டிருப்பவர்களின் தப்த்தர் புத்தகத்தை மந்திரிமார்கள் பார்த்ததில் எமன் தேசத்தரசனுகிய அஸ்மத்திபுனு நுஹிதாவின் குமாரனுக்கு ஏற்பட்ட வருஷமாதந்திகதி சரிவரமுடிந்ததால் இதுவரையிலும் அவனுக்கேற்படுத்திய தண்டனைப் பணம் வந்து சேரவில்லை யாதலால் இனிமேல் அவனைக்கொன்றுவிட வேண்டியதென்று மந்திராலோசனை சங்கத்தின் கட்டளை பிறந்துவிட்டதினிமித்தம் அரசன் அஸ்மத்திபுனு நுஹிதாவின் பேரில் அடங்காத கோபங்கொண்டவனுக எழுந்து அவர் மகன் இருக்கும்

சிறைச்சாலையில் போய் அவனைத் தளையோடுங் கூட்டிக்கொண்டு அப்துர் றகுமான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் மாளிகையில் அகஸ்மத்தாக வந்து மருமகனாகிய அப்துர் றகுமானை நோக்கி, இவனுடைய தகப்பன் நம்மிடம் வாக்குத்தத்தம் செய்து விட்டுப் போனதுபோல் இதுவரையிலும் இவனுக்குரிய தண்டனைப்பணம் கொண்டுவந்து கட்டவில்லை. இனிமேல் பொறுக்க முடியாது. ஆனதால் நீ இவனை இப்பவே சிரச்சேதம் செய்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டுமென்று கண்டிப்பானகட்டளை செய்துவிட்டு உடனே திரும்பிப்போய்விட்டான். தமது மாமனாகிய அரசன் சொன்ன அந்தப்பிரகாரமே அப்துர் றகுமானவர்களும் சம்மதித்தவர்களாக அஸ்மத்துடைய மகனைப்பிடித்து அங்கு நின்ற சில கொலையாளிகளின் வசங்கொடுத்து “இவனை இந்த க்ஷணமே தலையை வெட்டிவிட்டு வாருங்கள்” என்று கடின உத்திரவு செய்து கொலைக்களத்திற் கனுப்பினார்கள். அந்தக் கடின உத்திரவு பிறந்த மாத்திரமே கொலையாளிகள் அதிக உக்கிர வேஷத்துடன் கூர்மையான வாளாயுதம் பிடித்த பிசாசுகளைப்போல் அஸ்மத்துடைய மகனைப் பிறடியைப் பிடித்திழுத்துத் தள்ளிக்கொண்டு போனார்கள். அப்படிப் போகும்போது அந்தச் சிறுவன் மனமுடைந்து தேக விலவிலப்புடன் ஓ! வென்று கதறி சப்தமிட்டு அழுது கொலையாளிகளின் கைகளைவிட்டும் உருவி ஓடிவந்து அப்துர் றகுமானவர்களின் பாதத்தில் அடித்து மோதிவிழுந்து எங்கள் தயாகுண சீலராகிய அரசரே! நான் சிறுவன் தங்களுக்கு என்ன குற்றஞ்செய்தேன். என்னுடைய இந்த ஏழை உயிரை வீணில் கொலைசெய்வதால் தேவரீர் தங்களுக்குக் கிடைக்கும் பலாபலன் என்ன? இந்தக்கடல் சூழ்ந்த பூலோகமெல்லாம் புகழும்படியான தங்கள் தகப்பனார் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்களின் திருநாமத்தின்பேரில் ஆணையாக தாங்கள்இந்தஅடிமையாகிய என்னைக் கொலைபாதகஞ் செய்யாமல் என் தகப்பன் வருகிற மட்டிலும் தேவரீர் தங்கள் அடைக்கலத்தின் பேரில் சிறையாகவே வைத்துவிட வேண்டியது, என்று அழுது கெஞ்சிக் கேட்டு நின்றான்.

அஸ்மத்துடைய மகன், தங்கள் தகப்பனாரவர்களின் திருநாமத்தைச் சொல்லி ஆணையிட்டதை இளவரசராகிய அப்துர் றகுமானவர்கள் காதாரக் கேட்டவுடனே தங்கள் மனசுக்குள்ளே, சற்று நேரத்

திற்குமுன் முர்றத்து நமது தகப்பனூர் அவர்களின் பெயரைச்சொன்ன விதமாகவே இந்தச் சிறையில் கிடந்த பைனும் சொல்லுகிருனே இதைக் கவனித்தால் “ உள்ளது வொளிக்காது இல்லது வெளி வராது” என்றதைப் போல் நமது தகப்பனூர் இந்தப் பெயரை உடையவர்கள் தான் இதற்குச் சந்தேஹமே கிடையாது. முர்றத்துச் சொன்ன சங்கதிகள் எல்லாம் உள்ளபடியே யதார்த்தமானவைகள் தான். இப்படிப்பட்ட கனதிவாளர்களான நமது தாய் தகப்பன் சகோதரர்களேயும், இந்த உலகத்தில் இணையில்லாத வீரபராக்ரமசாலி களான நமது பந்து ஜனங்களேயும் வெறுத்து வீணுன குபிர் ஷெய்த் தானுகிய இந்த அரசன் அண்டையில் வந்து வளர்ந்து இப்பேர்ப்பட்ட பாதகத் தொழில்களுக்கு ஆளாகி அனியாயக்காரனுக நாம் இருப்பது இனிமேல் நமக்கடுத்த முறைமையல்ல. இவ்வளவோடு தப்பித்துக் கொள்ள வேண்டும், என்று இன்னும் பலதும் ஆலோசித்தவர்களாக அந்தச் சிறுவன் பேரில் மகா இரக்க சிந்தையுடன் அவனேத் தங்கள் அருகில்அழைத்து “அப்பாவாலிபனே! நீஇனிமேல்யாதொன்றுக்கும் பயப்படாதே! உனக்கு நான் அடைக்கலம் கொடுத்துவிட்டேன். இப்பவே உரிமை யாக்கி என் பிள்ளேபோல் பாவித்துக்கொண்டேன். நீ இப்பவே உன் மனதிலிருக்கும் பய முதலிய எல்லாத் திடுக்கங்களே யும் எடுத்தெறிந்துவிட்டு நல்ல தைரியவந்தனு யிரு!” என்று சொல்லி உடனே அவனுடைய சிறைக்கோலங்களான விலங்கு முதலான கட்டுகளே அவிழ்த்துத் தங்கள் கையை வைத்து அவனேத் தழுவிக் கொடுத்து நல்ல மதுரமான பால் பழாதிகளுடன் அவன் பசியடங் கும்படியாகப் போஜனமுங்கொடுத்துத் தங்கள் சமுகத்திலேயே வைத் துக்கொண்டார்கள்.

இவ்விதம் அஸ்மத்துடைய மகனேக் கொலேயில் நின்று மீட்டி அடைக்கலங்கொண்ட பிறகு அப்துர் றகுமானவர்கள் இருதயமா னது ஒருவிதத்திலும் செல்லாமல் தங்கள் தாய் தகப்பன்மார்களேயும், சுற்றத்தார்களேயும், ஊரையும் அடிக்கடி நினேத்து உள்ளுக்குள்ளே உருகினவர்களாகவும், பலதும் புலம்பினவர்களாகவும், இரண்டு கண் கள் வழியாலும் கண்ணீர் தாரை தாரையாக வடியும்படியாக அழுகத் தொடுத்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கே திடீரென்றுஅபாசுபியான் என்னும் அரசன் வந்து கொலேசெய்யச் சொன்ன சிறுவன் கால் கை

விலங்குகள் கழற்றப்பட்டவனாக நல்ல உல்லாசத்துடன் இருப்பதைக்
கண்டு காயம்பட்ட வேங்கைப் புலியைப்போல் கதகதத்த அக்கினிப்
பிரவேசமான கண்களால் சினந்தவனாக அப்துர் றகுமான் அவர்களை
நோக்கி, நான் இந்தப் பயலை வெட்டும்படியாகக் கட்டளை செய்துவிட்
டுப்போக நீ அதற்கு நேர்மாற்றமாக இப்போது இவ்வளவு உல்லாச
மாக வைத்துக்கொண்டிருக்கும் இறுமாப்பான கெர்வம் என்ன? அதை
யென்னிடம் சொல்? என்று மகா முறுமுறுப்புடன் அபய குரலிட்டுக்
கேட்டான். அந்த முறுமுறுப்புக்கு அப்துர்றகுமானவர்கள் யாதொன்
றும் எதிர்மொழி கொடாமல் சற்று நிதானித்து நம்மைச் சிறுபருவத்
திலிருந்து மகா கெம்பீரமான செல்வாக்குடன் வளர்த்து வாலிபமாக்
கினவனாயிற்றே என்று மரியாதை வைத்தவர்களாக அவனைநோக்கி,
கிருபையுள்ள தந்தையாகிய அரசரே! நான் தங்களுடைய கட்ட
ளைக்கு விரோதஞ்செய்யாமல் அப்படியே கொலையாளிகளிடங்
கொடுத்து வதை செய்யும்படியாக உத்திரவு செய்துவிட்டேன். அந்த
நேரத்தில் இவனுக்கு எப்படியோ மனசில் ஒருவிதமான ஊசாட்
டம் வந்து உடனே என்னைப்பெற்ற தந்தையவர்களின் பெயராகிய
அபூபக்கர் சித்தீக்கென்னும் திருநாமத்தைக்கொண்டு ஆணையிட்டுக்
கதறி அழுது அடைக்கலந் தேடினான். என் தகப்பனாரவர்களின்
அந்தத் திருநாமத்தின் சங்கைக்காக வேண்டி உடனே என் மனமிரங்கி
அடைக்கலங்கொண்டு விட்டேன். இதுதான் சங்கதி. வேறே ரகசி
யம் எதுவுங் கிடையாது என்று மறுமொழி சொன்னார்கள். இவ்
விதம் எவ்வளவோ தயாள குணத்துடன் ஜவாபு சொன்ன மகா
பலாட்டிய சுத்த வீராகிய அப்துர் றகுமானவர்களை நோக்கி, இரண்டு
கண்களையும் நெருப்புப்பொறி பறக்கும்படியாக உருட்டிக் காட்டி,
இந்தப் பூச்சக்ர கண்டத்துள்ளே செங்கோல் செலுத்திக்கொண்டிருக்
கின்ற மகா மகத்துவமுள்ள கிரீடாதிபதிகளெல்லாம் என் பேர்
சொன்ன மாத்திரத்தில் நடுநடுங்கக்கூடியவல்லாளகண்டனாகியஎன்சமு
கத்தில் கொஞ்சமாகிலும் நெஞ்சமஞ்சாமல் என்ன வார்த்தை சொன்
னாய், நீ! நான் கடைசி காலத்து நபியாக இருக்கும் என்று வீண்
மொழி பிதற்றிக்கொண்டிருக்கிற அந்தப் பொய்யனாகிய முகம்மதுக்
காக வேண்டி அளவிட முடியாத அநேககோடி திரவியங்களையும் நாளா
வட்டத்தில்விரையஞ்செய்து, கனந்தங்கிய இனபந்துக்களான குறைஷி

கீளயும் பகைத்து அவனுடன் இணைபிரியாமல் உடன்கட்டை ஏறிக் கொண்டு பதுர், உஹுது முதலான யுத்தக்களங்களுக்கெல்லாம் அவனுடன் போய் தன் குடும்ப ஜனங்களான சங்கைமான்களின் உயிரையும் வதைசெய்துவிட்ட ஈனப்புத்தியை யுடைய சண்டாளனுகிய உன் தகப்பனை இப்பவே நான் நினைப்பேனுகில் அவனிருக்கும் அந்த மதீனஞ்சென்று அவனுடைய தலையானது தரையில் கிடந்துஉருளும்படியாகத்தறித்துவிடுவேன். அப்படியெல்லாம் வேண்டாமென்கிற இரக்கக்குணத்தால் இவ்வளவு நாளும் மனம் பொறுத்துக்கொண்டு வருகிறேன். ஆனதால் நீ அவனுடைய ஈனப் பெயரைநினைப்பதை விட்டும் விலகிவிடு? என்று இன்னும் சில வாய் கொழுத்த வம்புத்துன்பான அடாத மொழிகளும் பேசி அவனுடைய மடப்புத்திக்கேற்கும்படியாகத் தாறுமாருக உளறினுன்.

லஅனத்துப் பெற்ற மூதேவித்தனமுடைய ஷெய்த்தானுகிய அபாசுபியான் சொன்ன சுடுஞ்சொல்லானது அப்துர் றகுமானவர்களுக்கு உலையில் வைத்து நல்ல பழுக்கக் காய்ச்சின வேலாயுதத்தை எடுத்து இரண்டு காதிலும் ஊடுருவப் பாய்ச்சினது போல் இருந்ததாலே முகமாதிக்கமும் வீரவேஷத்தால் உருவமாறினவர்களாகப் படம்விரித்தநாகப்பாம்புபோல் சீறி எழுந்து அபாசுபியானைப்பார்த்து அடே! முரண்டாட்டங்கொண்ட நாயுடைய மகனே! கேள். இந்த உலகத்தில் பேர்பிரபல்யம் பொருந்திய மகா சங்கைவாளராகிய என் தகப்பனுரவர்களின் வரிசையும் தலைமைத்தன்மும் அறிவில்லாத நிர்மூடத்தனமுடையஉனக்கென்ன தெரியும்! அவர்களின்மகத்துவமுள்ள சிரசைத்தறித்து உருளச்செய்வேன் என்று இத்தனை நேரமாக வீணுக்கு உன் ஓட்டைவாயை நாற்றமாக்கிக்கொண்டாய்? மாட்சிமை தங்கிய அவர்களின் சரீரத்தில் முளைத்திருக்கின்ற அநேக உரோமங்களில் நின்றும் ஒரு சிறியதான கடை மயிரையும் உன்னைப்போல் பலாட்டியமுடைய முப்பது அரசராலுைம் கையால் தொட்டுவளைக்கவும் முடியாதடா பேயா! அதை வேண்டுமானுல் இப்போது அவர்களின் குமாரசிங்கமாகிய என்னிடம் கண்டறிந்துகொள்கிருயா? என்று கோடையிடிபோல் கதறி சொல்லிவிட்டு உடனே தங்களின் அகலமான வாளை உறையைவிட்டும் கலகல வென்று உருவினுர்கள். அந்த மும்முரமான உக்கிர தோற்றத்தை அபாசுபியான் வெகு சீக்கிரத்

தில் தெரிந்து சமயூசித யூகத்தால் அப்துர் றகுமான் அவர்
களைப் பார்த்து அருமையான மகனே! உன் தகப்பனை நான் அவ்
வளவு சொல்லத் தகாதா? உனக்குச் சிறு வயதிலிருந்து நான் அவ்
வளவு கஷ்டபாடுகள் படவில்லையா? வென்று சில குளிர்ந்த வசனங்
களைச் சொல்லித்தழுவிக் கோபத்தை ஆற்றிவிட்டு முகம் வாடின
வனாக அந்த இடத்தை விட்டும் விலகிப் போய் விட்டான்.

## 5-ம் அத்தியாயம்.

### அப்துர் றகுமானும் செய்தத்தம்மாளும் மதீனம் புறப்படுதல்.

அரசன் அவ்விதமான மனவிசனத்துடன் போனதின் பிறகு, அப்
துர் றகுமானவர்கள் முர்றத்துறலியல்லாகு அன்கு அவர்களைத்தங்கள்
அருகில் அழைத்து மறுபடியும் தங்கள் தாய் தகப்பன்மார்களுடைய
சவிஸ்தாரங்களைச் சொல்லும்படியாகக் கேட்டார்கள். அதற்கு, அவர்
கள் அப்துர்றகுமானவர்களைநோக்கிஎங்கள் கிருபையுள்ளஅரசருடை
ய குமாரரே! கேளுங்கள். தங்கள் தாயாரும், தகப்பனாரும், தங்களைக்
களவு கொடுத்த நாளிலிருந்து இதுபரியந்தம் தங்களைத் தேடித் தேடி
அழுதவர்களாக இருக்கின்றதே வேலையாகவும், அது கண்டு சூழ
அக்கம் பக்கத்தில் இருக்கிற இனத்தாராகிய குறைஷிகளும், குறை
ஷிப்பெண்களும் வந்து அவர்களுக்கு மனத்தைரியமான ஆற்றல்
போற்றல் சொல்லி அமர்த்துகிறதே வேலையாகவும் இருக்கின்றார்கள்.
இன்னும் தங்களுடைய சந்திப்பைக் காண்கவேண்டுமென்கிற ஆசை
யாலே அந்தத் திருமதினமா நகர முழுமையும். ஒரே விசனக்கடலில்
முழுகிப்போயிருக்கின்றது. என்று இன்னும் சில சங்கதிகளையும்
எடுத்து அவர்கள் மனம் பதியும்படியாகச் சொல்லிவிட்டு, தங்கள்
மனதுக்குள்ளே இப்போது அப்துர்றகுமான், கொண்டிருக்கிற
உறுதியானது நல்ல பலவந்தமானது. இந்த ஓர்மையின் ஊக்கத்
தால் இவர் ஒருக்கால் மதினாவை நாடிப் பிரயாணப்படவும்போதும்.
ஆனபடியால் நாம் கொண்டுவந்திருக்கின்ற கடிதாசியை இந்தச்சமயத்
தில்தான் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு
அப்துர் றகுமான் அவர்களை நோக்கி அருமையான எஜமானே! தங்
கள் தகப்பனாரவர்களின் கையால் எழுதிய கடிதம் கொண்டுவருகிற

வர்களுக்குத் தாங்கள் என்ன இனம் கொடுப்பீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அப்துர் றகுமானவர்கள், மனம் நிறைந்த பெரிய ஆவலுடன் அப்படி என் தந்தையவர்களின் கைபெழுத்துள்ள கடிதம் கொண்டுவந்தவர்களுக்கு "இந்த விலைமதிக்கமுடியாத முத்துமாலையை நன்கொடையாகக் கொடுக்கின்றேன்" என்று உறுதிவார்த்தை சொல்லி உடனே தங்கள் கழுத்தில் அணிந்திருந்த ஆணி முத்து மாலையைக் கையால் எடுத்துக் காட்டினார்கள். அந்த ஒப்பில்லாத மணிமாலையை மூர்றத்தவர்கள் கண்டதும் தங்கள் இருதயத்தில் நாம் இதுபரியந்தம் அநுபவித்துக்கொண்டிருந்தகஷ்டப்பாடாகிய தரித்திரம் இன்றோடே நம்மைவிட்டு விலகி நீங்கிப்போயிற்று. என்று எண்ணினவர்களாக ஹலரத்து அமீறுல் முஉமினீன் அபாபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கையால் எழுதிக்கொடுத்த கடிதத்தைத் தங்கள் தலைப்பாகை யென்னும் சருபந்துக்குள்ளே இருந்து எடுத்து பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம் என்று சொல்லி அப்துர் றகுமானவர்களின் கையில் கொடுத்து, இந்தக் கடிதத்தாலே தான் இவ்வளவு தூரந்தொலைகளையுங் கடந்து நான் இங்கு வந்தேன் என்று தாங்கள் வந்த வரலாறுகளையும் படிப்படியாகச் சொன்னார்கள். அப்துர் றகுமானவர்கள் தாங்கள்மூர்றத்துக்குச்சொன்ன வாக்குறுதி போல் தங்கள் கையில் வைத்திருந்த முத்துமாலையை மூர்றத்து அவர்களுக்கு சன்மானஞ் செய்துவிட்டுஅடங்காத ஆத்திரத்துடன் அந்தக் கடிதத்தின் முகப்பைப் பார்த்தார்கள். "அதில் நம்முடைய தெளித்து வடித்ததிருமணியான அருமை மகன் அப்துர் றகுமானுக்கு வருவது" என்றெழுதியிருப்பதையும் அதன் மேலுங்கீழும் ஹலரத்தவர்களின் முபாறக்கான கைவிரலின்கணையாழி மோதிரத்தின் முத்திரை பதிந்திருப்பதையுங் கண்டு உடனே ஆநந்தக்கண்ணீர் வடித்தவர்களாக அதைத் தங்கள் தலைமேலும் கண்மேலும் வைத்து வைத்து முத்தி முகந்துகொண்டு ஆ! என் தகப்பனே! என் தகப்பனே!! என்று விம்மிவிம்மி அழுது தலையில் விசையாக அடித்து அடித்து பலதும் சொல்லிப் புலம்பினவர்களாக ஓங்கிய குரலோசையுடன்அபயமிட்டழுது விழுந்து விட்டார்கள். அப்பால் சற்றுநேரம் பொறுத்து மறுபடியும் எழுந்து ஏங்கி ஏங்கி அழுகத் தொடுத்தார்கள். இந்த அழுகுரலின் சப்தத்தை அங்குகன்னிமாடத்தில் இருக்கும் அவர்

களின் மனைவியாகிய செய்யிதத்தம்மாள் கேட்டு இதென்ன விபரீதம்! ஒருநாளுமில்லாத திருநாளாக நமது கணவனுருடைய அழுகை சத்தம் கேட்கின்றதே! என்ன ஆபத்து நேரிட்டுவிட்டதோ! தெரியவில்லையே! சீக்ரம் போய் பார்க்கவேண்டும் என்றெண்ணிக்கொண்டு உடனே எழுந்து கால்பதறக் கைபதற ஓடிவந்து அப்துர்றகுமானவர்களின் பாதத்தண்டையில் வந்து விழுந்து யாசெய்யிதீ! என் நாயகமே என்னத்திற்காக இந்தப்பாடு படுகின்றீர்கள் ! இதென்ன புதினம்! ! எதற்காக அழவேண்டும ? சொல்லுங்கள் ? என்று நாடியைத் தழுத்த மூவி கண்ணீர் பிதுங்கும்படியாகக் கேட்டார்கள். கனம்பொருந்திய அந்த அம்மாள் எவ்வளவுதான்கேட்டாலும் ஒன்றுக்கும் அப்துற்றகுமான் அவர்கள் மனம் அசையாதவர்களாக மனைவியைப் பார்த்து "பெண்ணே, நீயேன் இங்கே வந்தாய்? நீ எவ்விதந்தான் கேட்டு நின்றாலும் அந்தச் சங்கதியைச் சொல்லமுடியாது. உனக்கு அதைப் பின்னுக்கு அறிவிக்கிறேன். நீ இப்போது, உன் இருப்பிடம் போ" என்று உத்திரவு பண்ணிவிட்டார்கள். அந்தம்மாள் தன் கணவனுடைய கட்டளைப் பிரகாரம் உடனே வியாகூலப்பட்ட முகத்துடன் போய்விட்டார்கள். அதன் பின்னர் அப்துர் றகுமானவர்கள் தங்களின் தகப்பனாரவர்கள் எழுதிய கடிதத்தின்மேல் முத்திரையை உடைத்து உள்ளிருக்கும் வாசகத்தைப் பார்வையிட்டார்கள். அதிலெழுதியிருக்கின்ற சகலமான சங்கதிகளையும் ஆதியோடந்தமாக வாசித்துக்கொண்டுவந்து கடைசியில் தங்களின் மஹாமகத்தும் வரிசையுந்தங்கிய மச்சரணுகிய நமது வள்ளலாகிய நபி நாயகமவர்களின் ஸலாமும், ஆசீர்வாதத்தையும் கண்டு அடங்காத சந்தோஷமுள்ளவர்களாகக்கடிதத்தின் கடைசியில்தங்கள் தந்தையவர்களின்கையொப்பத்தைக் கண்டதும் இருகண்களாலும் வளைத்து வளைத்து முத்திக்கொண்டு திருமதினமாநகரம் போகவேண்டிய காரியத்தில் ஆலோசனை செய்துகொண்டே கடிதத்தை ஒரு முறையன்றிப் பலமுறையும் திருப்பித் திருப்பி வாசித்தார்கள். அப்துர் றகுமானவர்கள் அந்தச்சிறப்பான கடிதத்தை வாசிக்கும்போதே அவர்களின் இருதயத்தில புகுந்துகொண்டிருந்த ப்ழிபாதகம், குபிரியத்து என்னும்பொல்லா இருட்கூட்டமானது உடனே விலகி வெருண்டோடிப்போய் மூதேவிப் பயலாகிய அபாசுபியானுடைய இருதயத்தில் வேரூன்றிப் போய்

கிடக்கும் வஞ்சனை குபாட மென்கின்ற இருளோடுங் கூடிக் கலந்து கொண்டது. அப்பொழுதே அப்துர்றகுமானவர்களின் திவ்யமான இருதயத்தில் தீனுல் இஸ்லாம் என்னும் ஞானமார்க்கத்தின் பிரகாச மானது பளீரென்று பிரகாசித்துவிட்டது. உடனே அப்துற்றகுமா னவர்கள் தங்கள் சமுகத்தில் நிற்கின்ற முர்றத்துரலியல்லாகு அன்கு அவர்களின் முகத்தை நோக்கி, அவ்வளவு சிறப்பும் பதவியுமுள்ள காரணக்கடவுளாகிய எங்கள்நாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைகி வசல்லமவர்களையும், கனம்பொருந்திய வள்ளலாகிய என் தந்தை யவர்களையும் பார்த்துவந்த முகம் இதுதானா? என்று முர்றத்தவர் களின் முகத்தையும் கண்களையும் சலியாமல் அணைத்துப்பிடித்து முத் திக்கொண்டு உடனே அவர்களின்கையைப் பிடித்துதீனுல் இஸ்லாத் தின் பரிசுத்த மூலமந்திரமாகிய "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம் மதுர்றஸூலுல்லாஹி" என்னும் திருக்கலிமாவைச்சொல்லி ஈமான் கொண்டு இஸ்லாமிலாகி விட்டார்கள். அது கண்டவுடனே முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் மறுஹபா! மறுஹபா! என்னும் சந் தோஷ சுபசோபனமும், நல்மாராயமும் சொன்னவர்களாக றசூல் நாயகமவர்களைத் துதித்து அல்லாவை நாடி ஸஜதாவில் விழுந்தெ ழுந்து அல்ஹம்துலில்லாஹ் என்று புகழ்ந்து ஷுக்றும் செய்தார்கள்.

அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள் கொலுவில் இப்படியான மோட்ச காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம யத்தில் திடீரென்று அபாசுபியான் என்கிற அரசன் சில காவல்வீரர் களுடன் வந்து அங்கு அசதியுடன் படுத்து நித்திரை செய்துகொண் டிருந்த அஸ்மத்துடைய மகனைப்பிடித்துக் கொலை செய்யாமல் தனை செய்து பழுபடி சிறைகூடத்திற் கொண்டுபோய் அடைக்கும்படியா கத் தன் காவல்வீரர்களுக்கு உத்திரவு செய்தான். அந்தக் காவல் வீரர்கள்தமது அரசன் உடையஉத்திரவுக்கிணங்கினவர்களாகவிலங்கு களைக் கொண்டுவந்து அஸ்மத்துடைய மகன் கையிலும், காலிலு மிட்டுத் தட்டி எழுப்பினார்கள். உடனே அந்தச் சிறுவன் மனசு உடைந்தவனாக கதறிக்கொண்டு எழுந்து அப்துர்றகுமானவர்களின் முகத்தைப் பார்த்தான். பார்த்ததும் அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்களுக்கு வெகுளிபொங்கி சிங்கத்தைப்போல் கண் செவந்து வடவாமுக அக்கினிபோல் கொதித்து, அந்தக் காவல்வீரர்

களைப்பார்த்து, அடே குபிரியத்தான கெட்டநாய்களே! அந்தப்பன்றி யுடைய மகனுகிய ஷெய்த்தானின் சொல்லைக்கேட்டு நீங்கள் எல்லா ரும் உயிரை இழக்க வந்தீர்களோ! இதோ பாருங்கள் என்று நாகத்தைப்போல் சீறியெழுந்து உறையைவிட்டும் வாளை உருவினுர் கள். உருவவும் அந்தக்ஷணமே அபாகுபியான் பயந்து நடுங்கி வீரமில் லாத பேடிபோல் மெதுவாக நழுவிப்போய் விட்டான். அகப்பட்டுக் கொண்ட காவல்வீரர்களெல்லாம் அப்துர் றகுமான் அவர்களை நோக்கி, எங்கள் காருண்யக்கடலாகிய எஜமானே! தேவரீர்கோபத்தை அடக்கி மன்னியுங்கள். ஏழைகளாகிய நாங்கள் என்ன செய்வோம். தெண்டச்சோறு போடுகிற அந்த அரசன் என்ன வேலையை இட் டானே அந்த வேலையைச் செய்வோம். இடையில் தங்களுக்கும், அவனுக்கும் இப்படிப்பட்ட சம்பவம் நேரிட்டிருக்கிறாகசியத்தைநாங் கள்அறிந்தால் ஏன் நாங்கள் இங்கே வருகிறோம். என்று கெஞ்சுதலு டன் மன்றாடி நின்று கேட்டுக்கொண்டு அஸ்மத்துடைய மகன் மேலிட்டதளைகளைக் கழற்றிவிட்டுப் புலியின் வாயிலகப்பட்டுத் தப்பி யோடும் மான்களைப்போல் பிழைத்தோம் பிழைத்தோமென் றோடிப் போய்விட்டார்கள்.

காவல்வீரரும்; அரசனும் மனப்பயத்தால் வெருண்டோடிப் போனதின் பின்னர் அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு முர் றத்திபுனு இஸ்லானவர்களை அருகில் அழைத்து என்ன! சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்! இப்பவே பிரயாணத்திற்குரிய தோரணைகளைத் தயார் பண்ணிக்கொள்ளுங்கள்? இனிமேல் இங்கே ஒரு நிமிஷமாவது தங்க முடியாது. மதீனம் போய்ச் சேரவேண்டும், என்று சொல்லிவிட்டு அங்கு நின்ற ஒரு பணிவிடைக்காரனை விட்டுத் தங்கள் மனைவியாகிய செய்யிதத்தம்மாளை வரவழைத்தார்கள். உடனே அந்தத்தூதன் கனந்தங்கிய செய்யிதத்தம்மாள் இருக்கும் கன்னிகாமா டத்தில் சென்று அவர்களைக் கண்டுவணங்கி தங்களைத் தங்கள் கணவ னுரவர்கள் அழைக்கின்றார்கள்! என்று சொன்னுன். சொன்னதும் அந்த அம்மாள் பூரண சந்திரனில் உள்ள அமுதத்திரளைகளிலும், சூரியனுடைய கிரணங்களிலும் அதிசப்பிரகாசமுள்ள வஜீகர சௌந்தி ரியத்துடன் எழுந்து விரைந்து நடந்து இளவரசராகிய அப்துர் றகு மான் றலியல்லாஹு அன்கு அவர்களின் சமுகம் வந்து நின்றார்கள்.

கேசாதிபாதம்.

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

1. *அரியின முரன்று துளிநறு வருந்தி யடர்ந்துதா தாடியதளவ, விரைதருந் தொடையல்வேந்து பன்னீரும் வீசிநற் பரிமளந் திமிர்ந்து, வரியறன் முகில்பொற் கடுக்கைநல் லிருளைவடிவுசைவலத்தினை முடுக்கிக், கருநிற வகிலின் புகையுடன் மருவிக் கண்கொளா விடமெனுங் குழலாள்.

2. நானமும்புழுகும் பலபரிமளமு நறும்பனிநீரிலேநனைத்துக், கர்னுறவணிந்ததிலதநின் றிலங்கக் கதிர்தருகுளவிவெண்மதியம், வானிடை யெழுந்துகிழ்வளை வாகவருவதுகாண்கிலப்பிறையைத், தானுறமுவமைசாற்றலா மெனவே தரணியிற் சிறந்தநன்னுதலாள்.

3. தரளமென் ஞான்கு முபயசெந் துகிருந் தயங்கவோர் சண்பகமலரு, மிருகரு விளையும் வளைந்தசெஞ் சிலைக ளிணையுமேயினைசவுறமுளைத்து, மருவுற வலமுமிடமுமாண் டேசல் மகாமுமசையமண்டலத்தி, லொருமதி தோன்றினுறழ்சொலப் படுமென் றொளியுற விலங்குமா முகத்தாள்.

4. சீனிசர்க் கரைபால் வருக்கைநற் கதலி தேன்கரும்பமுதியாழ்குழலுந், தானுற மரிது கோகிலங் கிளியோ சாற்றருங் குதலைமென்மொழியாள், கானலர் விரியுங் கமுகுநெற் றெனலாய்க் கவினுறத்திரண்டகந் தரத்தா, ளீனமின் றியவேய் யிணைப்புறந் தூரத்தியிக்கென விணைமணித் தோளாள்.

5. இனமணி பதித்த யாழெனத் தோன்ற விணைவளை யணிந்தமுன்கையாள், கனகமென் றிலங்கும் பதுமமாந் தளிருங் காந்த

* இந்த ஒன்பது கவிதைகளும் செய்யிதத்துப்படைப்போர் என்னும் புராணகாவியத்தில் உள்ளவைகள் அவைகள்செய்யிதத்தம்மாள் அவர்களின் கேசாதிபாத வர்ணனைகளைச் சொல்லி வருகின்றமையால் அப்படியான சிற்றின்ப விஷயங்களைச் சரித்திரங்களுக்கூடே நுழைத்தெழுதுவது தற்காலத்தில் நமது மாட்சிமை தங்கிய கவர்ண்மெண்டாரவர்களுக்குப் பொருத்தமில்லாத கருமமென்று கண்டு நான் அவற்றை |தலையிடுவேந்தை நிறுத்தி மேற்படி கவிதைகளைமாத்திரம் அப்படியே பிண்டமாக வருவித்திருக்கின்றேன். ஆற்றலுடைய கல்விமான்கள் அவற்றின் அர்த்தங்களைக் கண்டறிந்துகொள்க.

ளும் போன்றவங் கரத்தாள், சினைபுறுங் கெளிற்றை முனிந்துசிற் றுழி சிறப்புற வணிந்தமென் விரலாள், வினவரு மொழிசேர் பசுங் கிளி யோட்டம் விளம்புதம் கிணையுறு முகிராள்.

6. அம்புய முகையோ மதுவுறு குடமோ வடுக்கலை வணிநறைச் சிமிழோ, செம்பொனின் முடியோ செழுமணித் தசும்போ செங்கிள நீர்கொலோ கிணமோ, பம்பர மதுவோ குமிழிகோங் கரும்போ பந்துவின் பறக்குநே மிகளோ, விம்பரி னுவமை சாற்றி னும்பொருவா வெழில்குடி யிருந்தபொற் றனத்தாள்.

7. அடிதடித் தெழுந்து பணைத்திறுமாந்தங் கடைத்திமை யாதகண் கறுத்துப், படியிடத் தெதிர்ந்தோ ராவியுள் ளடக்கிப் பகை யிலா தொன்றொடொன் றிகலி, வடிவுடனிழைத்த வாரறுத் தோங்கி மதிப்பிலாப் பசலைபூத் தொளிரக், கொடியவெங் கரிக்கோட் டிணைவடுப் படுத்திக் கொழுநர்கைக் கடங்குகொங் கையினாள்.

8. பொய்யொடு துடிநூல் குறைந்துதேய் பிறையும் பொருந் தினும் பொருந்துறு விடையாள், செய்யபொன் னரம்பை பிடி கரந் தனிலுந் திரண்டழ கிலங்கிய குறங்காள், வையகத் தலவன் றணைக்கடிந் தெடுத்த வடிவரா லெனுங்கணைக் காலாள், வெய்யவ னிறத்த நிதித்தரா செனவே விளங்கொளி பிறங்கிய பரடாள்.

9. நிதியினைத்திரட்டி நவமணிபதித்த நெடுஞ்சுடர்ப் பந்தெனுங் குதியாள், புதியதுப் பிணைக்கி யொருதலைத்தரளம் பொருத்திய நிக ரணி விரலாள், உததியுட் கமட முதுகுபுத் தகமு முவமைசெப் பிரு ம்புறவடியாள், சததளகமல மலரலர்த் தகத்தைத் தரித்தன தன்மை யின் பதத்தாள்.

மேலே சொல்லப்பட்ட அத்தனை விதமான அலங்காரங்களையும் உடைய அனேக ரூபலாவண்ணியம் பொருந்திய செய்யிதத்தம்மாள் அவர்கள்வந்து தமது அன்புள்ள கணவனுரவர்களின் பாதாரவிந்தத்தில் விழுந்து பணிந்து தமது அழகிய முந்தானையை ஒரு புறமாக வொது க்கி மரியாதையுடன் நின்றார்கள். நின்ற அந்த விவேக அறிவினை யுடைய களந்தங்கிய அம்மாளை இளவரசராகிய அப்துர்றகுமானவர் கள் நோக்கி, “ஏ அன்புடைய பெண்ணே! இப்போது நானுன்னை வரவழைத்தது ஒரு சங்கதிக்காக வேண்டி. அதாவது எங்கள்குலத்தில்

ஒரு மேலாம் பரமான நபியவர்கள் உதித்திருக்கின்றார்கள். நான் அவர்களின் மார்க்கத்தைச் சேர்ந்துவிட்டேன். என் தகப்பனும் அவர்களின் மார்க்கத்தை அநுசரித்தவர்களாக அந்த நபியவர்கள் வாசம் பண்ணுகின்ற திருமதீனமாநகரத்தில் இருந்து வாழ்கின்றார்கள். ஆனபடியாலே நான் அவர்களைக் கண்டு நேர்வழி பெற்றுக்கொள்ளும்படியாக இப்போது எங்கள் ஊராகிய மதீனத்திற்குப் பயணமாக இருக்கின்றேன். நீ நல்ல சௌபாக்கியவதியாக யாதொருகுறைவுமின்றி உன் தகப்பன் இருக்கும் இந்தப் பட்டணத்திலேயே வாழ்ந்துகொண்டிரு" என்று சொன்னார்கள். அவர்கள் இவ்விதஞ் சொன்ன சொல்லானது செய்யிதத்தம்மாள் அவர்களுக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினதுபோல் உள்ளமெல்லாங் கருகி அவர்கள் முகமென்கிற வாடாத செந்தாமரையும் ஒருவாறு வாடிற்று. வாடி விசனப்பட்டு ஒரு கண்ணுக்கு அழுதவர்களாகத் தமது கணவனுருடைய கையைப்பிடித்து "யாசெய்யிதி! என்னுடைய நாயகமே! இந்த அடியாளுக்கு உலகத்தில் தங்களையன்றி வேறு ஆதரவு யாரிருக்கின்றார்கள். புருஷனென்றாலும்நீங்களே, கடவுள் என்றாலும் நீங்களே என்று நான் நம்பியிருக்க இப்போது, தங்களை மதீனத்திற்கு அனுப்பிக் கையிழந்துவிட்டு நான் இங்கிருப்பதால் எனக்கு என்ன சுகமிருக்கின்றது ஒன்றுமில்லை. அப்படித் தாங்கள் மதீனத்துக்குப் பிரயாணம் போகும் பட்சத்தில் இதோ இந்த அடியாளும் தங்களுக்கு முன்னே பயணமாக இருக்கின்றேன்" என்று சொல்லிவிட்டு உடனே கலிமாவைச் சொல்லி ஈமான் கொண்டு இஸ்லாமிலாகி விட்டார்கள்.

அரசனுடைய ஏகபுத்திரியாகிய செய்யிதத்தென்னும் பெயருடைய ராஜ பெருமாட்டி இஸ்லாமில் வந்த உடனே அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள் மதினமாநகரத்தை நாடிப் பிரயாணம் பண்ணுவதற்காக ஆயத்தப்பட்டுகடின நடையையுடைய ஒரு செவந்த ஒட்டகத்தின் மேலே முத்து, மாணிக்கம், பச்சை மரகதம், கோமேதகம், நீலம், வைரம், வைடூர்யம், புருஷராகம், பவளம் முதலிய ஒன்பதுவகை ரத்னகஜிதங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அம்பாரி வைத்து, அதன் உள்ளே மகாராணியாகிய செய்யிதத்தம்மாளை ஏறியிருக்கும்படி கட்டளையிட்டு அந்த அலங்காரமான ஒட்டகத்தின் மூக்கணாங்கயிற்றை முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் வசங்கொடுத்து

ஓட்டிவரும்படி செய்து, அப்பால் தாங்கள் வழமையாகப் படைக்களங் களுக்குப் போகும்போது சவாரி செய்து செல்கின்ற மகா உயர் ஜாதி போர்க்குதிரையாகிய ஜவாது என்கின்ற பஞ்சகல்யாணியைக் கல்லணை வைத்துப் பதினெட்டுவகை ஆயுதபாணிகளையும் எடுத்தணைந்து* அஸ் மத்துடைய மகனையும் கையில் பிடித்தவர்களாகக் கொதிகொதிப்பை யுடைய ஒரு வடவாமுக அக்கினிபோல் பாய்ந்தேறினார்கள். இந்தச் சங்கதியை அங்குப் பார்த்துக்கொண்டு நின்ற சுத்தவீரர்கள் கண்டு வோட்டம் ஓட்டமாக ஓடிப்போய் அபாசுபியானிடத்தில் தெரிவித்த வுடனே அவன்மனம் பதறினவனாக ஓடிவந்து, குதிரையின்மேல ஒரு ராஜ சிங்கம்போல் சவாரியாயிருக்கின்ற அப்துர் றகுமான் றலியல் லாஹு அன்கு அவர்களின் அருகில் போய் நின்றுகொண்டும் "ஆ என் அருமையான செல்வ மருமகனே! என்னிடமிருக்கின்ற திரவியங் களையும் ராஜ்யங்களையும் உனக்காகச் சொந்தமாக்கி விடுகின்றேன். இந்த எண்ணத்தை மறந்துவிட்டு அந்த மாய வஞ்சகனாகிய முகம்ம திடம் போகுவதை வெறுத்து என்னிடமே இரு! கண்மணியான மக னே!" என்று அழுது சலித்தவனாகச் சொல்லிக்கெஞ்சினான். அதற்கு அப்துர் றகுமான் அவர்கள் அந்த மல்ஊனைப்பார்த்து இருகண்களும் அக்கினிபோல் செவந்து சினங்கொண்ட சிங்கத்தைப்போல் சீறி நபி நாயகம் அவர்களைப்பலகால் துதித்துப்போற்றிக்கொண்டு அவனையும் அவன் வைத்து வணங்குகின்ற பொய்ச்சாமிகளான உலாத்து உஸா குபல் என்கிற தம்பிரான்களையும் திட்டி வாய்க்கு வராத வசைமொழி கள் பேசி நகைத்தார்கள். அதை யவன் கேட்டவுடனே இனி நீ யெனக்கு உதவப்போகிறதேயில்லை. திட்டமாக உன் தாய் தகப்ப னிருக்கும் ஊருக்குப் போய்ச்சேருகிறே சரதம்! அப்படியானால் உன் னோடு என் அருமை மகளையும் இழக்க முடியாது அவளை என் வசம் ஒப்பிவித்துவிட்டு நட! என்றான். அதற்கு அப்துர் றகுமானவர்கள் அவ்விதம் நான் வரச்சொல்கிறேன். வந்தால் உன்னுடைய மகளை நல்ல படி அழைத்துக்கொண்டு உன் மாளிகையில் வைத்துக்கொள்? என்று சொல்லி, ஒட்டகத்தின் நவரத்தின அம்பாரியுள்ளிருக்கின்ற செய் தத்தம்மாள் அவர்களை நோக்கி பெண்ணே! இதோ உன் தகப்பன் அழைக்கிறார் இறங்கிப்போ, என்று உத்திரவு செய்தார்கள். அது கண்டு, அப்பாசுபியான் தன் குமாரத்தி ஏறியிருக்கும் ஒட்டகத்தின்

---

* அஸ்மத்துடைய மகனை உடன் கொண்டுபோனதாகவும் சில கிரந்தங் கள் சாதிக்கின்றன.

அருகிற் போய்அதன்மூக்கணங்கயிற்றைப்பிடித்திருக்கின்ற மூர்றத்து றவியல்லாகு அன்கு அவர்களைப் பார்த்து, "ஏ மகாகுபாடத்தை யுடைய கிழட்டுப்பயலே! நீ என் ராஜ கொலுவண்டையில் வந்து ஸாஷ்டாங்கஞ்செய்து "அனுதியான யாசகனையா!" என்று சொன்ன தின்பேரில் தலைக்குக் கொள்ளியை விலைக்குவாங்கினபான்மையாகநான் சூதில்லாமல் இங்கு அனுப்பினேன். நீ வந்தல்லவா இப்படியான நிர் மூலஞ் செய்துவிட்டாய்? கெட்டவனே!" என்று உதட்டை மடித்து வண்டுறுக்கித் திட்டிவிட்டு அம்பாரி உள்ளிருக்கின்ற தன் குமாரத்தி யாகிய செய்யிதத்தம்மாளை நோக்கி, என் ஈரற்கொழுந்தான மகளே! அம்மணியே! கொஞ்சமாகிலும் நன்றியில்லாத அந்த முரட்டுப்புரு ஷனை, ஒரு காத்திரமாகக் கருதி பெற்ற தாய் தந்தைகளையும், தேடக் கிடையாத ஐசுவரிய செல்வங்களையும் அடியோடு மறந்து, நமது பெரி யோர்கள் வணங்கிவந்த தேவதைகளின் கிருபாகடாட்சத்தையுமிழ ந்து, ஒரு அற்ப சொற்பமான புதுமார்க்கத்தில் போய் திரு கூறுய் விழுவது என்ன புத்தி அம்மா. உனக்கிது யார் செய்த குபாடம்! தாயே? என்று சொல்லி அழுது கெஞ்சிக் கிரகி ஞன். அதற்கு அந்தக் கனம்பொருந்திய அம்மாள் தன் தகப்பனை நோக்கி, "அறிவில்லாதவனே, அந்த நாயகத்தின் மார்க்கமானதை அற்ப சொற்பமானது, என்று சொன்னயே இது உனக்கென்னபுத்தி. திட்டமாக நான் அவர்களின் நுபுவத்தின் பிரகாசத்தைக் கண்ணல் கண்டே ஒழிய நான் அவர்களின் சிறப்பான மார்க்கத்தை அநுசரிக்க வில்லை. அடே மதியீனமான பாதகனே! கேள் உண்மையாக அந்த நபியவர்களின் மார்க்கத்தை அநுசரியாத உன்போல் படுபாவி களெல்லாம் ஊழியூழிகாலம் நெருப்பால் ஓங்கி யெரிகின்ற நரகலோ கத்திற்கு இறையாவார்களே அன்றி ஒரு எள்ளளவும் பிரயோசனத் தைக் காண்கமாட்டார்கள்." என்று சொல்லிவிட்டு அவன் செவி யில் இரும்புச்சலாகையை இட்டதுபோலக் கலிமா என்னும் மூலமந்தி ரத்தை நல்ல உரத்துக் கூறினர்கள். அதைக் கேட்டவுடனே அர சன் தன் மனதில் எதடா இவளுக்கு நல்லபடியான போதனைகளை ஏற்றி யிருக்கின்றது. நாம் என்னதான் தந்திர மந்திரம் செய்தபோதி லும் இவளுடைய கல்லான இருதயம் ஒன்றிலும் அசையப்போகின்ற வழியே இல்லை. நாம் வீணில் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜன

மொன்றுமில்லே, என்று, நன்ருய்த் தெரிந்துகொண்டு செய்யிதத்தம்மா ளவர்களை நோக்கி அம்மணி! பெற்ற தகப்பனுனவன் அவன் உள்ளங் கருகக்கருக நின்றுகொண்டு கெஞ்சிச்சொல்கின்ற புத்திமதிகளை ஒரு விதத்திலும் கேட்காமல் உன் மனம்போன போக்கில் போக நாடுகிருய்! நல்லது அப்படியே போ. உனக்கு நமது பர்ருஸூலுடைய கொடிய முனி விறங்கக்கடவது, என்று சபித்து, துக்கத்துடன் ஒரு கண்ணுக்கு அழுது ஒப்பாரி வைத்துவிட்டுமகளுடைய அம்பாரி ஒட்டகம் போகு வதைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவனுக கொலுமகாமண்டபத்தில் வந்து அப்படியே வியாகூலப்பட்ட முகத்தோடும் விழுந்து கிடந்தான்.

---

## 6-ம் அத்தியாயம்

### அப்துர்றகுமானவர்கள் செய்த ஹைபிராத்து யுத்தம்.

### மகா பயங்கரமான சண்டை.

மகளுடைய மனவிசனத்தால் ஸ்மரணையற்று விழுந்து கிடக் கின்ற அரசன் சமுகத்தில் மந்திரி பிரதானிகளும், படைத்தலைவர் களும் ஓடிவந்து எங்கள் எஜமானே! தேவரீர் இப்படி யேன் மயங்கிப் பரிதவிக்கவேண்டும்? இந்த உலகத்தில் நாங்கள் நினைத்த எந்தப் பிர மாண்டமான காரியங்களையும் செய்யாமல் விட்டிருக்கின்றமா? அப் படி இல்லையே. அந்தப் பராக்ரமசெயலெல்லாம் தங்களுக்கு நன்ருய்த் தெரிந்திருந்தும் ஏன் தாங்கள் மயங்குகிறீர்கள்? எங்களை அந்த அப் துர்றகுமான்பேரில் ஏவுங்கள். இதோ நாங்கள் எங்களுயிரையும் ஒரு பொருட்டென்று எண்ணுமல் புலிகளைப்போல் போய் விழுந்து அந்த குபாடக்காரனுகிய கிழட்டுப்பயலையும், வெட்டி ஸம்ஹாரஞ் செய்து விட்டு அப்துர்றகுமானையும், தேவரீர் தங்கள் செல்வசிரோமணியாகிய கனந்தங்கியெங்கள் ராணியம்மாளையும் பிடித்துச் சிறைபடுத்திக்கொண் டுவந்து தங்கள் சமுகத்தில் விடுகிறேம் பாருங்கள் என்று சற்று தைரியஞ்சொன்னதின்பேரில் அந்த ஷெய்தான் தன் மனதில் இதுவும் ஒரு சரியான ராஜ தந்திரந்தான் என்று திடப்படுத்திக்கொண்டு உட னே ஆனைப்படையில் ஆயிரம், குதிரைப்படையில் ஆயிரம், தேர்ப் படையில் ஆயிரம், காலாட்படையில் ஆயிரம், வில் முதலிய அஸ்திரப் பாணப்படையில் ஆயிரம் ஆக ஐயாயிரம் சேனை பதாதிகளையும்

வெவ்வேருகப் பிரித்து அவைகளுக்குத் தகுந்த படைத்தலைவர்களையும் ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய ரஸ்து முதலான யுத்த தளவாடங்களையும், நன்கொடைகளையும் கொடுத்து, சேனைத் தலைவர்களை நோக்கி, "அந்த அப்துர்றகுமானை நீங்கள் இலேசான வீரனென்று எண்ணவேண்டாம். அவன் அநேக அநேக யுத்தக்களங்களில் நின்று தன்னுடைய வீர ஸவிஸ்தாரத்தைக் காட்டிய மகா பலாட்டியன். படைக்களத்தில் வெகு சுறு சுறுப்புடனே வந்து பாய்ந்து, நாலாகோணங்களிலும், தன் குதிரையைக் கொள்ளிவட்டம்போல் சுற்றிக்கொண்டு வருவான். அந்த வரத்தில் நீங்கள் அகப்பட்டுக்கொள்வீர்களானல் அது உங்களின் கெட்ட விதியாக இருக்கும். ஜாக்கிரதையாகப் போகுங்கள். எவ்விதத்திலும் நீங்கள் போகின்ற வேலையை முடியாமல் உங்களுடைய சரீரத்தையும், ஆத்துமாவையும் திருப்பிக்கொண்டுஎன்னிடம்வரவேண்டாம்" என்று இன்னும் எவ்வளவோ ரோஷ வார்த்தைகளை யெல்லாம் சொல்லி அனுப்பிவைத்தான். இங்கே இவ்விதமான சங்கதிகள் நடைபெற, அங்கே மதினமா நகரத்தை நாடிப்போன நால்வர்களும், ஜன்னத்துர்றிலா வென்னும் பட்டணத்தின் வீதிகளை யெல்லாம் ஒன்றென்ருகக் கடந்து, கடைசியாகக் கோட்டை வாசலண்டையில் வந்து வாகனங்களை நிறுத்தித் தண்ணீர் முதலிய ஜவாதாக்களைப் பாதைக்கு வேண்டுமானமட்டும் தங்கரீகஞ் செய்துகொண்டு அதில் நின்றும் வெளிப்பட்டு அன்றிரவெல்லாம் வாகனங்களை நடத்தி மலையை விட்டும் கீழிறங்கி வெகுதூரஞ்சென்று ஹைபிராத்து என்கின்ற மஹா நதியைக் கண்டார்கள். இதற்குள்ளே சூரிய உதயமாகி விடிவேருயிற்று. உடனே நால்வர்களும் அந்த நதியில் இறங்கி உலுச்செய்து முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்களுடனே நின்று சுபுஹு தொழுது அல்லாவைப் புகழ்ந்து, றசூலுல்லா பேரில் ஸலவாத்து முதலான விருது பாத்திஹா வோதி முடித்து விட்டுத் தங்களிடமிருந்த ஒஜீபனங்களை எடுத்துப் பரத்தி தின்று பசியாறிக்கொண்டிருந்தார்கள். இவ்வளவு தான், மல்ஊனுகிய அபாசுபியான் அனுப்பிவைத்த ஐயாயிரம் சேனைகளும் கருங்கடல் திரண்டவண்ணமாக வரவும், அந்தச் சேனைகளுக்கு முன்பாக அவனுடைய நாகப்பாம்புக் கொடிகள் ஐந்து பறந்துகொண்டு வரவும் அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள்

கண்டு முர்றத்தை நோக்கி, "என்னு! சமாசாரமொன்றுந் தெரியாமல் இருக்கின்றீர்கள். அதோ மலை முகட்டின்மேலே லஅனத்துப்பெற்ற அபாசுபியானுடைய படைகள் செந்தூள் பறக்க அட்டகாசம் பண்ணிக்கொண்டு சப்தசாகரங்களைப்போல் வருகின்றதைப் பாருங்கள். எல்லா வஸ்துவையும் படைத்த நாயன் நம்முடைய நாட்டத்தை நிறைவேற்றி நமக்கு வெற்றியைத் தருவான். நீங்கள் நல்ல தைரியமான மனதுடன் செய்தத்தைக் காவல் செய்துகொண்டு நில்லுங்கள். அந்த நாய்களை நான் என்ன வேலை செய்கிறேன் பாருங்கள்!" என்று சொல்லி உடனே தங்கள் மனைவியாகிய செய்ததம்மாளவர்களை ஒட்டகத்தின் அம்பாரியின்மேலே போய் ஏறிக்கொள்ளும்படியாய் உத்திரவு செய்துவிட்டு அக்ஷணமே யானைக்கூட்டங்களைக் கண்ட சிங்கமானது கர்ச்சித்தெழும்புவதுபோல் வீரவேஷங் கொண்டெழுந்து, தங்களின் ஜவாதென்னும் ஜாதிக்குதிரையின்மேல் சவாராகி ஒரு பைத்துச் சொன்னார்கள். அந்தப் பைத்தின் பொருளாவது:—இது;

"நெருப்புப்பற்றி எரிகின்ற யுத்தக்களங்களில் தனித்து நின்று கைசமாளிப்பதில் பேர்போன பராக்ரமன் நானாக இருக்கும். என்னுடைய அகலமான வாளை உறையைவிட்டும் உருவிக் கையில் பிடிப்பேனாகில் அது ஒரு நிமைப்பொழுதாவது, அசதிமறதியில்லாமல் எதிர்ப்பட்டவர்களின் தலைகளை அரிந்துகொண்டே போகும். இன்னும் என் புகழ்தங்கிய வல்லயமானது, சத்துராதிகளை மரணத்துடைய துறைமுகத்தில் இழுத்துத் தள்ளிவிடும். அடே மூரியாட்டமுடைய கூட்டங்களே! நெருக்கடியான படைக்களத்தில் என் பேர்பெற்ற ஜாதிக்குதிரையின் வையாளியான கூத்தாட்டத்துக்கு எதிர்ப்படுவீர்களானால் கேடென்றி கேடெல்லாம் உங்களுக்காக இருக்கும். நாயுடைய மக்களே!" என்று இவ்விதம் விருது வார்த்தை சொல்லிக்கொண்டு சத்துருக்களின் படைகளுக்கு எதிரே குதிரையை அக்கினி வேகத்துடன் ஜாரியிட்டுக்கொண்டு போய் படையணிகளைச் சந்தித்தார்கள். சுபுஹானல்லா நான் என்ன சொல்லட்டும்? அப்துர்றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்களின் ஜவாதென்னும் குதிரையானது, தன் வழக்கம்போல் யுத்தமுகத்தைக் கண்டவுடனே கண்களில்நின்றும் நெருப்புப்பொறி பறக்கும்படியாகச்சினங்கொண்டு கோடையிடிகுமறுவதுபோல ஒரு கனைப்புக் கனைத்துப் பயங்கரமான அதிக வேகத்துடன்

நுழைந்து நாலாபக்கங்களிலும் கொள்ளிவட்டம்போல் சுற்றி வந்து சுத்தவீரர்களை, முன்காலாலடித்தும், பின்காலால் உதைத்தும், சுழன்று சுழன்றுமாடுபோல் முட்டியும், வாயாலே கடித்துதறியும்நிர்மூலம் பண்ணிக்கொண்டு திரிந்ததாலே அனேக படைத்தலைவர்களும், ராணுவவீரர்களும் மண்டையோடுகள் திறந்துதயிர்க்குடங்களைப்போல மூளைகள் சிந்தினவர்களாகவும், இன்னும் அனேக சத்துருக்கள், குடல் பிதிர்ந்து, கன்னும்பட்டைகளோடும் கவுடுகள் கிழிந்தவர்களாகவும், பற்கள் தகர்ந்து வாய்வழியாலும், காதுகள் வழியாலும், நாசி வழியாலும் இரத்தம் பிதிர்விட்டோடினவர்களாகவும், இன்னும் அனேக சத்துருக்கள் குதிரைகள் ஆர்ப்பரித்துக்கொண்டு திரிகின்ற இரத்தப்புழுதியில் தள்ளி சவட்டி யுழக்கப்பட்டவர்களாகவும் செத்து அங்குள்ள இரத்த சேறுகளுக்கிடையில் புரண்டு கிடந்தார்கள்.

ஒரு சுமார் பகல் பத்துமணியளவாகி வெயில் அகோரமானவுடனே சத்துருக்களின் படையணிகள் ஒன்று கூடித் திரண்டு அப்துர்றகுமானவர்களைச் சிறைவாரும்படியாகப் பக்கவாட்டில் பதுங்கிக்கொண்டுவந்தார்கள். அவைகளில்சிற்சில காலாட்படைகள் நின்றநிலையிலே சரமாரியான அஸ்திரப்பிரயோகஞ் செய்தார்கள். அந்தப் பாணங்களையெல்லாம் அப்துர்றகுமானவர்கள் தங்கள் பரிசையால் தட்டி விலக்கிக்கொண்டு வடவாமுக அக்கினியைப்போல் கொதிகொதித்துக் குதிரையை நாலாபக்கங்களிலும், சக்கரஜாரியாகச் சுழலவிட்டுக்கொண்டுரணக்களத்தின்நடுவே ஊடறுத்துச்சென்று விலாக்குடையில் அம்பு தைக்கப்பட்ட ஆண்சிங்கம்போலக் கதறிக்கொண்டு பாய்ந்து, சத்துருக்களின் தலைவர்களை நோக்கி நோக்கி வெட்டினார்கள். வல்லயத்தால் சொருகினார்கள். இன்னும் சிற்சில படைத்தலைவர்களை, வேலாயுதங்கொண்டு வயிற்றிலும், மார்பிலுங்குத்தி அந்தக் குத்தோடும் அவர்களைக் குதிரைகளில் நின்றுந் தூக்கிப்பூமியில் அடித்து நசிக்கினார்கள். இன்னும் சில வாய்மதம் பேசிய சுத்தவீரர்களை நோக்கி "அடே மரியாதையில்லாத ஈனப்புத்தியையுடைய நாய்க்கூட்டங்களே! இப்படி எத்தனை எத்தனையோ யுத்தங்களிலெல்லாம் என்னுடன் வந்துநின்று நான் காட்டிய மகா திறமையான பராக்ரம சௌரியங்களைக்கண்டிருந்தும், இப்போது நிர்மூடத்தனமாக வந்து மாட்டிக்கொண்டீர்களா?" என்று வசை மொழி சொல்லிக்கொண்டு பாய்ந்து சவளத்தாலும், தண்டாயுதத்

தாலும் அவர்களின் மண்டைகளிலும், முகங்களிலும் அடித்து தாறு தாறாக உடைத்துச் சரித்தார்கள். இப்படியாகக் குதிரைப்பதாதிகளை அத்த நாசம்பண்ணி சத்துருக்களின் வலதணியை இடதணியிலும், இடதணியை வலதணியிலும் புரட்டி அதலகுதலம் செய்துவிட்டு அப்படியே சீறிய சீற்றத்துடன் யானைப்படைகள் வந்து நிற்கிற கோணத்தில் போய்பாய்ந்து அந்த யானைகளின்மேல் அம்பாரிவைத்திருக்கின்ற சுத்தவீரர்களில் நின்றும் இருநூறுபேர்களை வல்லயத்தால் குற்றி யிழுத்துப் பூமியிலடித்துவிட்டுத் தங்களின் எதிரே சீறிக்கொண்டுவந்த போர்யானைகளின் தும்பிக்கைகளை இலக்குவைத்து வெட்டினார்கள். அந்த உரத்தவாள் வெட்டால் யானைகளின் நீண்ட தும்பிக்கைகளானவைகள் துண்டங்கண்டங்களாகத்தறிபட்டதாலே யானைகள் ஓ வென்றலறி ஆக்ரமித்துக்கொண்டு திரும்பியோடும்போதே தங்கள் முதுகின்மேலிருக்கின்ற தலைவர்களான காபிரீன்களை அம்பாரியுடன்உதறிக் கீழே போட்டுமிதித்துச் சவட்டிக்கொண்டு விரண்டோடித் திக்காலுக்கொரு பக்கமாகச் சென்றன.

போர் செய்யவந்த மதயானைகள் வெட்டுக்குத்தாளாமல் பின்வாங்கியோடுகிறதைக் கண்டவுடனே இராணுவத்தின் வடபாகத்தணியில் நின்ற சில குதிரை பதாதிகள் அப்துர் றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்களைப் பக்கவாட்டில் வந்து மடக்கிப் பிடிக்கலாம் என்று வெகு விரைவாகக் குதிரைகளை நடத்திக்கொண்டு வந்து நாலாபக்கமும் நெருங்கி வளைந்தார்கள். சத்துருக்கள் குபாடங்கொண்டு வருகிறதை மகாபராக்ரமசாலியாகிய அப்துர் றகுமானவர்கள் கண்டு வெவ்விய கோபத்துடன் குதிரையை அக்கினி வேகமாக நடத்திச் சென்று சத்துருக்களின் விலாபக்கத்திலாகி நின்றுகொண்டு "அடே கம்பிநாட்டி நாய்மக்களே! குபாட தந்திரங்களுக்கெல்லாம் மூலக் கருத்தாவானவன் நானாக இருக்கும் என்றுநீங்கள் அறிந்ததில்லையா?" என்று சொல்லிய சொல்லுடன் இடிமுழங்குவதைப்போல் ஒரு அபயசப்தமிட்டு அலற்றினார்கள். அந்தச் சப்தத்தால் மேற்படி சத்துருக்கள் மதிமயங்கி மூளைகள் கலங்கி விலவிலத்து நிற்கும் நிலைமையைப் பார்த்து, "இதோ! மரணத்துடைய வெகுமானந் தருகிறேன். வாங்கிக்கொண்டு நரகலோகம் போகுங்கள்?" என்று சொல்லிக்கொண்டு வெட்டினார்கள். அந்த வெட்டால் குதிரைகளும், அவைகளின்மேல்

சவாரி செய்திருந்த தலைவர்களும் துண்டங்கண்டங்களாக வெட்டுண்டு புழுதியில் புரண்டு உருண்டு கிடந்தார்கள். அந்த சத்துருக்களின் பிணத்துண்டங்கள் சரிந்து கட்டுமரங்களைப்போல மிதக்கின்ற இரத்த ஆற்றில் அப்துர்றகுமான் றலியல்லாகு அன்குஅவர்களின்அகலமான வாளைப்புரட்டி யெடுத்தார்கள். இந்த யுத்தத்தில் ஆனைப்பதாதியிலும், குதிரைப்பதாதியிலும் சுமார் ஐந்நூறு தலைவர்கள் மாண்டார்கள். அன்றியும், காலாட்படையிலும், அஸ்திரபாணப்படையிலும் உள்ள நாலாயிரத்தைஞ்னூறு வீரர்களில் ஏறக்குறைய எல்லாரும்வெட்டுண்டுவைறபிராத்து நதியின் தென்திசையிலும், ஆற்றங்கரைமேலும், இதற்கிடையிலுண்டான விஸ்தாரமுடைய மைதான வெளியிலும், அங்குள்ள பேரீத்தமரத்தடிகளிலும், கற்றுழை மூடுகளிலும் செத்துப் பிணக்காடாய்க்கிடந்தார்கள். மீதப்பட்ட குதிரை வீரர்கள் தங்களின் கடின நடையுடைய குதிரைகளின் சாமார்த்தியத்தாலே தப்பிப் பிழைத்து வோடி மலைமேற் சென்று தங்கள் அரசனாகிய அபாசுபியான் என்பவனைபடுத்து சாஷ்டாங்கஞ்செய் தெழுந்து, படைக்களத்தில் அப்துர்றகுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் காட்டிய யுத்த சாமர்த்திய சௌகரியத்தைச் சொல்லி அழுதார்கள். இவ்விதம் உயிர் தப்பி ஓடி வந்து சொன்ன சுத்தவீரர்களை அரசன் நோக்கி, வீரர்களே! மலைக்காதிருங்கள், உங்களுக்கெல்லாம் நம்முடைய தேவரீரான பற்றுஸாடைய கிருபாகடாட்சம், உண்டாகக்கடவது. இனி நீங்கள் அவனை வெகு சீக்கிரத்தில் வெல்வீர்கள். ஆனால் அவன் யுத்த களத்தில் மகா சாமார்த்தியத்துடன் நின்று கைசமாளிக்கக் கூடிய கொடுசூரன் என்று நான்தான் முன்னமே அறிவித்திருக்கிறேனே, அதற்கென்ன பரவாயில்லை. போனது போகட்டும், இனிமேலாவது பலஜாக்கிரதையாக நின்று ரோஷத்துடன் யுத்தஞ் செய்யுங்கள்? என்று பலபல தைரிய வார்த்தைகள் சொல்லி மகா பேர்பெற்ற தலைவர்களாகப் பத்து வீரர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரமாயிரம் பேர்களாகப் பதினாயிரம் சுத்த வீரர்களைத் தயார் செய்து கொடுத்து, வேண்டுமான வெகுமானங்களுடன் இராஜ போசன விருந்தும் கொடுத்து அவர்களுக்குச் சொல்ல வேண்டிய யுத்த தந்திரங்களும் சொல்லி அனுப்பினான். அனுப்பினதும் அந்தப் படுதோஷிகளான வீரர்கள் பதினாயிரம் பேர்களும், யானை

களின்பேரிலும், ஒட்டகங்களின்மேலும், குதிரைகளின்பேரிலும் சவாரி செய்து மகா உக்கிர வீரவேஷத்துடன் சண்டைகொடிகளைப் பறக்க விட்டு, அவர்களின் அலங்கோலப்பட்ட தேவதையாகிய பர்ருலை ஒரு தங்க ரதத்தில் எடுத்தேற்றி, அந்த விக்கிரஹத்தின் மேலேமுத்து வண்ணக்குடைகளை விரித்துப்பிடித்து, ஆலவட்டங்கள் போட்டு, முரசு தம்பூர், திமிலை, பம்பை, முரடு, திண்டிமம், மத்தளம், பூரிகை, மல்லாரி, நவுரி, காளகம், மோகரணம், புல்லாங்குழல், வீணை, கொம்பு, தவில், கின்னரம், நகரா முதலிய பதினெட்டு வாத்தியங்கள் முழங்க விருதுவார்த்தைகள் கூறிப் புறப்பட்டார்கள்.

பகல் இருபத்தைந்து நாழிகை நேரமாகிய மூன்று மணியளவில் படைக்களத்தில் வெட்டுண்டு கிடப்பவர்களின் இரத்தக்காட்சிகளை யெல்லாங் கண்டு மனதிருப்திகரம் அடைந்த தாஷ்டிக சூரராகிய அப்துர்றகுமான் அவர்கள் தங்கள் குதிரைமேல் தைத்துப்பாய்ந்து போய் கிடக்கின்ற அஸ்திரங்களைப் பிடுங்கி யெடுத்தெறிந்துவிட்டு அதன் தாகத்தை அடக்கும்படியாக அருகில் இருக்கின்ற ஹைபிராத்து நதியில் வந்து தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தார்கள். இருக்க, நதிக்கு வடபக்கத்தில் நின்ற செய்யிதத்தம்மாளவர்களும், ஒட்டகக்காரராகிய முர்றத்தும், அஸ்மத்துடைய மகனும் அங்கிருந்து இடம் பெயர்ந்து நதியைத்தாண்டும்படியானஎத்தனஞ்செய்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கும்போது மலைஉச்சியில் நின்றும்சத்துருக்கள் ஏழுசப்தசாகரங்களைப்போல் கூட்டங்கூட்டமாகத்திரண்டு ராணுவவாத்தியமுழக்கத்துடன் வருகின்ற அதரடியை முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்கள் கண்டு புதுமைப்பட்டவர்களாக அல்லாவின்பேரில் தவக்கல் வைத்துப் பரஞ்சாட்டுதல் செய்துவெகு சீக்ரத்தில் ஒட்டகத்தின் மூக்கணாங் கயிற்றை செய்யிதத்தம்மாளவர்கள் கையில் கொடுத்து விட்டு ஓடி வந்து, நதியில் நின்று ஆயுதங்களைக் கழுவிக்கொண்டிருக்கின்ற அப்துர் றகுமானவர்களிடம் ஜபலுஸ்ஸுபியான் மலையிலிருந்து பெருந்திரளான படைக்கூட்டங்கள் வருகிற கோஷ்டங்களைச் சொல்லி, அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதார்கள். அதற்கு அப்துர்றகுமான் றலியல்லாகு அன்கு முர்றத்திபுனு இஸ்லானவர்களை நோக்கி, "என்பேரில் பிரியமுள்ள முர்றத்தே! நீங்கள் யாதொன்றுக்கும் யோசிக்க வேண்டாம். ஏனென்றால், என்னை வதைசெய்யக்

கூடிய வாளையும், அதை விதிர்த்துப் பிடிக்கக்கூடிய கையையும்அல்லா ஹுத்த ஆலா இன்னும் படைக்கவில்லை யென்று எனக்கு நன்ருய்த்தெரிகிறது. ஆதலால் அந்தப்பன்றியுடைய மக்களை நான் ஒருவனே நின்று ஸம்ஹாரஞ் செய்து விடுகிறேன். அல்லா எனக்கு மெத்தவும் போதுமானவனுக இருக்கிருன். இதற்காக நீங்கள் கொஞ்சமும் அஞ்சவேண்டாம். முர்றத்தே இப்போது நீங்கள் சீக்கிரம் சென்று நம்மை நம்பி வந்த அந்த சற்புத்திரியாகிய செய்தத்தை வெகு ஜாக்கிரதையுடன் காத்துக்கொள்ளுங்கள்? என்றுசொல்லி அனுப்பிவிட்டு அங்கிருந்து. வெகுசுருசுருபுடன்எழுந்துதமதுகுதிரைஅருகில்வந்து நின்றுகெண்டு அதை நோக்கி "என் பராக்ரமத்திற்குத் தகுதியாகவந்த சங்கையான புரவியே! அல்லா உன்கஷ்டத்துக்கேற்ற கூலியை உனக்கு நன்கொடை புரிவானுக. நீ இதற்கு முன் அநேக அநேக யுத்தங்களில் என்னுடன் பட்டகஷ்டங்களைப் பார்க்கிலும்இன்றுநீகாட்டியசௌரியமானது என்னுல் சொல்லுந்தரமானதல்ல. என்ருலும் அந்த கஷ்டமானது இன்ருேடு முடிந்து போகவில்லை. உன் உடம்பின் அலுப்பைப் பாராமல் இன்னமும் எனக்காக வேண்டி கொஞ்சம் பிரயாசை யெடுத்துக்கொள்,,. என்று சொல்லி அதன் முகத்தை முத்திக் கொண்டு ஒரு ராஜ சிங்கம் தொத்தி எறுவதுபோல் சவாராகி ஆகாயத் தளவில் கையைபு யர்த்தி சகலஜீவ கோடிகளையும் படைத்துக் காப் பாற்று கின்றசர்வரக்ஷகனுன றகுமானே! இப்போது நான்உன் றசூலான எங்கள் நபிநாயகமவர்களைத் தேடி வருகிற வழியில் இப்பேர்ப்பட்ட பிரமாண்டமான ஆபத்துக்குள்ளாகி வேறெந்த உதவியுமின்றி உன்னை யே ஆதரவு வைத்தவனுக இந்த அடிமையுடைய சரீரத்தைச் சத்துருக்களின் பெரிய கூட்டத்துக்கிடையிலும், கூறிய ஆயுதங்களின் பிரகாசத்துக்கிடையிலும் கொண்டு போகின்றேன். இன்றெல்லாம் நான் உனக்காக வேண்டி பீஸபீல் செய்து சரீரம் உலைந்து போயிருக்கின்ற களைப்பையும் நீயறிந்திருக்கின்ருய்? எந்த விதத்திலாவது, உன் அறுஷுடைய புலியாகிய ஹலரத்து அலியின் கர்றமல்லாஹு அன்கு அவர்களை எனக்கு உதவியாக அனுப்பி வைத்துவிடு,, என்று முனுஜாத்து செய்தவர்களாகக் குதிரையை விரைவாக நடத்தி சத்துருக்களின் பாளையத்தை முடுகினுர்கள். இந்த சங்கதி யிப்படியிருக்க.

---

## 7-ம் அத்தியாயம்.

### றசூலுல்லாவுக்கு ஒஹி வருதல்

முன்னர் அப்துர் றகுமானவர்களும், அவர்கள் மனைவியாராகிய செய்தத்தென்னும் இராஜ புத்திரியவர்களும், முற்றத்தும், அஸ்மத்துடைய மகனும், ஜன்னத்துர்றிலா வென்னும் பட்டணத்தை விட்டும் பிரயாணமாகி மதீனத்துடைய பாதையைப்பிடித்து வரும்போது, சுபுஹு என்று சொல்லப்பட்ட விடியற்கால நேரமாக இருந்தது, அந்த சமயத்தில் மகாமாட்சிமை பொருந்திய திருமதீனமா நகரத்தின் ஜாமிஆமஸ்ஜிதென்னும் தேவாலயத்தில் நமது நபிநாயகம் முகம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் தங்கள் அஸ்ஹாபிமார்களுடனே நின்று சுபுஹு தொழுது கொண்டிருந்தார்கள். தொழுது முடிந்து ஸலாம் வாங்கின உடனே ஆகாயத்தில் நின்றும் வான தூதராகிய ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கிவந்து நபிநாயகமவர்கள் சந்நிதானமடுத்து, ஸலாம்சொல்லி, "எங்கள் நாயகமான முகம்மதே! தங்கள் மாமனர் அபூபக்கர்சித்தீகு றலியல்லாஹு அன்கு அவர்களின் குமாரர் அப்துர் றகுமான் என்பவர் குபிரியத்தைவிட்டும் தங்கள் மார்க்கத்தை ஒப்புக்கொண்டு கலிமாச்சொலலி, தீனுல் இஸ்லாமாகித் தமது மனைவியுடன் தங்கள் சமுகத்தை நாடிப்புறப்பட்டு வருகிற வழியிலே சத்துருக்களின் படைக்கூட்டங்கள் வந்து வளைந்து யுத்தஞ்செய்கிறார்கள். இந்த சங்கதியை தங்களுக்கு அல்லாகுத் தஆலா அறிவிக்குப்படியாகச் சொல்லினன்" என்று சொல்லிவிட்டு ஞான உலகங்களான பதினெண்ணாயிரம் ஆலமும் அடங்கிப்போய் கிடக்கின்ற தமது பெரிய சிறகுகளை விரித்துக் கொண்டு வானலோகம் போய் மறைந்தார்கள்.

ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து சொன்ன தேவ கட்டளையான சங்கதிகளை நபிநாயகம் ஸல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்கள் அபாபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். அதைக்கேட்ட வுடனே! ஹலரத்து அவர்கள் இனியில்லாத விசனக்கடலில் முழுகினவர்களாக உடல் மறந்து போய் அழுது கொண்டு ஆண்டவனை நினைத்து ஸாஷ்டாங்கஞ்செய்தொழுந்தார்கள். அதன்பிறகு றசூல் நாயகமவர்கள்தங்கள்அஸ்ஹாபிமார்களைப்பார்த்து

சிங்கங்களுக்கொப்பான இணையற்ற சுத்த வீரர்களே! இப்போது வந்த ஒஹியானது. " அப்துர் றகுமானை சத்துருக்கள் வந்துவளைந்து யுத்தஞ்செய்கிறார்கள். என்று மாத்திரம் வந்ததே அன்றி நம்மை அவருக்கு உதவிக்குப்போகும்படியாகக் கட்டளை வரவில்லை. அவ்வித மான உத்திரவுள்ள ஒஹியானது இன்னமொரு தடவை வருகிறவரை யிலும் நாம் எதிர்பார்க்கவேண்டும் நீங்கள் எல்லோரும் பொறுதி செய்துகொண்டு வல்லமைக்கடவுளான றகுமானிடம் துஆக் கேளுங்கள். என்று திருவாய் மலர்ந்து சொல்லிவிட்டுத் தங்களின் சிறப்பான கரங்களை ஆகாயத்தளவில் உயர்த்தி "என்னைக் கடைசி தீர்க்கத்தரிசியாக அனுப்பிவைத்த கிருபாகரனே! நீயே அந்த அப் துர் றகுமானுக்கு உதிவி ஒத்தாசைசெய்து காப்பாற்றி யருள்வா யாக." என்று துஆக் கேட்டார்கள் அதற்கு அங்கிருந்த மகா கனதி வான்களான அஸ்ஹாபிகளெல்லாரும் உரத்த சப்தத்துடனே ஆமீன் கூறி யெழுந்து அவரவர்கள் இல்லிடங்களுக்குச் சென்றார்கள். ஹல ரத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்கள் தங்கள் மாளிகைக்குவந்து, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து சொன்ன ஒஹி யின் சங்கதியை அங்குள்ள தங்களின் மனைவி மக்கள் முதலிய இனத் தார் அனைவருக்கும் சொல்லி அழுதார்கள். அதைக் கேட்டவர்கள் எல்லோரும் தீராத ஆத்திரத்துடன் பெருத்த வியாகூலப்பட்ட முகத் தோடும் சலித்து நின்றழுதார்கள். அவர்களிலே சில சுற்றத்தார் கள் அழுகையை யடக்கி ஆண்டவனிடம் அப்துர் றகுமானுக்கு வெற்றியைக் கொடுக்கும்படியாகப் பிரார்த்தனை செய்தார்கள்.

கவிதை.

* "மதின நாடரழுது கண்கள் வாரிசஞ் செவந்தன,
வதிக வீர ரமர்கள் வெட்டி யங்கரஞ் செவந்தன,
வுதிர மோடி யோடிமண்ணி லுள்ளெலாஞ் செவந்தன
வெதினமாக வோடியோடி வெய்யவன் செவந்தனன்."

* இந்தக் கவிதை, செய்தத்துப் படைப்போர் என்னும் புராணகாவி யத்தில் உள்ளது, அன்றியும், இக்கவிதை தொடுத்துக் கீழ்வரும் சில கவிதைகள் வரையிலும் புராணாசிரியர், சூரியன் அடைந்தது, சந்திரன் உதித்தது, என்பதில் சில கற்பனை வருணனை செய்து போகின்றார். அதை சரித்திரதோரணை பிடித்துமபோகும் வழியின் நடுவே போடடுக் குழப்பு வது நம்தேசத்துக் கொஞ்சப் படிப்புள்ள சாதாரண ஜனங்கள் விளங்கி யறிவது கஷ்டமென்று கருதி மேற்படி வருணனையைப் பிடித்தெழுதாமல் நான் விட்டிருக்கின்றேன்.

இதன் பொருளாவது :—இது ;

அப்துர் றகுமானவர்களை சத்துருக்கள் வளைந்துகொண்ட செய்தியைத் திருமதீனப் பட்டணத்தை யுடையவர்கள் கேள்விப்பட்டவுடனே அந்த விசனத்தால் பொங்கி அழுத அழுகையால் அவர்களின் கண்கள் என்கிற தாமரைப் புஷ்பங்களெல்லாம் செவந்துவிட்டன. இங்கே யிப்படியிருக்க, அங்கே ஹைபிராத்து நதியண்டையில் வந்து வளைந்த சத்துருக்களை அப்துர் றகுமானவர்கள் கைசலியாமல்நின்றுவெட்டின வெட்டாலேவாளாயுதம்பிடித்த அவர்கள்அழகிய கையும் செவந்துவிட்டன. வெட்டுண்டு கண்டங்கண்டங்களாகக் கிடக்கின்ற சத்துருக்களின் பிணங்களிலிருந்து பீறிட்டோடுகின்ற இரத்தத்தினால் சண்டைக்களத்தின் புழுதியெல்லாம் நனைந்து செவந்த சேருகிப்போயின. அந்த அகோரமான யுத்தக் கோரனையைக் காலையிலிருந்து மாலைவரையிலும் கண்டுகொண்டு வந்தவனுகிய சூரிய பகவானுடைய கிரணங்கள் ஆயிரமும் பிரகாசமில்லாமல் அறமழுங்கிச்செவந்துசெவ்வானம்பிறந்துவிட்டது. என்பதே! இவ்விதம் செவ்வானத்தில் வந்து நின்ற அனந்தம் ஜோதி வெயிலையுடையவனுகிய சூரியன் மறுபடியும் கீழேபார்த்தான்.பார்க்கும்போது பதினுயிரம் கணக்கான சத்துருக்களின் நடுவே ஒரே ஒரு குதிரை வீரராக அப்துற்றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள் தன்னந்தனியே நின்று ஆயுதங்களைச் செலுத்திக்கொண்டு வருகிற மகா பராக்ரமசெயலையும், அதனுல் மலையடிவாரந்தொடுத்து யுத்தத்தாவணமாகிய ஹைபிராத்து நதியின் வாராவதிவரையும் பிணங்கள் குவியல் குவியலாக அறுபட்டு விழுந்து கிடப்பதையும் கண்டு நடுநடுங்கி அவனுடைய சூரியகிரணங்கள் என்னும் ஆயிரங்கைகளையும் கூப்பி அப்துர் றகுமானவர்களை நோக்கி நமஸ்காரஞ்செய்துவிட்டு அப்பப்பா இந்த மகா சூரனுக்கெதிரே நாம் இருப்பது தகாத காரியம்! என்று பயந்து விலவிலத்தவனுக உடனே அந்தச் செம்மேகத்திரைவழியாக ஒளித்துகொண்டு அஸ்தகிரிமலையிற் குதித்திறங்கி மேல்திசைக்கடலளவிற் போய் அடைந்தான்.

சூரியன் அஸ்தமாகி இரவுகாலம் வந்த உடனே முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் ஒட்டகத்தின் மூக்கணங்கயிற்றை செய்தத்தம்மாளவர்கள் வசங்கொடுத்துவிட்டுப் படைகளத்திற்குப் போய்

அப்துற்றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்களை நோக்கி "ஓ! எங்கள் எஜமானுடைய மகனே! இந்தப் பூலோகத்தில் இணை சொல்லப் படாத மகா பலாட்டியமுடைய சூரரே! அல்லாகுத் தஆலா தங்களுக்கு மிகுந்த தறஜாத்துகளை நன்கொடை புரிவானாக. பொழுதடைந்து இருள் காலம்வந்திட்டதாலே இனிமேல் யுத்தஞ் செய்யப்படாது. இந்தக் கிழவனுடைய முகத்திற்காக தங்கள் மனமிறங்கிச் சண்டையைநிறுத்தி வாளையுறையிற்போடுங்கள்! என்று உரத்த குரலோசையுடன் கூவிக்கெஞ்சினர்கள். அதன்பிறகு அப்துர்றகுமானவர்கள் யுத்தத்தை நிறுத்தி காபிரீன்களை நோக்கி "அடே கம்மினட்டி நாயுடைய மக்களே! இதோ இருள்காலம் வந்ததின் நிமித்தம் தீனுடைய வேங்கையானது உங்களை விட்டுவிடுகின்றது! தப்பிப்பிழையுங்கள்?" என்று சொல்லிவிட்டுக் குதிரையைத் திருப்பிக்கொண்டு தங்களின் அருமைமணவியார் இருக்கும் இடத்தை நோக்கி வந்தார்கள். படைகளத்திலிருந்து இரத்தத்தில் முழுகினவர்களாக அப்துற்றகுமான் றலியல்லாஹு அன்குஅவர்கள்வருகிறதைச்செய்தத்தம்மாள்கண்டதும் உடனேதாங்கள் ஏறியிருந்தநவரத்தினஅம்பாரியின்ஒட்டகத்தைவிட்டும்அதி சீக்கிரம் இறங்கிவந்துதங்கள்கணவனைரக்கண்டார்கள்- அப்போது. முர்றத்து றலியல்லாகு அன்கு அவர்கள். எழுந்து அப்துர் றகுமானவர்களின் படை அங்கிகளைக் கழற்றினர்கள். கழற்றின உடனே அப்துர் றகுமானவர்களின் சரீரத்தில் கவண்கல், அஸ்திரம், சக்கரம் முதலிய எறி ஆயுதங்களின் காயங்களில் அறுபதும், வல்லயக் குற்று, வாள்வெட்டு முதலிய காயங்களில் நாற்பதும் ஆகக்கூடி நூறு காயங்களையும் கண்டு திடுக்க முற்றவர்களாக அப்துர் றகுமானவர்களின் சந்திரோதயம் பொருந்திய முகத்தைப்பார்த்து அழுதார்கள். அழுகின்ற முர்றத்துக்குச் சில தைரிய வார்த்தைகளை யெடுத்துப் போதித்து அழுகையை யமர்த்திவிட்டு தங்கள் அருமை மணவியாரின் அழகிய மடிக்குமேல் தலையைவைத்து அல்லாவையும், அவனுடைய றசூலாகிய நமது வள்ளலான நாயகமவர்களையும் இருதயத்தில் நினைத்து ஆதரவு தேடினவர்களாகப் படுத்தார்கள்.

மையிருள் பரந்த இரவுகாலத்தில் கூடார மில்லாமலும் மூடுபனி பெய்கின்ற அந்த அகன்ற மைதான வெளியில் காயம்வாங்கின ஆண் சிங்கம் ஒன்று படுத்திருப்பதுபோல மகாபராக்ரம புருஷரான அப்துர்

றகுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் படுத்து சாய்ந்துகொண்டு. எல்லா உலகங்களையும் படைத்து ரக்ஷிக்கின்ற அல்லாகுத்த ஆலாவை நோக்கி. சிலபைத்துகள் சொன்னார்கள். அந்த பைத்துகளின் பொருளாவது:—இது;

"எப்பேர்ப்பட்ட மஹாத்மாக்களாலும் இன்ன வஸ்துதான் என்று முடிவு சொல்லமுடியாத பூர்வீகமான றகுமானே! நீயாகிறவன் ஆண் என்றும், பெண் என்றும், தந்தைதாய் என்றும் ஒருகுறிப்புமில்லாதவனாக அதிதம்ய மாயிருக்கின்றாய்? இப்போது உன் அடிமையாகிய நான் உன் உண்மைத் தூதராகிய நாயகம் அவர்களைத்தேடி வருகின்ற வழியில் சத்துருக்களால் வளையப்பட்டவனாக. யாதொரு துணையுமில்லாமல் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றேன். இந்த நிஷ்டூரங்களை யெல்லாம்நீ கண்கள் இல்லாமல் கண்டு கொண்டிருக்கிறாய்? இப்போது நான் இடுகிற முறைப்பாட்டை நீ செவிகள் இல்லாமல் கேட்கின்றாய்? ஆகையால் என் காருண்யக்கடலான றகுமானே! நீ எந்த விதத்தாலும் உன் அருஷியின் வேங்கையாகிய ஹலரத்து அலி றலியல்லாகு அன்கு அவர்களுடனே. உன் றசூலுடைய அஸ்ஹாபிகளான வீரர்களையும் அனுப்பி இந்த மூதேவிகளான காபிர்களை வெட்டிஹதஞ் செய்துவிட்டு இந்த அடிமையானவன் திருமதினமா நகரம் போகுவதற்கு உதவி செய்தருள்" என்பதே! இவ்விதம் அப்துர் றகுமான் அவர்கள் அல்லாவிடம் முனாஜாத்துக் கேட்டவுடனே. அங்கே மதீனமாநகரத்தில் மகத்துவம் பொருந்திய குதுபுத்தாரா வென்னும் நட்சத்திரமொன்று சிரசிலிருந்து இலங்குகின்ற நமது நாயகம் முகம்மது ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் அஸ்ஹாபிமார்களுடனே பள்ளிவாசலில் இஷாத்தொழுது கொண்டிருக்கும்போது வானலோகத்தில் நின்றும் ஜிபுரீல் அலைஹிவஸ்ஸல்லமவர்கள் வந்திறங்கி அல்லா உடைய ஸலாமும் அதன் பின்னர் தங்களுடைய ஸலாமும் சொல்லி நபிகள் பெருமானாரவர்களை நோக்கி. எங்கள் சற்குருவாகிய முகம்மதே! கேளுங்கள் என்று பின்வருமாறு சொல்கின்றார்கள்.

"நான் முன்னமே வந்து சொன்ன பிரகாரம் தங்கள் அருமை மைத்துனராகிய அப்துர் றகுமான் என்பவர்சத்துருக்களோடுபெரிய சமார்த்தியத்துடன் யுத்தஞ்செய்து அநேக வெற்றிகள் அடைந்தார். தற்போது அவரைக்காபிர்கள் அதிகமான கூட்டங்களுடன் வந்து

நாலாபக்கங்களிலும் வளைந்துகொண்டார்கள். முதல் நாள் யுத்தத்தில் அல்லாகுத் தஆலா அவரைப்பெரிதும் காப்பாற்றி வெற்றியைக்கொடுத்தான். பெரும்பிரளயமாக வந்த கபிரீன்களைக் கண்டதால் அவர் அல்லாவிடம் கையேந்தி முனாஜாத்துக் கேட்டதின்பேரில் இப்போது தங்கள் சமுகம் என்னை யநுப்பிவைத்தான். இதே சமயத்தில் நீங்கள் அவருக்கு உதவிச்சேனைகளைக் கொண்டுபோய் அந்த காபிரீன்களானதுரோகிகளைப் பீஸபீல் யுத்தத்தைக்கொண்டும்வெட்டி சர்வநாசஞ் செய்துவிட்டு அவர்களின் பட்டணங்களையும், நாடுகளையும் சூறை விளையாடி தங்களுக்கு வழிபட்டகபிரீன்களை தயாசிந்தையுடன்தீனில் இஸ்லாமில் வருத்தும்படியாக றகுமானாகிய ஆண்டவன் கட்டளை செய்தான்" என்று சொல்லிவிட்டு மறைந்து போனார்கள். இவ்விதம் ஜிபுரீல் என்னும் வானவர் கோமான் வந்து சொன்ன ஒஹியின் சமாசாரம் யாவற்றும் நபிகள் நாயகம் ஸல்லல்லாகு அலைஹிவஸல்லம்அவர்கள் அங்கிருந்ததங்கள்அன்பரானஅஸ்ஹாபிமார்கள்யாவருக்கும்எடுத்துச்சொல்லிவிட்டு சீக்ரம் எழுந்து அருஷுடைய வேங்கையாகிய ஹலரத்து அலிரலியல்லாகு அன்கு அவர்களையும் அப்பால் யுத்தகளங்களில் எதிர்த்துவருகின்ற சத்துருக்களின் உயிர்களைவாங்கி எமனுக்ுப்பரிசுகொடுக்கின்ற வாளாயுதவீரராகிய ஆமிறு றலியல்லாஹு அன்கு அவர்களையும் அப்பால் எந்த நேரமும் இரத்தவாடை மாறுமலடிக்கின்ற குற்றுடை வாளையுடைய மகா பராக்ரசூரராகியஸஃபை றலியல்லாஹு அன்கு அவர்களையும் அப்பால் வல்லயம் பிடிப்பதற்கென்றே நீண்டிருக்கும் வீரக்கைகளையுடைய மிகுதாதி புனு கிந்துல் அஸ்வது றலியல்லாஹு அன்கு அவர்களையும் தங்கள்அருகில்அழைத்து அவர்களை நோக்கி "ஓ! எனக்கன்புள்ள மகா வீரர்களே? ஜிபுரீல் வந்து சொல்லியவார்த்தையைக் கவனிக்கும்பட்சத்தில் இதுவரையிலும் அப்துர்றகுமான் பெரிதான ஆபத்துள்ளாகி இருக்கலாம் இனிமேல் ஒரு சிறிதும் சுணங்க முடியாது ஆனதாலே நீங்கள் நாலு பேர்களும் சத்துருக்களின்பேரில் இப்பவே முந்திப்போகுங்கள் நாலு மற்ற தீனுன வீரர்களும் நாளைவந்துசேருகிறோம்" என்று கட்டளையிட்டனுப்பினார்கள். சர்வலோக ரட்சகராகிய நமது நாயகமவர்கள் உத்திரவுபோல் அந்த இணையில்லாத நான்கு நரசிங்கங்களும் எழுந்து நபியவர்களின் பாதாரவிந்தத்தில் விழுந்து முத்திமுகந்து பிரயாண

விடை பெற்றுக்கொண்டு தங்கள்தங்கள்மாளிகைகளுக்குப்போனார்கள் போன நால்வர்களில்முதலாவது "தேவசிங்கம்" என்னும்பட்டமுடைய வர்களான அலிரலியல்லாகுஅன்குஅவர்கள்தங்கள்வழமைபோலபடை யங்கியணிந்து இடைகட்டில் உடைவாளென்கின்ற சுரிகையை இரு கச் சொருகி முக்கவர் வேல், வல்லயம் சக்கரம், பாணம் முதலானமுக் கிய ஆயுதங்களை அணிந்து முதுகுப்புறத்தில் அம்பறுக்கூடணிந்து வலதுகையில் தேவகட்கமாகிய துல்பகார்வாளை உருவிப் பிடித்துக் குளம்பைத்தரையில் வைக்காமல் வேகத்துடன் பறக்கின்ற துல்துல் என்னும் தெய்வப்பரியின்மேலே சவாராகி மதீனமாநகரத்தின் பிர தான வீதியில் வந்தார்கள். அதன் பிறகு இந்தக்கடல் சூழ்ந்த பூலோ கத்தில் இணையில்லாத வீரர்களான ஸுபைரு, ஆமிறு மிகுதாதி புனு கிந்திலஸ்வது என்ற மூவர்களும் மகா அக்கினிவேகத்தினையுடைய குதிரைகளின்மேல் சவாரி செய்தவர்களாக வந்து அலிறலியல்லாஹு அன்கு அவர்களை சந்தித்தார்கள்.

## 8-ம் அத்தியாயம்

### செய்தத்தம்மாள் யுத்தத்துக்குப் போகுதல்
### அபாசுபியான் படைக்களம் வருதல்.

எத்தனை எத்தனையோ யுத்தங்களிலெல்லாம் போய் மகா சூரர் களென்று பேர்வாங்கிய தலைவர்களான அந்நால்வர்களும் அந்தமை யிருட்டான அர்த்த சாம நேரத்தில் தங்கள் குதிரைகளை அதிக மான வேகத்துடன் நடத்திக்கொண்டு திருமதினமாநகரத்தைக் கடந்து வெளியாகி காடு வனம் வனாந்திரங்களையும், உயர்த்தியான மலைத்தொடர்களையும் கடந்து ஹைபிராத்தின்திசையை நோக்கிச் சென்றார்கள்.

அலி, மிகுதாது. ஸுபைறு, ஆமிறு. என்னும் மகாப்பேர் பெற்ற தலைவர்கள் நால்வரும் வீரவேஷங்கொண்டு போனதின்பிறகு. நமது இருலோக சற்குருவாகிய நபிகள் நாயகமவர்கள் விளம்பரக்காரர்களை அழைத்து "நாளை அதிகாலையில் ஹைபிராத்தின் திசையளவில் இரா ணுவம்போக வேண்டிய திருப்பதாலே இந்தமாநகரத்தின் திடக்காத் திரமுடைய வீரர்களான அன்ஸாரி முஹாஜிரீன்கள் யாவர்களும் நிரம்

பிய ஆயுத தாரிகளாக வாகனுதிகளுடன் யாதொரு சுணக்கமின்றி வரவேண்டும்'' என்று தண்டோருப் போடும்படிக்கு உத்திரவுசெய்து விட்டு தங்களின் அருமை பிராட்டியாராகிய ஆயிஷா நாயகம் அவர் களின் மாளிகைக்குப்போய் யுத்தத்துக்கு ஆயத்தப்படுகிற சமாசாரம் தெரிவித்து அங்கிருந்து மஸ்ஜிதென்னும் தேவாலயத்துக்குவந்தார்கள் இதற்குள்ளே திருமதினுப்பட்டணத்தையுடையவீரர்களானஅஸ்ஹா பிமார்கள் யாவரும் ஒருப் படத்திரண்டு. படைக்கோலம் பூண்டுகூரிய சர்வாயுதங்களையு மெடுத்தணிந்துகோடை இடிகளைப்போல் கனைத்துப் பாய்கின்ற உயர்ந்த ஜாதிக் குதிரைகளின் மீது சவாராகி முறுமுறுத்த வேங்கைக் கூட்டங்களைப்போல் திரள் திரளாக வந்து நமது நாயகம் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திவ்விய சந்நிதானத்தில் கடலைப்போல் மோதி நின்றார்கள். ஜெயசீலர்களான அஸ்ஹாபிமார்கள் வந்து கூடுவதைக்கண்ட நமது நபிநாயக மவர்கள் இருதயா நந்தங்கொண்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்து அந்தப் படைகளுக்கு முன்னே. தங்கள் மூல மந்திரமென்னும் கலிமாவை எழுதப்பட்ட சந்திர உதய வெற்றிக்கொடியை எடுத்து விரித்துப் பிடிக்கச் செய்து மற்ற தலைவர்களுக்குரிய கொடிகளை அந்தந்த தலை வர்களுக்குரிய படையணிகளுக்கு முன்னால் பறக்கவிட்டு தக்பீறு ஸல வாத்து ஓசையுடன் படைகளை நடக்கச்செய்து. தாங்கள் உடனே எழுந்து வானத்தளவில் கையை உயர்த்தி றகுமானிடம் முனுஜாத் தென்னும் தியானம் பண்ணினவர்களாக சற்றுநேரம் நின்று அப்பால் படைக்கோலம் பூணத்துடங்கினார்கள். எப்படி யென்றால்:—ஒரு பிரகாசம் பொருந்திய மின்னலை ஒரு பூரணச்சந்திரன் பொதிந்த பான்மைபோல் அங்கியை எடுத்தணிந்து, அதன் பிறகு ஆகாயத்தின் நடுவே இந்திரவில் வட்டமிடுவது போல் ஒருபசிய தீபாஜுப்படை யெடுத்து இடையில் வளைத்துக்கட்டி, அல்லாகுத்தஆலாவின் திரு வருட் பிரகாசமான ஜலால் ஜமால் என்கின்ற மொஹரே நுபுவத்து நின்று ஜோதி செய்கின்ற இரண்டு திண்ணிய புஜங்களிலிருந்து சரீர வாதிக்கமும் நிரப்பி மூடிக்கொள்ளும்படியான பரிவட்டமணிந்து. பொன்மஹாமேருவுக்கு மேலே ஒருபூரண வட்டச்சந்திரன் நின்றுபிர காசிக்கும் வண்ணமாகத் தங்கள் மேன்மையும், வரிசையுமுள்ள சிரசில் சர்பந்தென்னும் தலைப்பாகையணிந்து, இடையில்ஒருகுற்றுடைவாளை,

யெடுத்தணிந்து வலது கையில் வல்லயமொன்று பிடித்து பின்புறத்தில் பாணத்தையும், அஸ்திரக்கூண்டையும் அணிந்து. இருபாதகமலங்களிலும் பாதராக்ஷ யணிந்து தங்கள் காதிம் என்னும்பணிவிடைக்காரர்களிடம் குதிரையை ஜோடித்துக்கொண்டு வரும்படி திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.

திருவாய் உத்திரவு பிறந்த அக்ஷணமே காதிம்கள் போய் ஆயிஷாநாயகத்தின் மாளிகையில் நிற்கின்ற கவினவாம்பரியாகிய "உக்காப்" என்று சொல்லப்பட்ட குதிரையை பலவிதத்திலும் ஜோடித்து கல்லணைவைத்து நெற்றியிலும், மார்பிலும் இரத்தினப் பதக்கங்கள் பிரகாசிக்கும்படியாகக் கொண்டு வந்து நபியவர்களின் வரிசையான சமுகத்தில் நிறுத்தினார்கள். நிறுத்திய அந்த அழகிய புகழினையுடைய தெய்வக்குதிரையின் மீது நமது வள்ளலாகிய தெளித்துவடித்த திருமணியாகிய குருவாநந்தவாரிதியாகிய முகம்மது முஸ்தபா றசூல் நாயமவர்கள்வானவர்கள் மலரடிவணங்கும்படியாகவும்,ஹூறுல் ஈன்களென்னும் அரம்பை மாதர்கள் பொற்றும்பளங்களில் தேவபுஷ்பங்களையும் ரத்னகஜிதாதிகளையும்நிரம்பிக்கொண்டுவந்து அபிஷேகஞ் செய்து கண் திஷ்டிக்கழிக்கும்படியாகவும் தங்கள் இருபாதங்களையும் வைத்தேறினார்கள். நபிகள் பிரானவர்கள் சவாரி செய்த உடனே அந்த சங்கையான குதிரையானது தன் இருதயத்தில் ஓஹோ இன்று நமது முதுகின்பேரில் அல்லாகு உடைய திருத்தூதராகிய நமது நாயகமவர்கள் ஏறியிருக்கின்ற நோக்கமானது இந்தப் பூலோகத்தைச் சூழ வளைந்து கொண்டிருக்கின்ற சப்தசாரங்களைச் சேறெழும்படியாகக் கலக்கிவிடுவதற்கோ! அல்லது இந்த விரிவான பெரிய உலகத்தைப்பிளந்து ஊடுருவிப்போய் ஆயிரந் தலைகளையுடையவனாகிய ஆதிஜேடனை வென்று வதைத்து விடுவதற்கோ! அல்லது திசைஸ்தம்பங்களான அஷ்டகிரிகளையும் தூள்படுத்தி விடுவதற்கோ! அல்லது எதிர்த்து வருகின்ற மகுடபந்தர்னர்களான சத்துருக்களை சம்ஹாரஞ்செய்து அத்த நாசம்பண்ணி விடுவதற்கோ! அல்லது எதற்கோ! என்று நினைத்து நடுங்கின நடுக்கத்திலேயே தனது நான்கு அழகிய பாதங்களிலும் பரதநாட்டியங்களைக்காட்டி நடந்திற்று.

இவ்விதம் நமது இருலோக காருண்யரக்ஷகராகியநபிஸல்லல்லாகு அலைஹிவஸல்லமவாகள் படைக்கோலம் பூண்டு குதிரையின்மேல் சவு

ராகி நடந்தவுடனே நாயகமவர்களைச் சூழநாலாபக்கங்களிலும் வடவா முகாக்கினியைப்போல கதகதத்த முகங்களையுடைய மஹா சுத்த வீரர்களான அஸ்ஹாபிமார்கள் தங்களது இராக்கு தேசத்து உயர் ஜாதிக் குதிரைகளோடும் எழுந்து எள்ளிட இடமில்லாத பெருங்கூட்டமாக நடந்தார்கள். இவர்களில் வேலாயுத சன்னத்தர்கள் ஒரு புறத்திலும், பாணப்பிரயோகதாரிகள் ஒரு புறத்திலும், கேடயம், சவளம், குந்தம், வல்லயம், வச்சிரம், சக்கரம், சூலம், பாலம், வாள், பட்டயம், எறியாயுத முதலான ஸமஸ்த ஆயுதாரிகளும் ஒவ்வொரு புறங்களிலும் இடைவிடாது நெருங்கி, அணிகள் பிரிக்கப்பட்டு அமோகமான சந்தடியுடன் படைமுரசு. துந்துமி, டக்கா, டங்கா, எக்காளம், பூரி, முருடு, நஹரா, மல்லாரி, தம்பூர் தமிலை முதலான மேளதாளங்களுடன் விருது நாதனங்களும், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்கிற தக்பீறு ஸலவாத்துகளும் எழுஸப்த சாஹரங்களைப்போல் முழங்கும்படியாக தீனுனபடையானது நடந்தது. மகா மகத்துவந் தங்கிய றசூல் நாயகத்தின் வல்லமையுடைய சேனுவீரர்கள் சவார் செய்திருந்த போர்க்குதிரைகள் கோடையிடிகளைப்போல் கனைத்தெழுந்து தங்களின் அகலமான குழம்புகளைப் படபடவென்று பூமியில் அடித்து நடந்த உக்கிரத்தாலே கடல் சூழ்ந்திருக்கும் இந்த பெரிய பூலோகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஸர்ப்ப அரசனுகிய ஆதிஜேடனுடைய ஆயிரந் தலைகளும் நசுங்கி அவைகளுள் ளிருக்கும் நாகரத்தினங்களெல்லாம் வெளியே பிதுங்கி நடுங்கினது மல்லாமல் மேற்படி குதிரைகளின் குளம்படியின் கீழிருந்து சுழன்றெழும்புகிற புளுதி தூசிகளானவைகள் எழுந்து ஆகாய மார்க்கமாகப் பறந்து அங்கு வோடிச் செல்லுகின்ற கார்மேகப் படலங்களுக் கிடையே ஒரு புதுமாதிரியான மேகங்களைப்போல் சென்று கலந்திற்று. இம்மாதிரியான அட்டகாசங்களுடன் வருகிற றசூல் நாயகத்தின் சைனியங்களுக்குள்ளே விருதுவார்த்தை களுடன் அடிபடுகிற படை முரசங்களின் சப்தங்களை வீரர்கள் சவாராகியிருக்கின்ற ஜாதிக்குதிரைகளின் கனைப்பு சப்தங்கள் மறைத்துவிட்டன, அந்தக் குதிரைகளின் சப்தங்களை கூடாரங்கள், ஆயுத வண்டிகள், ரஸ்துவண்டிகள், தண்ணீர்க்குதாம்கள் முதலான உபகரண தளவாடங்களைச் சுமந்து இழுத்துக்கொண்டு வருகிற மதயானைகளின் சப்தங்கள்

மறைத்து விட்டன. அந்தயானைகளின் சப்தங்களை சங்கைக்குரிய அறபிய ஸ்திரீகள் குழந்தைகள் முதலான இராஜ குடும்பத்தார் ஏறி வருகின்ற இரதங்களின் சக்கர முருளுகிற சப்தங்கள் மறைத்து விட்டன. அந்த ரதங்களின் சப்தங்களை அந்தந்த அணிகளிலுள்ள சேனாதி பதிகளின் வெற்றிக்கை களிலிருக்கின்ற சந்திரதுவஜங்கள் பறக்கிற படபடத்த ஸப்தங்கள் மறைத்துவிட்டன. இந்த எல்லா சப்தங்களை யும் மஹாபராக்ரம ஜெயசீலர்களான அஸ்ஹாபிமார்களின் வாய்களி லிருந்து புறப்படுகிற தக்பீறு ஸலவாத்துகளின் சப்தங்கள் மறைத்து விட்டன. இவ்வித ஆரவார வீரகோஷ்டங்களுடனே நமது சர்வஜீவ தயாவிசால பெருமானாராகிய நபிநாயகம் ஸல்லல்லாகு அலைஹிவஸல் லம் அவர்கள் தங்கள் சைனியத்தை நடத்திக்கொண்டுவந்தார்கள்.

இன்னும் அந்த அறபிய பதாதிகளுக்கு நடுவே வருகின்ற நமது றசூல் நாயகமவர்களின் வரிசையான சிரசுக்குமேலே ஜலப்பிரவாஹ முடைய மேகசாலமொன்று குடைபோல் கவிந்து நிழலிட்டுக்கொண்டு வரவும், பூமிமண்டலத்தை ஊடுருவிப்போய் பாதாளம் வரையிலும் பதிந்துபோய் கிடக்கின்ற தங்களின் இருபாத கமலங்களும் குதிரை யின் அங்குபடிகளில் இருந்து ஜோதிசெய்யவும், கடையுகநாளாகிய மஹ்ஷரில் ஜீவகோடிகளை ரக்ஷித்து மன்றுடிபணைத்து ஆட்கொள்கின்ற இராஜ வானுவாகு என்னும் திவ்ய திருக்கரங்களில் பொற் பிரகாசந் தங்கிய வச்ராயுதம் ஒன்று பளபளவென்றிலங்கிக் கொண்டிருக்கவும், தங்களின்மேனி மெலியாத வாடாத குறையாத திரேஹத்தில்நின்றும் பாளிதபரிமளகஸ்தூரிவாசமானதுகாதகாதவழித்தூரம்வரையிலும்கம மென்றுகமழ்ந்துகொண்டுவரவும், இன்னும்தங்களின்தெய்வத்தன்மை யான அனந்தஞ்சோதி பிரகாசங்களையுடைய முகமென்ற சந்திர மண்டலமானது சேனாவீரர்கள் யாவருக்கும் நிலாவென்னும் மனத ஊக்கத்தைக்கொடுத்துக் கொண்டுவரவும் இன்னும் பெருமா னாரவர்கள் வருகிற வழிகளிலுள்ள காய்ந்துபட்டுப்போயிருக்கின்ற மொட்டைமரங்க ளெல்லாம் அக்ஷணமே பச்சென்று தழைத்து பூவும் காயுமாகக் குலுங்கி நிற்கவும். இன்னும் நமது வள்ளலான றசூ ல்நாயகமவர்கள் வருகிறபாதை யெல்லாம் அநந்தாநந்தம் அற்புதச் செய்கைகள் நடைபெற்றதுடன் தங்களின் சைனியங்களை நடத்திக் கொண்டு வந்தார்கள்.

இவ்வித அலங்காரவற்புதங்களுடனே தங்கள் சைனியங்களும் தாங்களுமாகத் திருமதீனமா நகரத்தைக்கடந்து தாமரை மலர்களின் மேலே அன்னபக்ஷிகளானவை தங்கள்சேவல்களோடும் பார்ப்புகளோடும் இருந்து உல்லாசத்துடன் நித்திரை செய்கின்ற தண்ணீர்த்தடாகங்களையும், வயல்நிலங்களையும், பூங்காவனங்களையும். தேன்கூண்டுகள் உடைந்து அழகிய பொன்னிறமுடைய கொம்புத்தேன்கள் மழையைப்போல் சொரிகின்ற திராட்சத்தோட்டங்களையும், நெருப்பு சுவாலை வீசுகின்றபாலைவனங்களையும், கானையாறுகளையும் இடைக்கிடையேசங்கிலித் தொடர்போல் நெருங்கி வளர்ந்திருக்கின்ற கனைவாய்களையும் கடந்து குடவளைச் சங்குகள் ஆயிரஞ் சூழப்பட்ட ஒரு இணையில்லாத வலம் புரியைப்போலும் ஆம்பல் புஷ்பங்கள் அனேகஞ் சூழப்பட்ட செந்தாமரையைப்போலும் நக்ஷத்திராதிகளால் சூழப்பட்ட ஒரு பூரணச்சந்திரனைப்போலும், வரிபடர்ந்திருக்கின்ற வேங்கைப் புலிகளால் சூழப்பட்ட ஒரு இராஜ சிம்மேறைப்போலும் இன்னும் தெய்வத் தாமரையின் இதழ்கள் ஆயிரத்தெட்டுக்கு மிடையே பிரகாசிக்கின்ற பதுமராக மாணிக்கம் போலும், வலம், இடம், முன், பின், என்கிற நாலாபக்கங்களிலும் புடை சூழ்ந்து நெருக்கடியாய் வருகின்ற தீனுல் இஸ்லாத்தின் ஜெயசீலர்களான அஸ்ஹாபிமார்களுக்கு நடுவே நமது ஞானகாருண்ய மகா பிரபுவாகிய றசூல் நாயகமவர்கள் நடந்தார்கள் இவ்விதமாக நபிநாயகமவர்களின் மாறுதவெற்றியையுடைய சைனிய வெள்ளமானது அன்றிரவெல்லாம் அமோகமான மனவேகத்துடன் வாகனங்களை நடத்திக் கொண்டுவந்தன இதற்குள்ளே சூரிய உதயநேரமாயிற்று. இது இப்படி இருக்க.

முன்னர்சத்துருகளைச்சின்னாபின்னகத்தாக்கிஅபரிமிதமானகாயங்களடைந்துவருத்தபாடுபட்டுக்கொண்டிருக்கும் அநேகம் மஹிமையுடையசூரராகியஅப்துர்றகுமான் றஸியல்லாகு அன்கு அவர்களைசத்துருக்கள் ஏழுகடல்வந்து வளைவதுபோல்வளைந்து ஹே! ரண்டகமுடைய இளவரசனே! நன்றியில்லாத தோஷிமனுஷனே! எங்கள்ராணியம்மாளைமரியாதையுடன் எங்கள் கையில் ஒப்பிவித்துவிட்டு நீ உன் உயிர் தப்பிக்கொண்டு போகலாம். இல்லாத பட்சத்தில் உன் தேஹத்தில் உள்ள சதைகளைகீற்றுக்கீற்றுகவகிர்ந்துநாய்நரிகளுக்குஇரையாக்கிவிடுவோம் என்று பலபல மதமான வார்த்தைகளைச்சொல்லியுத்தத்திற்கு

அழைத்தார்கள். சத்துருக்கள் விருது வார்த்தைகள் கூறி யுத்தத் திற்கழைப்பதை மஹாசூரசமேதரான அப்துர் றகுமான் அவர்கள்கண் டதும் உடனே உதடுகளை மடக்கிக் கடித்துக்கொண்டு கண்களிலிருந்து அக்கினிப்பொறிகள் பறக்கும்படியாகக் காயம்பட்ட வாலிபச்சிங்கத் தைப்போல் முறுமுறுத்தெழுந்தார்கள். எழுந்துமென்ன? சனியன் வல்லயம், வேல் முதலிய கொடிய கூராயுதங்களால் குற்றுண்ட ஆழ மான காயங்களின் வழியாய் அன்றிரவெல்லாம் பிதிர்விட்டோடிய இரத்தவோட்டத்தாலே அவர்கள்எவ்வனதேஜஸான சரீரங்குழைந்து வீக்கங்கொண்டு சீதளங்கொடுத்திருந்த பலஹீனத்தால் ஒரு எள்ளள வும் தலையை உயர்த்தமுடியாத அந்தஸ்த்தில் தாம் இருப்பதைக்கண்டு அருகில் இருக்கின்ற மூர்றத்திபுனு இஸ்லானவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு மனமுடைந்தவர்களாகச் சில வார்த்தை சொல் கிறார்கள்.

"ஓ, என்பேரில் மஹா கிருபையுள்ள முர்றத்தே! என் சரீரத் தின் பலஹீனத்தைப் பார்த்தால் அபரிமிதமாக வந்து கூடிக்கொண்டி ருக்கும் துரோகிகளான சத்துருக்களுக்கிடையில் நான் மரணித்துப் போவதுதிண்ணம்! ஆகையால் தங்களுடையயூகசாமார்த்தியத்தாலே எவ்விதத்திலாவது என் மனைவியாகிய செய்தத்தை இந்த ஆபத்தான இடத்தைவிட்டுங் கடத்திக்கொண்டு மதினமாநகரம்போய் என்தந்தை யவர்கள் வசம் ஒப்புக்கொடுத்து இங்கே நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லிவிடுங்கள் என்று சொல்லி அழுதார்கள். அப்துர் றகுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் சொன்ன வார்த்தையை அருகில் இருந்த சகல கல்யாண குணங்களை யுடைய செய்தத் தென்னும் ரீாணியம்மாள் கேட்டு அடங்காத துக்கசாகரத் தில் முழுகினவர்களாகத் தாங்கள் அருமை நாயகரவர்களின் முகத்தை நோக்கி, என் நாயகமே! என்ன வார்த்தை சொன்னீர்கள். மரணம்! என்கிற பானத்தை யெப்பேர்ப்பட்ட வல்லமைசாலி களும் குடியாமல் போகிறதில்லை. இருந்தாலும் சர்வரக்ஷகக் கருத்தா வாகிய றகுமான் நம்மை இந்தக் காபிரீன்களின் அசிங்கமான கைக ளால் வதைபடுத்தமாட்டான் என்று அடியாளாகிய எனக்குத் தோன்றுகிறது. ஒருக்கால் அப்படிப்பட்ட ஊழ்விதியிருந்து இந்த இடத்தில் தாங்கள் உயிர்விடும் பட்சத்தில் அப்பால் நான் ஜீவித்

திருப்பதில் என்ன பாக்கிய மிருக்கிறது ? தாங்கள் மடிகிற இடத்தி லேயே நானும் மடிந்துவிடுகிறேன். இனிமேல் இந்த சரீரத்திற்கு சொகுசு வைக்கமாட்டேன்" என்று சொல்லி யெழுந்து புருஷனு டைய படையங்கி முதலான உடைகளை யெடுத்து ஆண்வேஷம் பூண்டு, செந்தாமரை புஷ்பங்களைப்போன்ற தங்கள் பாதங்களில் அணிந்திருக்கும் பாடகம், கொலுசு, பாதசர முதலான கால் நகை கள் மறையும்படியாகப் பாதசராயணிந்து, இருதோள்களுக்கு மிடை யில் வாருவலையம் பூட்டி, முத்துமாலையணிந்து, வீரவேல், வல்லயம், சக்ராயுதம், பாணம், தண்டம், சவளம், வச்ராயுதம், பரிசை, வாள் முதலான ஸமஸ்த ஆயுதங்களையுமெடுத் தணிந்து, புருஷரவர்களின் ஜவாதென்னும் கலினவாம்பரியின்மேல் சவாராகி அல்லாவையும், அவனுடைய முத்திராங்கமான றசூல் நாயகமவர்களையும் மனதில் இருத்தி தியானம் பண்ணினவர்களாகக் கணவனுருடைய பாதத்தண் டையில் வந்து விடைபெற்றுக்கொண்டு துரோகிகளுடைய பாளை யத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

செய்தத்தென்னும் மாதுசிரோமணி படைக்கோலங் கொண்டு யுத்த முகத்தில் செல்லுவதைக்கண்ட துரோகிகளான சத்துருக் கள், இவனாப்பா! அரும்பு முளையாத சிறு பையனாக இருக்கின் றான். இவன் வீரதோற்றத்தைப் பார்த்தால் இங்குள்ள சூரர்கள் எல்லோரையும்ஒருநொடிப்பொழுதில் அரிந்துவிடுவான்போலத்தெரிகி றதே! என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு நாலாதிசை களிலும் அணிவகுத்து நின்று ஆயுதங்களைச் செலுத்தினர்கள். மகா சூரத்தங்கிய செய்தத்தம்மாள் நடத்திவந்த ஸவாதென்னும் ஜாதிக் குதிரையானது மூன்றுந்தடவையும் படைக்களத்தைச் சந்தித்த உடனே நரகக்கனலைப்பிடித்து ஆகாரமாகத் தின்னுகிற கடாக்கினி போல் வெகுண்டு பயங்கரமான கோரமுகத்தோடும் பாய்ந்து எதிரே அகப்படுகிற வீரர்களைக் கடித்துதறி யெறிந்ததுடனே ஒருகாலைக்கொ ண்டு சேனாதிபதிகளின் படைத்தொப்பிகளை அடித்துடைக்கும். இன் னும் ஒருகாலைக்கொண்டு அரசர்கள் ஏறிவந்திருக்கின்றமதயானைகளின் மஸ்தகங்களை அடித்துப் பிளக்கும். ஒருகாலைக்கொண்டு வாய்மதம்பே சுகிறகாபிரீன்களின் தலைகளை யுடைத்துமூளைகளைச்சரிக்கும். இவ்வித மாக அந்த ஸவாதென்னும் ஒப்பில்லாத வாம்பரியானது ஆரவாரித்

துக்கொண்டு திரிந்தது. படைக்களமுழுவதும் செய்தத்தம்மாள் அவர்களின் குதிரையின் யுத்தமே சத்துருக்களால் தாங்க ஏலாத பெரிய போராக முடிந்தது. இவ்விதம் ஜவாதென்னும் குதிரையின் காலடிகளாலும் மஹா சூரியாகிய செய்தத்தின் தண்டாயுத வடியாலும், அரசர்கள் ஏறிவந்த பொன்பல்லக்கு, தந்தப்பல்லக்கு, இரதம், கஜவம்பாரிமுதலானவைகள் தூள் தூளாக உடைபட்டுச்சிதறின. இன்னும் செய்தத்தென்னும் பெண்சிங்கத்தின் இடிபோன்ற சப்தத்தாலும், வாள் வெட்டாலும், வல்லயக் குற்றாலும் அனேகமான படைத்தலைவர்களும்,குதிரைபதாதிகளும் ஒன்றோடொன்று இனந்தெரியாமல் நெருக்கடியால் வெறிகொண்டு வாய்மதம் பேசி வெட்டிக்கொண்டதுடன் தலையில்லாத முண்டங்களும், முண்டமில்லாத தலைகளுமாக விழுந்து உருண்டு கிடக்கின்றன. சமர்க்களத்துக்கு நடுவே குதிரைகளோடும் பாடுசாய்ந்து போய் பிணமலைகளாகக் கிடந்தன.

மஹாபராக்ரம சுத்தவீரியான செய்தத்தின்யுத்தசௌரியத்தைக் கண்டு அங்குள்ள சத்துருக்களெல்லாம் ஒருவருக்கொருவர் அடேயப்பா! இந்த வீரன் யாராயிருக்கும்! நாமும் பிள்ளையாய்ப் பிறந்து இதுகாலமட்டும் எத்தனையோ போர்க்களங்களுக்குப் போய் வந்திருக்கிறோம்; இவனைப்போல் ஒரு மஹா வீரதந்திரியைப் பார்க்கவில்லை. ஒரு வேளை வானவனாக இருக்கலாம். அல்லது ஆகாயசஞ்சாரியாகிய அண்டரண்ட பக்ஷியாக இருக்கலாமா? அப்படியில்லாத பட்சத்தில் நமது மஹாராஜாவின் செல்வப்புத்திரியாகிய நமது ராணியம்மாளாக இருக்க வேண்டும்! அந்த அம்மாளுக்கு இவ்வளவு பலாட்டியம் எங்கிருந்து வந்தது? என்று பலரும் பலமாதிரியான வார்த்தைகளாகப்பேசிக்கொண்டு இந்த அற்புதமான வீரனுடைய யுத்ததிறமையை நமது அரசனான அபாசுபியானுக்குப்போய் அறிவிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு அங்கிருந்து சிலர் ஓடிப்போய் அபாசுபியானைக்கண்டு தெண்டனிட்டெழுந்து எங்கள் மாட்சிமை தங்கிய ராஜகெம்பீரரே! தங்கள் நல்வாக்குப்போல நாங்கள் யுத்தஞ்செய்ததில் அந்தக் கொடு சூரனாகிய அப்துர் றகுமானைக் காயப்படுத்தி யுத்தத்திற் கெழும்பாமல் செய்து ஜெயம் பெற்று மறுநாள் பொழுது விடிந்த உதய காலையில் படைகளை யணிவகுத்து நின்று அப்துர் றகுமானை யுத்தத்துக்கு அழைத்தோம். அவ்விதம் அழைத்த கொஞ்சநேரத்திற்

கெல்லாம் மதயானைக் கூட்டத்தில் இளஞ்சிங்கம் ஒன்று செர்ச்சித்துக் கொண்டுவந்து பாய்வதுபோல் ஒரு முகவஜீகரமான சூரன் குதிரை மேல் சவார் செய்தவனாக வந்து எங்களுடைய பாளையத்தில் நுழைந்தான். ஆ! ஹா! எங்கள் ஆண்டவனே! நாங்கள் என்ன சொல்லட்டும்; அந்த மஹா சூரன் ஏறியகுதிரையும், அவனுமாக எங்கள் படையணிகளைப் படுத்தின பாட்டை ஒரு விதத்திலும் சொல்லி முடியாது. எங்களில் உண்டான மஹா பேர்போன தலைவர்களெல்லாம் அவனுடைய அகலமான வாளாயுதத்தாலே வெட்டுண்டு உருண்டு போனார்கள். இப்போது அவனுடன் நின்று கைசமாளிக்கக் கூடிய வீரன் ஒருவனாவது அங்குக்கிடையாது அரசரே! தேவரீர் இதைக்கவனிக்க வேண்டும். இல்லாதபட்சத்தில் காரியம் வெகு தூரம் வரையிலும் கெட்டுப்போகும்!! என்று சொல்லி மன்றாடினார்கள்.

படைவீரர்கள் வந்துசொன்ன ஏலாமை வார்த்தையை அரசன் கேட்டதும் அவனுடைய இருளடைந்த மனமெல்லாம் தட்டுக்கெட்டுத் தடமாடினவனாக ஆசனத்தை விட்டுங் குபீரென்றெழுந்து அவனுடைய ராஜ நகரத்தில் இருக்கும்படியான சகல சேனாவீரர்களையும் அழைத்து அவர்களை நோக்கி "திடாரிக்கம் பொருந்திய சூரர்களே! வேலிக்குவைத்த முள்ளானது காலுக்கு வினையாக வந்த தன்மையாக நான் எடுத்துவளர்த்த ஒரு பையனாலே இப்போது என் அரசுக்குப் பிரமாதமான ஆபத்து வந்து நேரிட்டுவிட்டது? அவன் ஒருத்தன் நின்றுசெய்யும் யுத்தத்திற்கு இதுமட்டிலும் பதினாயிரங்கணக்கான வீரர்கள் மடிந்துபோனது மல்லாமல் அபரிமிதமான வாகனங்களுடன் கைப்பொருள்களும் வீணே சேதமாய் விட்டன. இவ்வளவுக்கு வந்தமட்டிலும் இனிமேற்கொண்டு சும்மா இருக்கப்படாது. நம்முடைய கையைவிட்டும் அப்துர் றகுமானைத் தப்பித்துக்கொள்ள இடங்கொடுக்கும் பட்சத்தில் அது பின்னுக்குப் பெருத்த அபாயத்தில் வந்துவிடும். எப்படியென்றால் இங்குள்ள திரவிய வளங்கள் முதலான சமஸ்த விருத்தாந்தங்களையும் கொண்டு போய் அந்த மதினாவின் தீர்க்கதரிசியாகிய முகம்மதிடம் சொல்லி ஊக்கங் கொடுப்பான். அதன்பேரில் உடனே முகம்மது தன் படைகளுடனே புறப்பட்டு வந்துவிடுவான். அதன்மேற்பட்டு நம்மால் ஸஹிக்கமுடியாத அநேகவிதமான கஷ்ட நஷ்டங்களெல்லாம் வந்து

நேரிடவும் கூடும் ஆனபடியாலே இப்போது நான் சில குதிரைப் பதாதிகளுடன் முன் ஜாக்கிரதையாகப் போகிறேன். நீங்கள் எல்லோரும் ஒருப்படத்திரண்டு நாளை மத்தியானத்திற்குமேல் புறப்பட்டு பார்ப்பவர்கள் மனஸுகள் திகிலடையும்படியாக ஆரவார குரூர கோஷ்டங்களுடன் படைக்களம் வந்து சேர வேண்டியது" என்று சொல்லிக் கண்டிப்பான கட்டளையிட்டு அங்கிருந்து மந்திராலோசனை சங்கத்திற்குச் சென்று, முதல் மந்திரியை நகரத்தைப்பார்த்துக்கொள்ளும்படியாக அதிகார உத்திரவுகொடுத்து, நகரத்தின்நாலாபுறத்திலும் அலங்கங்களிலும் பாரியஸ்திறமையுடன் நின்று காத்துக்கொள்ளும்படியாக சில பலாட்டியம் பொருந்திய காவற்சேனையை வைத்துவிட்டு ராணுவ தம்பூர் முழக்கத்துடன் மலைக்கோட்டையை விட்டுங் கீழிறங்கித் தன் அருமை மகளாகிய செய்தத்தென்னும் மகாவல்லப சுந்தரி நின்று ஜனக்காடு பிணக்காடு படுத்திக்கொண்டிருக்கும் யுத்தக்களத்துக்கு வந்தான்.

மகா துஷ்டச்செயல்களையுடைய கொடுங்கோல் அரசனாகிய அபாசுபியான் என்பவன் "படைக்களத்திற்கு வந்தான்" என்று சேனாதிபதிகள் கேள்விப்பட்டவுடனே மதங்கொண்ட யானைகளைப் போலச் சினந்து தங்கள் தங்கள் படையணிகளுடனே திரண்டுவந்து செய்தத்தம்மாளவர்களைப் பக்கவாட்டுகளில் வளைந்தார்கள். அந்த சூட்சத்தை செய்தத்தம்மாள் கண்டு பாணம்பாயப்பட்ட பெண்சிங்கத்தைப்போல் கெர்ச்சித்தெழுந்து தமது குதிரையை நாலாபக்கங்களிலும் சுழலவிட்டுமுன்னேறியஏற்றத்தோடும்அந்தசேனைத்தலைவர்களில் அறுபது பேர்களைக் கூரிய வாளாலும், விஷங்களால் தோய்க்கப்பட்ட வல்லயங்களாலும், வதைத்துக் குதிரைகளோடும் வீழ்த்தி விட்டுஅங்கிருந்து சமர்க்களமெல்லாம் எள்ளிட இடமில்லாமல் நெருங்கிநிற்கும் சத்துருக்களுக்கு நடுவே பாளையத்தை ஊடறுத்து விலக்கிக்கொண்டு அபாசுபியான் வந்து நிற்கின்ற பாளையத்தை வந்து முடுகினார்கள். முடுகி அங்கே தேன் கூண்டைச் சூழ ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் பான்மையாக அபாசுபியானென்னும் அரசனைச் சூழ்ந்து காத்துக்கொண்டிருக்கும் பெருந்திரளான வீரர்களைக் கண்ணுற்று அவர்களின்பேரில் பாணப்பிரயோகஞ் செய்தார்கள். அந்தப்பாணங்களில் தொடுத்த கூரிய சரங்கள் விர்விர்ரென்று மழைமாரிபோல்

பொழிந்த கோரத்தினுலே அங்கு நின்ற சத்துருக்களில் அநேகர் மார்பில் அணிந்திருந்த செம்புவலே, உருக்குவலே, இரும்புச் சீராமுத லானவைகள் அறுபட்டு மார்போடும் வயிறுகளும் துளேக் கப்பட்டு ஒதியமரங்கள்போல் சரிந்துகிடந்து உருளுகின்ற கோராமையை அபாசுபியான் கண்டு கண் அக்கினிமயமாய்ச் சிவந்த வனுக உதட்டை மடித்துக்கடித்து வண்டுறுக்கிக்கொண்டு ஏறிய குதிரை சவாரியோடும் விரைவாக வந்து, கனம்பொருந்திய செய் தத்தம்மாளவர்களே முடிகினுன்.

*கவிதைகள்.

பகாருவானே றிணேயென நிற்கும் பரிகண்டான்
வகைவகை வீரர் முடிகளே வெட்டும் வாள்கண்டான்
வெகுபரி மாளப் பொருதுசயங்கொள் வேல்கண்டான்
முகமதி வாகும் விழியனருவு முறை கண்டான்.

புவியிடை யல்லும் புன்றரு சொல்லும் பொருமோதி
சுவையுறு சொல்லின் குயிலினே வெல்லுந் துகிர்வாயும்
அவிரொளி பல்லும் நுதலொரு வில்லின் னழகாள்கை
கவணெறி கல்லும் உயிர்பல கொல்லுங் கணேகண்டான்.

முடேகி: இந்த சுத்தவீரன் யாராயிருக்கலாம்; என்று நல்ல ஆராய்ந்து பார்த்தான். அப்போது அங்கே சொல்வதற்கரிதான அகோரத்தையுடைய கோடையிடிபோல் அநுமானித்து நிற்கின்ற ஸவாதென்னும் ஜாதிக் குதிரையைக்கண்டான். மதயானேகளேப்போ ன்ற திடாரிக்கத்தையுடைய தளக்கர்த்தர்களின் சிரசுகளேப் பார்த்துப் பார்த்து வெட்டுகின்ற அகலமான வாளாயுதத்தைக் கண்டான். இன் னும் அந்த சமர்க்களத்தின் நடுவே பரதநாட்டிய மாடித் திரிகின்ற போர்க்குதிரைகளேயும், போர்யானேகளேயும் குற்றி வீழ்த்துகிற நீட்சி யான வேலாயுதத்தைக் கண்டான். இன்னும் செய்யிதத்தம்மாளவர் களின் பூரணவட்டச் சந்திரன்போன்ற முகமானது நெருப்புப்பொறி பறக்கும்படியான வெவ்விய கோபத்துடன் முனிவாகத் தெரிகின்ற பயங்கார தோற்றத்தையும் கண்டான். கண்டதோடுகூட அந்த

* இந்த இரண்டு கவிதைகளும் செய்தத்துப்படைப்போரென்னும் காவிய புராணத்தில் உள்ளவைகள்.

திவ்விய சற்குண சாதுரியங்களையுடைய அம்மாளவர்களின் பவளம் போன்ற செவந்த வாயால் வெளிப்படுகிற குயில்போன்ற இனிய ரஞ்சிதமான ஓசைகளையும், உதடுகளையும், முத்து அடுக்கின வண்ணமாயுள்ள பல்வரிசைகளையும், வில்வளைத்தாற்போலுள்ள அழகிய புருவங்களையும், காந்தளம் மலர்போல் மிர்துவான கரங்களையும், அந்தக் கரங்களில் கவண்கல், பாணம் முதலான எறியாயுதங்களை வைத்துப் பிரயோஹிப்பதையும், இன்னும் கால்விரல்களுக்குமேல் இட்டிருக்கின்ற இரத்தாம்பிரப்பட்டு ஷாராய்க்குக் கீழே இரத்தின கஜிதங்களால் இழைக்கப்பட்ட பொற்சிலம்பு, பாதசரங்கள் பளபளவென்று சூரிய ஜோதி செய்வதையும் கண்டான். கண்டு ஆ! ஹா! இதென்ன விபரீதம்!! நம்முடைய ஈரற்கொழுந்தாகிய குமாரத்தியல்லோ? என்று உறுதியாக மனதில் திட்டப்படுத்திக்கொண்டு உடனே சற்று அருகில் அடுத்துவந்து குதிரையை நிற்பாட்டிக்கொண்டு மகளை எதிர்நோக்கி, ஓ என் கண் குளிர்ந்த மகளே! செய்தத்தே! என்ன பரிதாபம்! தாயே! பிரகாசந்தங்கிய கூரிய விஷாயுதங்கள் பரிமாரக்கூடிய இந்தப் பயங்கரமான ரணக்களத்தின் நடுவே ஆண்வேடந் தரித்தவளாக வந்து நிற்கின்றது என்ன துணிகரம்! ஒருவேளை உன்னை இன்னாரென்றியாமல் உன் சத்துருக்களான என் போர்வீரர்கள் வெட்டி வீழ்த்தி விட்டார்களானால் அப்போது யாருக்கு வந்த நஷ்டம்? பெற்றவனாகிய என் ஈரல்லவா கருகும்! பொய் மாயக்காரனாகிய அந்த முகம்மதின் மார்க்கத்தை அநுசரித்துப் படைத்தவனாகிய பர்ருசுக்கும், தாய்தந்தை இனபந்து ஜனங்களுக்கும் பொல்லாத நிஷ்டூரஞ் செய்து குணங்கெட்ட முரண்டனாகிய அந்தப் புருஷனுடன் சேர்ந்துகொண்டு இவ்வளவு தூரம் கொடியப கையை இழுத்து வைத்தாயே இது என்ன கேவலமான மதியீனம்! சொல்லு அம்மணீ ! என்று மகா இரக்க சிந்தையுடன் நயமும் பயமுமாகக் கேட்டான்.

கேட்ட தமது தகப்பனாகிய அபாசுபியான் என்னும் அரசனை செய்தத்தம்மாள் நோக்கி, "ஏ! ஞானமின்னது அஞ்ஞானமின்னது என்று விளங்கியறியாத நிர்ப்பாக்கியனான பரம சண்டாளனே! புத்தியென்பது ஒரு கொஞ்சமும் இல்லாத மூடனே! கேள்: நீ சொன்னபடி நான்கேவலமானபுத்தியுடையவளல்ல. எல்லா உலகங்களையும்படைத்து ஒரு வஸ்த்துவுக்கும்தன்னையின்னவஸ்துவென்று காட்டாமல்மறைந்து

அருவமாயிருக்கின்ற சகல தயாபர ரக்ஷகனாகிய றகுமானை நாய னென்று உறுதிகொண்டு வணங்காமல் படைக்கப்பட்ட வஸ்துக்களில் நின்று முள்ள கேவலமான பொன்னையும் செம்பையும், உருவங்களாகச் செய்து வைத்து அவைகளை நாயனென்று வணங்கி வருகின்ற தெய் வத்துரோஹியான நீதான் கேவலமான புத்தியையுடையவன். ஏ! மஹாபாதகனே! இன்னும் சொல்கின்றேன் கேள்: நான் நபியென்று ஒப்புக்கொண்டிருக்கின்ற எங்கள் நாயகமாகிய அந்த முகம்மதென் பவர்கள், திட்டவட்டமாக அந்த நிருமல ஸொரூபியாகிய றகுமா னுடைய அத்தியந்த தூதரென்னும் றசூலாக இந்த அகன்ற பூலோகத் தின்கண்ணே வந்து அவதரித்து "புறுக்கானு அலீம்" என்னும் குர்ஆன் வேதம் இறங்கப்பட்ட அத்தாட்சிக்கர்த்தராக இருக்கிறார் கள். அப்பேர்ப்பட்ட சிறப்பும், அளவிறந்த வரிசையும் பொருந்திய எங்கள் இருலோக காருண்ய மோட்ச நாயகமவர்களை உன் வாய் கொழுத்துப்போய்வீண் அநியாயமாகப்பொய்யன் என்றுசொன்னாயே அடபாதகனே! உன் கெட்ட நாவை இதோ! இருக்கும் கூரியவாளால் அறுத்து நாய் தின்கும்படியாய் வீசி விடுவேன். ஆகிலும் தகப்பன் என்கிற ஒரு மரியாதைக்காக வேண்டி மன்னித்து விடுகிறேன் பாதகா! உன் மூதேவித்தனம் பொருந்திய முகத்தை எனக்குக் காட் டாதே. பார்க்க அருவருப்பா யிருக்கிறது. விலகிப்போய் விடு என்று சீறிக்கொண்டு அவனுடைய மார்புக்கு நேரே இலக்குவைத்து வேலா யுதத்தை நீட்டினார்கள்.

இவ்விதம் தான்சொன்ன இரக்கமான சொல்லுக்கு எதிரே மகள் மறுமொழி கொடுத்ததையும், அதோடு வடவாமுக அக்கினிபோல் கொதிக்கின்ற முகக் குறியையும், கொஞ்சமாகிலும் தந்தையென்ற மரியாதை பாராமல் வேலாயுதத்தை யெடுத்து நீட்டுவதையும், கண் கூடாய்க் கண்ட அபாசுபியான் தன் மனஸுக்குள்ளே நாம் இவளை மகளென்று எண்ணிக்கொண்டு மிதமாய் நிற்பது இனித்தகாத காரியம், மோசத்துக்கு வழியாயிருக்கிறது! சும்மா பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது என்றெண்ணி உடனே மதங்கொண்ட யானையைப்போல் சினங்கொண்டவனாகத் தன் குதிரையை வலசாரி யிடசாரி யிட்டுக் கொண்டு முன்னேறி வந்தான். அதுகண்டு செய்தத்தம்மாளவர்களும் தமது ஸவாதென்னும் குதிரையை சக்கர ஜாரியிட்டுக்கொண்டு அவன்

முன்னேறினார்கள். தந்தை மகள் என்னும் இருவருடைய குதிரைகளின் குளம்படித் தூசிகளானவை சுழன்றெழுந்துபோய் சூரியன் தெரியாமல் ஆகாயத்திற் செறிந்தன. அப்படியான குதிரை நடனஜாரியுடன் சிங்கமும், சிங்கமும் கெர்ச்சித்து எதிர்த்ததுபோலும் மலையும், மலையும் ஒன்றோடொன்று மோதி இடித்துக் கொண்டது போலும், பலபல ஆயுதங்களையு மெடுத்து, ஒருவருக்கொருவர் வெட்டுந்தட்டுமாக வெகுநேரம் வரையிலும் யுத்தஞ் செய்தார்கள். சூழ நின்று பார்க்கின்ற வீராதிவீரர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் ஆ! இதென்ன புதினமான யுத்தம். இந்த உலகந் தோன்றிய நாள் தொடுத்து இதுநாள்வரையிலும் இதோ! தகப்பனும் மகளும் செய்கின்ற யுத்தத்தைப்போல் யாருஞ் செய்திருக்கமாட்டார்கள் என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் அபாசுபியான் என்னும் அரசன் எந்தவிதத்திலும் ஆயுதங்களைச் செலுத்த முடியாமல் கடைசியாக நான் பெற்ற கேவலம் ஒரு பெண் குழந்தைக்கு இவ்வளவு திறமையான வல்லமை யெப்படி வந்தது? என்று ஆக்ரோஷங் கொண்டவனாக சிங்கம் சீறிவந்ததுபோல் குதிரையில் நின்றுமெழுந்து வல்லயத்தை உருவி செய்தத்தம்மாளவர்களின்சிரசுக்கு நேரே நீட்டினான். அதற்குச் செய்தத்தம்மாளவர்கள்தங்கள் முக்கவர் வேலாயுதத்தால் சீக்ரம் தோடு செய்து தடுத்தார்கள். தடுத்து உடனே தங்களின் தண்டாயுதத்தாலே ஓங்கி யோரடியடித்தார்கள். அந்த அடியாலே ஷெய்தானாகிய அபாசுபியான் பிடித்திருந்த வல்லயமானது வொடிந்து நூறு துண்டுகளாக நொறுங்கிச் சிதறிற்று. அது கண்டு மறுபடியும் அபாசுபியான் ராஜசர்ப்பத்தைப் போல் அக்கினிமயமாய்ச் சீறி யெழுந்து இரண்டாந்தடவையாக அவனுடைய அகலமான வாளாயுதத்தால் செய்தத்தம்மாளவர்களை வீசினான். உடனே செய்தத்தம்மாள் தங்கள் கையிலிருந்த கேடகத்தாலேயே அந்த வாளையுந் தடுத்தார்கள். அப்போது அந்த வாளாயுதமானது படீரென்று தெறித்து இரண்டு துண்டங்களாக விழுந்து விட்டது. அதையுங் கண்ட அபாசுபியான் என்பவன் மறுபடியும் மூன்றாந் தடவையாகத் தன் கேட்கத்தால் அடிக்க நாடி வந்தான். அந்த நோக்கத்தை மஹா பராக்ரம சூரியாகிய செய்தத்துக் கண்டு தமது கணவனுடைய மந்த்ரவாளாயுதத்

தாலேபளிரென்று வீசினார்கள். அந்தக் கொடிய வாள் வீச்சினால் அபா சுபியானுடைய கேடகமானது முறிந்து போயிற்று. இந்தக் கடல் சூழ்ந்த உலகத்தில் எவராலும் செய்யத்தகாத மஹா சிலம்ப யுத்த வேலைமானங்களால் எடுத்துக்கையாடிய வல்லயமும், வாளும், கேடகமும் தன் மகளாகிய செய்தத்துடைய ஆயுதப் பிரயோஹங்களால் முறிந்து போனதையும், செய்தத்தம்மாள் அவர்கள் வந்து நிற்கின்ற எமவீரகோலத்தையும், அபாசுபியான் கண்டு ஆ! இவள் மஹா வீரபராக்ரமஸாலியாக இருக்கிறாள். இவளோடு ஆயுதஞ் செலுத்த நம்மால் முடிந்த வேலையல்ல, என்று மனதில் திட்டப்படுத்திக்கொண்டு, உடனே உள்ளச்சங்கொண்டவனாகக் குதிரையைப் பின்கால் வெட்டி வெருண்டோடி தன் ராணுவத்துக் குள்ளேபோய் நுழைந்துகொண்டு செய்தத்தம்மாள் பேரில் பாணப்பிரயோகம் செய்யும்படியாகத் தன் வீரர்களுக்குக் கட்டளை பண்ணினான்.

தன் மகளாகிய கனம்பொருந்திய செய்தத்தம்மாளவர்களோடும் எதிர்த்து நின்று தான் கற்ற யுத்தசிலம்பத்தொழில்மானங்களெல்லாங் காட்டியும் ஒன்றிலும் சப்பரம் பரியாமல் உயிர்தப்பியோடிவந்த அரசன் சொன்ன வார்த்தைப்படி அவனுடைய சேனைவீரர்கள் பாணம் என்கிற வில்லுகளை வளைத்து நாணேற்றி அவைகளில் கூரிய அஸ்திரங்களைத் தொடுத்து, செய்தத்தம்மாளை நோக்கிப் பாயவிட்டார்கள் ஆஹா! அந்தக்கொடிய வீரர்கள் நாலாபுறங்களிலும் புடைபடர்ந்து நின்று பிரயோகஞ்செய்த பாணச்சண்டையானது யாராலுஞ் சொல்லுந் தரமானதல்ல. முடிவாகச் சொல்லவேண்டுமானால்:—அந்த சமர்க்களத்தினடுவே எமதூதர்களைப்போல் ஜாரிவளைந்து வருகின்ற ஜாதிக்குதிரைகளின் பாததூசியானது ஆகாயத்தின்கண் பறந்து வருகிற கருமேகப்படலமாகவும், அங்கே யுத்தவெறிகொண்டு திரிகின்ற சுத்த வீரர்களின் கைகளிற் பிடித்திருக்கின்ற ஆயுதங்களின் பிரகாசமானது அடிக்கடி வெட்டி மறைகின்ற மின்னலாகவும், அங்கே ஊதுகின்ற விருது வாத்தியங்களுடன் அடிபடும் படை முரசங்களின் முழக்கமானது இடிகளாகவும், அந்தப் பரமசண்டாள துரோகிகளான சத்துருக்கள் பொழிந்த சரங்களானவை விடாது அடைத்துக்கொண்டு பெய்கின்ற ஒரு பிரமாண்டமான சோனைமழையாகவும் தோன்றிற்று. இவ்விதம் சத்துருக்கள் எய்கின்ற பாணங்களுக்கெதிரே

செய்தத்தம்மாள் அவர்களும் தங்கள் அம்பராக்கூட்டிலிருந்த விஷாஸ் திரங்களை வாரி வாரி சத்துருக்களை நோக்கிப் பொழிந்தார்கள். மகா சௌந்திரிய கல்யாணகுணங்களையுடையசெய்தத்தமாளவர்கள்விடுத்த பாணங்களில் சில அஸ்திரங்கள் எமனையுந் துணையாகக் கூட்டிக் கொண்டு சீறி சத்துருக்களின் திண்ணிய புஜங்களிலும், மார்புகளி லும், கண்களிலும், குரவளைகளிலும், வயிறுகளிலும் போய்ப்பாய்ந்து வெகு சுருசுருப்புடன் கிறிக்கிழித்து ஊடுருவிக்கொண்டு பின்புறத் தால் சென்றன. இன்னும் சிற்சில பாணங்கள் சத்துருக்கள் அணிந்தி ருக்கின்ற உருக்குச்சீரா முதலிய படையங்கிகளுடன் மார்புகளையுந் துளைத்துக்கொண்டு உள்ளேசென்று ஈரற்குலைகளை உதறித் தாமரைக் காய்களில் இருக்கும்படியான உயிரைப்பிடித்து எமனுடைய கை யிற் கொடுத்துவிட்டுத் தாளமேளத்துடன் முதுகுப்புறங்களாற் பாய் ந்து போயின. இன்னும் செய்தத்தம்மாளவர்கள் விடுத்த சில பாணங் கள் சீறிச் சினந்துகொண்டு போய் அந்த ரணக்களத்துக்கிடையிடை யே நிற்கின்ற வீரக்குதிரைகளின் சிரசுகளையும், வயிறுகளையும், துளைத்து மூளைகளையும், குடர்களையுஞ் சரித்துவிட்டு அவைகளின் மேல் சவாராகியிருக்கும் தளகர்த்தர்களையும் வதைத்து அவர்களின் பெண்ஜாதிமார்களின் தாலி நூல்களையும் வாங்கி விடுகின்ற தன்மை போல் ஓடிச்சென்றன.

இவ்வாறு வில்யுத்தத்திலும் செய்தத்தம்மாளவர்களே கைமிகைத் தவர்களாக வெற்றிகொண்டு நிற்பதை பஞ்சபாதக துரோகியான அபா சுபியான் கண்டு சீக்கிரம் தன் வாட்படை வீரர்களை அழைத்து "ஓ! வீரர்களே! நீங்கள் அந்தப் பாதகியை என்னுடைய மகளென்கிற தாட் சண்ணியமில்லாமல் மனங்கொண்டமட்டிலும் ரோஷத்துடன் விழுந்து வெட்டுங்கள். அப்படி வெட்டி அவளுடைய தலையைக் கொண்டுவந்த வனுக்கு என் ஆஸ்தியில் அரைவாசியை நன்கொடையாகத் தருகி றேன்," என்று சொல்லி மன ஊக்கப்படுத்திக்கொண்டு நின்றான். அர சனுடைய சொல்லைக்கேட்டு வாட்படையில்அணிவகுத்துநின்ற வீரர் கள் யாவரும் ஒன்றாய்த் திரண்டு தங்கள் தங்கள் குதிரைகளைக் கடாவிக் கொண்டுவந்து இணையில்லாதவீரத்தையுடைய சிங்கத்தை வெல்லுகிற தற்கு ஊழை நரிக்கூட்டங்கள் வந்தனபோலும், கொடிய விஷத்தை யுடைய ராஜஸர்ப்பத்தை வெல்லுதற்குத் தவளைகள் திரண்டு வந்தன

போலும் செய்தத்தம்மாளவர்களை நாலாபக்கங்களிலும் வளைந்துநின்று வாள் வீசினார்கள். இதுதானா? லஅனத்துப் பெற்ற ஷெய்த்தானாகிய அபாசுபியான் கட்டளையிட்ட மாத்திரமே! செய்தத்தம்மாளை வன் கொலைசெய்து நன்கொடை பெறும்படியாக வாளாயுதங்களுடன் வந்து முறுக்கியவர்கள் அநந்தம்பேர். வேலாயுதங்களை யேந்தி நீட்டிக் கொண்டுவந்தவர்கள் அநந்தம் பேர். இப்படியாக வந்து வளைந்த சத்துருக்களைக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் வெட்டித் துண்டந் துண்டங்களாகக் கிடத்திவிட்டு செய்தத்து அம்மாள் நிற்கும்போது,

---

## 9-ம் அத்தியாயம்.

### அலியும், ஆமிறும், சுபைறும், மிகுதாதும், வருதல். யுத்தமுனை அத்நாசமடைதல்.

முந்தினநாள் யுத்தத்தில் பெருத்த காயம்பட்டு வருத்தத்துடன் படுத்துக்கொண்டிருக்கின்ற அப்துற்றகுமான் றலியல்லாஹு அன்கு அவர்கள் திருமதினமா நகரத்தின் பாதையின்பேரிலே கண்வைத்த வர்களாக நிமைகொட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது அங்கோர் திசையில் நின்றும் மேகத்தைப்போல் புழுதி கிளம்பி ஆகாசத்தை மறைக்கவும், குதிரைகளுடைய குழம்படி சப்தங்கள் இடியைப்போல் முழங்கவும், ஆயுதங்களின் பிரகாசங்கள் மின்னலைப்போல பளீர்பளீரென்று வெட்டவும், ஆங்காரம் பொருந்திய கடாக்கினியைப் போல் முகவெப்பங்களை யுடைய நான்கு மஹா சூரர்களைக் கண்டார்கள். கண்டு தங்கள் அருகில் இருக்கின்ற முர்றத்திபுனு இஸ்லான் அவர்களை நோக்கி "அதோ! வெகு தூரத்தில் நான்கு குதிரை சவாரிக்காரர்கள் வருகிறதுபோல் தெரிகின்றது. நீங்கள் எதிர்கொண்டு போய் அவர்களை யாரென்று தெரிந்துகொண்டு வாருங்கள்" என்று உத்தரவு கொடுத்தார்கள். உடனே முர்றத்து அவர்கள் படையங்கியை யெடுத்தணிந்து கையிலொரு வாளையும் எடுத்துப்பிடித்தவர்களாக வெகு விரைவான நடையுடன் சென்றுபார்க்கும்போது அந்த நான்குபேர்களும் "தேவ சிங்கம்" என்கிற ஹலரத்து அலியும், ஆமிறும், ஸுபைறும், மிகுதாதுமாக இருக்கக் கண்டு அல்லாவைப் புகழ்ந்து ஸஜாதாசெய்தெழு

ந்து அலிறலியல்லாகு அன்கு அவர்களின் பாதகமலங்களில் தலையை வைத்து முத்தி தஸ்லீமாத்து செய்து ஸலாமும் தக்பீறுஞ்சொன்ன வர்களாக அப்துற்றகுமானவர்கள் படைக்களத்தில் காட்டிய யுத்த சாமர்த்தியத்தையும் தற்போது அவர்கள் நூறுகாயங்கள் வாங்கப் பட்டு மிகுந்த வருத்தத்துடன் படுத்திருப்பதையும், அவர்களுடைய மனைவியாராகிய செய்தத்தென்கிற ராஜ புத்திரி நின்று யுத்தஞ்செய்வதையும் சொன்னார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே! அலி றலியல்லாகு அன்கு முதலான நான்கு நாதாக்களும் வெகு சுருசுருப்புடன் உருவிப் பிடித்த வாளாயுத தாரிகளாகக்கோடை காலத்து இடிகள் குமுறி விழுவதைப்போல் தாங்கள் ஏறிய உயர்ஜாதிக்குதிரைகளுடனே போர்க்களத்தில் நுழைந்து நாலா கோணங்களிலும் சென்று அல்லாஹு அக்பர் என்கிற தக்பீறு சப் தங்களுடன் காபிரீன்களை சின்னாபின்னமாக வெட்டி ஹதஞ் செய்து நாசமாக்கினார்கள். அல்லாவின் அறுஷுப் புலியாகிய அலியின்கர்ற மல்லாகு அன்கு அவர்கள் வேகத்தால் இட்ட இடி முழக்கமான சப்தத்தால் காபிரீன்களும், அவர்களின் தலைவர்களும் முகங் குப்புற அடித்துவிழுந்து மாண்டு கிடந்தார்கள்.

ஆமிறு றலியல்லாகு அன்கு அவர்கள் நின்ற திசையில்சத்துருக் களைத் துண்டங்கண்டங்களாக வெட்டி அவர்களின் இரத்தவோட்டத் திற்கிடையே தங்களின் நடனக்குதிரையை வையாளி விட்டார்கள். மிகுதாதிபுனு, இக்திலஸ்வது றலியல்லாஹு அன்கு அவர்கள் போய் நுழைந்த திசையில் சத்துருக்களின் சேனாதிபதிகளை அவர் களேறிய குதிரைகளோடும் வெட்டி, வகிர்ந்து வல்லய முனையில் குற்றி யெடுத்து உயர்த்திக்கொண்டு படைக்கள முழுதும் வட்டமிட் டுக்கொண்டு திரிந்தார்கள். சுபைறி புனு அவாம் றலியல்லாஹு அன்கு அவர்கள் நின்ற திசையில் சத்துருக்களின் சிற்றரசர்கள் ஏறி வந்ததோர்களையும், ரதங்களையும், ஒட்டக அம்பாரிகளையும் முடிகி அவைகளைத் தங்கள் கையிலிருந்த தண்டாயுதத்தினாலே பொடிபொடி யாக நொறுங்கடித்து மேன்மைபொருந்திய தீனுல் இஸ்லாத்தின்திருக் கலிமாவைச் சொல்லாத காபிரீன்களின் நாவுகளைப் பிடித்து இழுத் திழுத்து அறுத்தெறிந்தார்கள். இவ்விதம் பேர்பெற்ற மஹாபராக்ரம சாலிகளானநான்கு அறபித்தலைவர்களும் விடாது செய்தகொடிய யுத்

தத்தாலே லஅனத்துப்பெற்ற அபாசுபியர்னுடையசேனுவெள்ளங்கள் முழுவதும் பாடுசாய்ந்து அத்தநாசமடைந்துபோயிற்று. இனி ஒரு சிறிதும் நின்று கைசமாளிக்க முடியாதென்று அபாசுபியான் கண்ட வுடனே மீதமிருந்த ஒரு கொஞ்சப்படைகளுடனே தோற்றுப் பின் கால் வெட்டி ஓடி தனது ராஜதானிப்பட்டணம் போய் ஒளித்துக் கொண்டான்.

---

## 10-ம் அத்தியாயம்.

### றசூலுல்லா படைகோண்டு வருதல், ராஜதானி பட்டணம் பிடிபடுதல்.

இதற்குள்ளே திருமதினுப்பட்டணத்திலிருந்து நமது நபிகள் நாயகம் முகம்மது முஸ்தபா றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தீனுனபடைகளும் தக்பீர்சப்தங்கள் தொனிக்க, ஸலவாத்து முழங்க, ரணவாத்தியங்கள் கரங்க, வீரக்கொடிகள் பறக்க, வானவர்கள் பூமாரி பொழிய, வெற்றி மாராயங்கிடைக்க வந்து படைக்களத்தில் சேர்ந்தார்கள். றசூல் நாயகத்தின் திருவரவை அலி றலியல்லாகு அன்கு அவர்கள் கண்டவுடனே அநேக சந்தோஷ மனுனந்தத்துடன் அஸ்ஹாபிமார்களின்வீரக்கூட்டங்கள்புலிகளைப்போலப் பின்தொடர்ந்து வரும்படியாகச் சென்று அபாசுபியான் ஓடிப்போய் ஒளித்திருக்கின்ற ராஜதானியை முற்றுகையிட்டு அலங்கத்தின் வழியாக நாலாபக்கங்களிலும் வளைந்து நிரம்பவும் யுத்ததந்திரமஹா சாமர்த்தியத்துடன் பட்டணத்தைப்பிடித்தார்கள். அப்பால் ராஜ நகரத்தை மூன்று நாள்மட்டும் கொள்ளையாடும்படியாக றசூலுல்லா கட்டளையிட்டார்கள். அதே பிரகாரம் அஸ்ஹாபிமார்கள்பட்டணத்தின் நீண்ட வீதிகள்தோறும் வீரவேஷங்களுடன் புகுந்து கொள்ளையாடினுர்கள். அறபிகளின் அகலமான வாட்களுக்குப்பயந்து அமான்கேட்டவர்களை இஸ்லாமில் அழைத்தார்கள். சீருஉடைய இமாம்களின்சொல்லின்படி அந்தப் பட்டணத்தில் 7500 காபிரீன்கள் இஸ்லாமாகி நேர்வழி பெற்றுர்கள். அபாசுபியான் என்பவன்செய்தத்தம்மாளவர்களால்சிறையாக்கப்பட்டவனுக மதினமா நகரத்திற்குக் கொண்டுபோகப்பட்டான். அப்பால் அப்துற்றகுமானைக் கொண்டுவரும்படியாக றசூல் நாயக

மவர்கள் திருவாக்குப் பிறந்ததின்பேரில் முர்றத்து றலியல்லாஹு அன்கு அவர்கள் கொண்டு றசூல் நாயகத்தின் சமுகத்தில் படுக்கவைத் தார்கள். அவர்களின் சரீரத்தில்பட்டிருந்த படுகாயங்களை அஸ்ஹாபி மார்களும் அவர்களின் தந்தையாகிய அபாபக்கர் சித்தீக்கு றலியல் லாகு அன்கு அவர்களும் கண்டவுடனே குல்! என்று கதறியழுது விட்டார்கள். அவர்களை றசூலுல்லா அவர்கள் தங்கள் வரிசையான மடியின்மேல் கிடத்தி வைத்துக்கொண்டு அவர்களின் நெற்றியில் முத் திமுகந்து தங்களின் சிறப்பான திருவாய் அமிர்தமான உமிழ் நீரை கையில் எடுத்து ஆண்டவனுடைய திருநாமம் சொல்லி சரீரமெல்லாந் தடவினுர்கள். அந்தக்ஷணமே அப்துற்றகுமான் அவர்களின் சரீரத் தில் பட்டிருந்த படிகாயங்கள் நாறும் ஆறி தடந்தெரியாமல் மறைந்து போயின.

---

## 11-ம் அத்தியாயம்.

### ஜயசீலர் மதீனம் போகுதல்.

காயங்கள் ஆறின அற்புதத்தைக்கண்கூடாய்க்கண்ட அப்துர்றகு மானும் அவர்களின் மனைவியாராகிய செய்ததம்மாளவர்களும் புஜங்கள் பூரித்தவர்களாக நாயகம் அவர்களைப் பலபல மாதிரியாக வருணித்துப் புகழ்ந்துகொண்டு பாதங்களில் விழுந்து முத்தி அவர்களின் திருக் கரத்தைப் பிடித்து இரண்டா முறையும் இஸ்லாமிலானுர்கள். அப்பால் றசூல் நாயகம் அவர்கள் அப் துர்றகுமானுக்கும் அவர்கள் மனைவிக்கும் துஆச்செய்து விட்டு அங்கிருந்து பல ஜயஸ்தம்பங்களுடனும், விருது துவஜ ஆரோ கணத்துடனும் பலநாள் நடந்து வந்து இந்தக் கடல் சூழ்ந்த பூலோ கத்தின் ஸ்வர்ணசொர்க்கப் பூபதியாகியதிருமதீனமாநகரத்தில்சேர்ந்து சகல கல்யாண வைபவங்களுடன் வாழ்ந்திருந்தார்கள். இதை நல்ல மனத்தெளிவுடன் வாசிக்கும் நண்பர்களுக்கும், கூடியிருந்து மரி யாதையுடன் கேட்கும் பிரியர்களுக்கும், இதற்காகப் பொருட்செலவு செய்கின்ற தீருமவான்களுக்கும் இதை அச்சிட்டு வெளிப்படுத்திய கனவானுகிய எம். எ. ஷாகுல்ஹமீது லெப்பையவர்களுக்கும், இதைக் காவியத்தில் நின்றும் வெகு பிரையாசை யெடுத்துச் செந்தமிழ் வசன

ரூபமாக எழுதிக்கோர்வை செய்த நெயினுன் முகம்மதுப் பாவலன் என்கின்ற அடியானுக்கும், எல்லா வல்லமையுமுள்ள அல்லாகுத் தஆலா எந்த நாளும் நல்லுதவிபுரிந்தருள்வானுக. ஆமீன். ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

## 12-ம் அத்தியாயம்

### அப்துர் றகுமான் ஏகாதிபத்தியம் பெற்றது.

அபாசுபியானை விட்டும் அப்துர் றகுமான் றலியல்லாகு அன்கு அவர்கள் திருமதிஞப்பட்டணம் வந்தபோது றசூலுல்லா அவர்கள் தங்கள் காரியஸ்தர்களில் ஒருவராக நியமனம் பண்ணிவாதில் சுகாரா முதலிய குடியேற்ற நாடுகளுக்கு மேல்விசாரணை கர்த்தராக அனுப்பியிருந்தார்கள். அப்பால் அவர்களின் தந்தையாகிய அபாபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்கு அவர்களின் துரைத்தனத்தில் அசூரியர் மெசேர்பெத்தலோமியா, கால்தேயா, முதலிய மாகாணங்களின்மீது சேனுதிபதியாக அனுப்பப்பட்டு அநேக ராஜியங்களை யெல்லாம் ஜெயித்துவந்து, முஸ்லிம்களின் அரிதான வந்தனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

அப்பால் உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்கு அவர்களின் துரைத்தனத்தில் பார்சியா தேசத்தின் பேரில் படை யெடுத்துப் போய் அநேகப் பட்டணங்களை யெல்லாஞ் ஜெயித்துக்கொண்டார்கள். அப்துற்றகுமான் அவர்கள் பாபிலோன் பட்டணத்தை ஜெயித்தது மகா ஒரு சாமர்த்தியமான விஷயம்.

எப்படி யென்ருல் 30,000 முப்பது ஆயிரம் துருப்புகளுடன் போய் பாபிலோன் கோட்டையை முற்றுகைபோட்டு 4 மாதக்காலமாக அனேக யுத்தங்கள் செய்தும் கோட்டை பிடிபடவில்லை. அதை அப்துர்றகுமான் கண்டு பட்டணத்துக்குள்ளே போய்க்கொண்டிருந்த தைபர் நதியை அரை பாகத்தில் மருகால் பிடித்து அடைத்து, அதிலுண்டான ஜலத்துக்கு ஒரு பொக்கான நதியைத் தோண்டி அதில் வழியவிட்டுக்கொண்டிருந்தார்கள். பாபிலோன் அரசனுகியஸர்மனுத்துஸர்தன் சத்துருவின் யூகத்தை அறியாதவனுக ஒரு கல்யாணத்தை

கோறி அதன் விஷயமாக பட்டணத்திலுள்ளவர்களுக்செல்லாம் பெரிய ஒரு விருந்து பண்ணிக்கொண்டிருந்தான். இருக்க அது இராவுகாலமாக இருந்தபடியாலே,

அப்துர் றகுமான் அவர்கள் தைபர் நதியில் தண்ணீர் முற்றும் வழிந்தது கண்டு இதுதான் சமயம் என்று (10,000) பதினாயிரம் சுத்த வீரர்களுடனே குதிரையை விட்டுக்கொண்டு ஆற்றில் இறங்கி சேற்றில் நடந்தவர்களாக பாலத்தின் இரும்பு வலை யைத் தண்டாயுதங்களால் தகர்த்துக்கொண்டு பாலத்தின் வழியே பட்டணத்தில் நுழைந்தார்கள். அறபிகள் வருகிற ஆரவாரத்தை அரசன் கண்டு ஜாக்கிரதை படுத்துவதற்குள்ளாக சபா ஆஸ்தான மண்டபத்தில் வீற்றிருந்து விருந்தருந்துகிற படைத்தலைவர் முதலா னவர்கள் முகங்களுக்கு முன்னே இருக்கிற முந்திரிகைச் சாராயங் களோடே அவர்களின் இரத்தங்களும் கலக்கும்படியாக வெட்டுண்டு துண்டங்கண்டங்களாகக் கிடந்தார்கள். அரசனும் வெட்டுண்ட நிர் பாக்கியர்களில் ஒருவனானான்.

இவ்வித யூகத்துடன் அப்துர் றகுமான் அவர்கள் பாபிலோனைப் பிடித்தார்கள். இது முதற்கொண்டு உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களின் துரைத்தனம் வரையிலும் அவர்கள் கருமம் நிரம்பவும் மேலாயிற்று.

செய்யிதத்துப்படைப்போர் வசன காவியம்

பூரணமாயிற்று.

புதிதாய் வெளிவந்த புத்தகம்

# ஸீறத்துல் பாறூக்

இந்தப் புத்தகமாகிறது நமது நாயகம் மகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய இரண்டாவது கலீபாவாகிய உமறிபுனுல் கத்தாபீ றலியல்லாகு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய வம்சவழியும், பிறப்பு வளர்ப்புகளும், அவர்களுடைய கீர்த்திகளும், வீரியங்களும், யூகசாமர்த்தியங்களும், நீனில் வழுவாது நடக்கும் நீதிகளும், அவர்களுடைய ராஜாங்கத்தில் அருமையாய் செய்யப்பட்ட கணக்கில்லாத சண்டைகளும், நீதிகளும் அடங்கி இருக்கின்றது.

ஆனால் அவர்களுடைய சரித்திராலங்காரங்களையும் சாமர்த்தியங்களையும் நாம் இதில் விரித்துக் கூறவேண்டியது அவசியமில்லை. ஏனென்றால் எல்லா ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலன்பட்டதாகவே யிருக்கின்றது.

இச்சரித்திரத்தை வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் கொடுப்பதோடு நீனில் வழுவாது நடக்கும் தன்மையும் ஏற்படு மென்பதில் ஐயமில்லை.

இது இரண்டு பாகமாக முடியப்பெற்றிருக்கிறது. இதன் கிரயம்:

முதல் பாகம் கிளேஸ் கடிதம் கலிக்கோ பைண்ட் ரூ. 1-8-0.
இரண்டாம் பாகம் ரூ. 2-0-0.

போஸ்ட் சார்ஜ் பிரத்தியேகம்.

பெற்றுக்கொள்ளுமிடம்:

மோ. அ. ஷாஹுல் ஹமீது கம்பெனி
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்
நெ. 93, பள்ளப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, மதறாஸ்